ஸ்ரீராமஜெயம்

இலக்ஷிய வீரன்

அனுமான்

(REVISED)

தொகுத்தவர்
குமாரி ந. சு. இராஜம் பி.ஏ.,

வெளியிடுவோர்
யூனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்
பத்தரையன் தெரு, மதராஸ்-1.

விலை: ரூ. 1/-

ஸ்ரீராமஜெயம்

இலக்ஷிய வீரன்

அனுமான்

தொகுத்தவர்
குமாரி ந. சு. இராஜம் பி.ஏ.

வெளியிடுவோர்
யூனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்
பத்தரையன் தெரு, மதராஸ்-1.
1954

விலை: ரூ. 1/-

முதற்பதிப்பு, நவம்பர்—1952
Revised Edition
Reprinted—1954.

Sri Rama & Co.,
Printers,
39, Anderson St
Madras-1.
★

முகவுரை

அஞ்சிலே யொன்று பெற்ருன் ;
அஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்ரு ருக
ஆரியர்க் காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற
வணங்கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தா
னவனம்மை யளித்துக் காப்பான்

கம்பர்.

'தன் பெருங் குணத்தால் தன்னில் தானலது ஒப்பிலாதான்' என்று ஆன்ருேரால் போற்றப் பெற்றவனும், தென்னிந்தியாவில் தோன்றிய வீரர்களுள் தலைசிறந்தவனும், உலகமுள்ளளவும் அழியாத பெரும்புகழ் படைத்தவனுமான அனுமானின் வரலாற்றைத் தமிழ்ப் பெருங்கவிஞரான கம்பரின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தமிழ்நாட்டு இளைஞரின்முன் இந்நூலைச் சமர்ப்பிக்கின்ருேம்.

இச்சிறிய புத்தகத்தை எழுதுவதற்குத் தூண்டுகோலாக இருந்தது நம் தலைவர் உயர்திருவாளர் சக்ர

வர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் 9-9-52 அன்று சென்னை. பச்சையப்பன் கல்லூரியில் நிகழ்த்திய ஒரு பேருரையேயாகும். அவ்வுரையில் அவர்கள் பின் வரும் பொருளமையப் பேசினார்கள்.

"உங்கள் மனத்தில் ஏதேனும் ஒரு கொள்கையைக் கொள்வீர்களானால் அஃது உங்கட்குப் பேருதவி புரியும். உங்களுக்கென ஒரு கொள்கை கிடைக்கப் பெறுவிடின், ஏதேனும் ஒரு தெய்வீக உருவை நீங்கள் உங்கள் மனதில் இருத்திக் கொள்ளலாம். இராமாயணத்தைப் படியுங்கள்; அனுமானை மனத்திற் கொள்ளுங்கள்.

(நகைப்பு)

"உங்கள் நகைப்பால் அனுமானிடம் அமைந்த பண்புகளை நீங்கள் நன்கு அறிந்து கொள்ளவில்லை யென்று எண்ணுகிறேன். அனுமான் என்னும் பெயர் நகைப்புக்குரியதன்று. சான்றோர்கள் அவனுடையவாலை மறந்துவிடுகிறார்கள்; (அது கவிஞனுடைய அழகிய கற்பனையேயாகும்.) அனுமான் தொண்டின் குறிக்கோள்; நன்றியுடைமை, பக்தியுடைமை, பொருள்களை உள்ள படி அறியும் ஆற்றல், உண்மையான மதிப்பிடும் வன்மை போன்ற வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா நற்குணங்களின் உருவம் அவன்; அனுமனின் படத்தை உங்கள் மனத்தில் பதிய வைப்பது நன்மையே பயக்கும். அனுமானை உங்கள் மனத்தில் கொள்வீர்களானால்

நீங்கள் தவறியும் குற்றம் செய்யமாட்டீர்கள். அவன் மட்டும் உங்கள் மனத்தில் திடமாக நிற்பானுனால், எவ்வளவு அழகான பெண்களிடையே நீங்கள் நிற்க நேர்ந்தாலும் தப்பெண்ணம் கொள்ளமாட்டீர்கள் அதற்காகவே கவிஞர் அவனை ஓர் இலக்ஷிய பிரம்மசாரி யாக அமைத்தார். அதனுல் தான் நான் அவனைப் பற்றி உங்களிடம் பேசுகிறேன். மூல நூலில் சீதைக்கும அனுமானுக்கும் இடையே நடந்த பேச்சினை நீங்கள படிப்பீர்களாஞல் நான் சொல்வதன் உண்மை உஙக ளுக்கு விளங்கும். அவன் ஒழுக்கத்தின் நேர்மையும் அவன் பிரவேச முறையும், அங்கு நிகழும் நிகழ்ச்சி களும் அவன் தன்னைப் புலப்படுத்திக்கொண்ட வழிகளும் ஒப்புயர்வற்றவை. அவற்றைப் போன்று பிறிதொரு விளக்கத்தை நாம் வேறெங்கும் காண வியலாது.

" ஓர் இலக்ஷ்யத்தை நீங்கள் தியானிக்கும் விக்கிரக மாக உங்கள் ஹிருதயங்களில் இருத்திக்கொண்டு உங்கள் ஆத்மீக, மன வளர்ச்சிகளை நாடுங்கள்."

இதுவே நம் ஆச்சாரியார் அவர்கள் மாணவர் உலகத்திற்குக் கொடுத்த அறிவுரை; இது அப் பெரியார் அவர்களுக்குமுன் நிறுத்திய குறிக்கோள். இக் குறிக்கோள் மாணவர்கள் முன்னே இன்னும் விளக்க மாக அமைய எடுத்துக்கொண்ட சிறிய முயற்சியே இச் சிறிய புத்தகம்,

அனுமான் ஆடவர் திலகன்; கம்பன் அவனைத் தமிழுலகுக்கு அறிமுகப்படுத்திய கவி வள்ளல். அவனுடைய அடிச்சுவட்டையே இங்குப் பின் பற்றியிருக்கிறோம். அனுமனுடன் தொடர்பு படாத இராமயணக் கதை இங்கு எடுத்துக்கொள்ளப் பெறவில்லை. கடைசித் தலைப்பு வியாச பாரதத்தைப் பின்பற்றியது.

அனுமான் சிரஞ்சீவி. அவன் இவ்விருபதாம் நூற்றாண்டிலும் மாணவர்களுக்கு இலக்ஷிய புருஷனாக விளங்குக.

அறம் வெல்க

ஜேய் ஹிந்த்

12-10-52. ஆசிரியர்.

பொருளடக்கம்

அனுமான்

1. அஞ்சனை சிறுவன்

'இருடி மூலம், நதி மூலம் ஆராயலாகாது' என்பார். ஏனெனில், உலகத்தில் பெரிய ஆறுகள் பலவும், முனிவர் பலரும் மிக எளியவிடங்களில் தோன்றியுள்ளமையை நாம் காண்கிறோம். இவ்வுண்மையை ஒட்டியே, நம் வரலாற்று வீரனான அனுமான் வாயு பகவானருளால் அஞ்சனை என்ற வானர மாதிற்கு மகனாகப் பிறந்தான். அவன் இளமையைப் பற்றி நாம் அறிவன மிகச் சிலவே.

ஒரு நாள் புதல்வன் தன் தாயை நோக்கி, 'எனக்குரிய இரை யாது?' என வினவ, அஞ்சனை அவனை அன்புடன் அணைத்து, 'மகனே, இச் சோலைகளிற் காணும் கனிகள் யாவும் நம்முடையனவே; அவற்றுள் உனக்கு வேண்டுவனவற்றை நீ எடுத்துக்கொள்ளலாம்' என்று பகர்ந்தனள். அன்று முதல் மாருதி மலைச் சாரலில் எங்கும் அலைந்து தனக்குகந்த இனிய பழங்களைப் பறித்துத் தின்று வரலானான். ஒரு நாள் கீழைத் திசை வானத்திலே கதிரவன் தகதகவென்று மின்னிக் கொண்டு உதித்து எழுவதை இளஞ் சிறுவன் கண்டு, 'இதுவும் ஒரு கனியே' என்று கருதி அதனைப் பறிக்க ஒரே பாய்ச்சலாய் எழுந்தனன்.

அவன் சென்ற வேகத்தால் அருகிலிருந்த சோலைகள் யாவும் சுழன்றன ; மலைமுடிகள் கழன்றன ; வாயுதேவனும் தன் தனயன் வேகத்தைக் கண்டு பின்னிடைந்தான் ; திருமாலின் ஊர்தியான கருடனும் கதி கலங்கினான் ; வானவரும் தானவரும் வியந்தனர்.

இவ்வாறு வானத்திலெழுந்த மாருதி தன்னை நோக்கி வருவதைக் கண்ட பரிதி அஞ்சானாய், இளைஞனின் திருவிளையாடலை முற்றிலும் காணக் கருதி அவன் மீது கொடுமையான கிரணங்களை வீசாமல் வெண்ணிலாவைப் போலத் தண்ணளி பொழியலானான். ஆனால், கதிரவனைப் பற்றுவது தன் தனி உரிமையே யென்று கருதி நின்ற இராகுவென்ற கோள் மாருதியைக் கண்டு சினமும் அச்சமும் கொண்டு விண்ணவர் வேந்தனிடம் வேகமாக ஓடி, "மன்னவ! கதிர் மண்டிலத்தை விழுங்கும் உரிமை எனக்கும் கேதுவுக்குமே நீ இட்டிருக்க, இன்று மற்றொருவனை அங்கு வரவிடுவது நீதியோ?" என்று முறையிட்டனன். அதனைக் கேட்ட தேவர்கோன் உண்மையையறியாமல் மயங்கி இராகுவை நோக்கி, "நீ சென்று கதிரவனைப் பற்றுவாய்; யான் உன் பின்னே வருவேன்" என்று கூறி இராகுவை முன்னே விட்டுத் தான் ஐராவதத்தின் மீதேறிப் பின்னே சென்றனன்.

இராகுவைக் கண்ட மாருதி தான் கதிரவன் மீது செல்வதை விட்டு அவன் மீது பாய, அவன் அஞ்சி இந்திரனிடம் ஓடி அடைக்கலம் புகுந்தனன். இந்திரனுக்கு அப்பொழுது உண்டாகிய வெருளிக்கு அளவேயில்லை. அவன் தன் ஐராவதத்தை மாருதியின்மீது முடுகிச் செலுத்த, அவ்விளைஞன் சிறிதும் பின்னிடாமல்

ஐராவதமும் ஒரு கனியெனக் கருதி அதன்மீது பாய்ந்தான். அதனைக் கண்டு ஆயிரங்கண்ணோன் வெகுண்டு தன் கையிலிருந்த கொடிய குலிசப்படையை மாருதியின் மீது வீச, அதுபட்டு அவ்விளைஞன் தன் நினைப்பினை மறந்து மண்ணில் வீழ்ந்தான்.

இவற்றையெல்லாம் எட்ட நின்று பார்த்துக்கொண்டிருந்த இளைஞனின் தந்தையான வாயுதேவன், 'இப்படியும் என் இறைவன் செய்வனோ? என்று வருந்தி, 'இதற்கோர் வழி செய்வேன்' என்றெண்ணித் தன் தனயனைத் தூக்கிக்கொண்டு ஒருவரும் புகக்கூடாத ஒரு மலை முழையிற் சென்று மறைந்துகொண்டான்,

வாயு ஒளிந்துகொள்ளவே மூவுலகிலுமிருந்த உயிர்கள் யாவும் மூச்சுவிடக் கூடாதபடி தவிக்கலாயின. ஒருநொடியில் எல்லா உலகங்களிலும் தொழில்களெல்லாம் நின்றன. மக்கள் யாவரும் அசையக்கூட முடியாது விறகு கட்டைகள் போலாயினர்; தேவர்கள் உடலெல்லாம் வெடித்துப் போகப் பருத்து நடக்கவும் ஆற்றலற்று நின்றனர்; நாகர்களெல்லோரும் காற்றெடுக்கப் பெற்ற நீண்ட பைகள்போல் துவண்டனர். படைப்புக் கடவுளாகிய நான்முகன் இவற்றையெல்லாம் உணர்ந்து மனங்கவன்று தேவர்களெல்லோரையும் தன் பின்னே வரச் செய்து தான் முன்னே நடந்து பலவிடங்களிலும் நாடி முடிவில் காற்றினுக் கரசைக் கண்டான், அங்குத் தன் மகவை மடியில் வைத்து அழுதுகொண்டிருந்த வாயுவைப் பிரமன் தேற்றி அம்மகவைத் தன் கைகளிலெடுத்து அதனுடலைத் தடவிக் கொடுக்க, அது தூங்கி விழித்ததுபோல எழுந்து உட்கார்ந்தது.

வாடிய பயிர் மழைத் துளியைப் பெற்றவுடன் தளிர்ப்பதுபோல், மூர்ச்சையுற்ற மைந்தன் மலரவனின் கைபட்டவுடன் உயிர்த்தெழுந்ததைக் கண்ட பவனன் மனம் மகிழ்ந்து முன்போல் வெளியே வந்து எங்கும் உலாவலானன். அனைவரும் மூச்சு விட்டுப் பிழைக்கலாயினர். அங்குக் கூடியிருந்த தேவர்களனைவரும் காற்றில்லாமையாற் பட்ட துன்பத்தினின்று நீங்கி மகிழ்ச்சியடைந்து மாருதியைச் சூழ்ந்து நின்று அவன் வலிமையைப் புகழலாயினர்.

இந்திரன் அச்சிசுவை நோக்கி, "என் படை உனக்கு எக்காலத்தும் யாதோரூறும் செய்யாதொழிக. நீ கீழே விழுந்த அதிர்ச்சியால் உன் கன்னம் வற்றி நீண்டுவிட்டதே! இனி நீ அனுமான் என்று பெயர் பெறுவாயாக" என்றனன். உலகவிருளைக் கடிந்தோட்டும் புவனதீபன் அக்குழந்தையை நோக்கி, "அன்ப! நீ என்மீது பாய்ந்து வரும்போதே நான் உன் ஆற்றலை அளந்தேன்; உன்னை விஞ்சக்கூடிய வலியார் உலகில் ஒருவருமிலராகுக. என் ஒளியில் சதகூற்றில் ஒரு கூறு நீ பெறுவாயாக. உனக்கு எல்லா அறிவுகளும் நிரம்புவதாகுக" என்று கூறினன். வருணன, இயமன், குபேரன், உருத்திரன், பிரமன் முதலியோரும் தத்தம் படைகள் அனுமனை ஊறுபடுத்தா என்றியம்பினர். இவ்வாறு அங்குக் கூடியிருந்த அமரர் அனைவரும் அனுமனை வாழ்த்திப் பல வரன்களை ஈந்து விடைகொண்டனர். அனுமனும் தன் அன்னையின் இடத்தை யடைந்தான்.

எனினும், இளைய வீரன் தன் செருக்கின் மிகுதியாலும் தேவர்களிடம் பெற்ற வரன்களின் மிகுதி

யாலும் அடக்கமிழந்து தன் பிள்ளைக் குறும்புகளிற் சிறிதும் குறையாமல் திரிந்து வரலாயினன். அவன் முனிவரென்றும் பெரியோரென்றும் கருதாமல் எவரையும் இகழ்ந்து அவர்களுக்கு ஊறு விளைக்கத் தொடங்கினான்.

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்த லரிது

என்ற மறைமொழியின் உண்மையை அவன் அறிந்திலன். அவன் மலரோன் முதலியோர் உதவிய வரச் செருக்கால், 'நல்லது இன்னது, தீயது இன்னது' என்றறியாமல் முனிவர் குடில்களெல்லாம் புகுந்து ஆங்கிருந்த தயிர், பால், நெய் ஆகியவற்றைக் குடித்தும், அவர்களின் மரவுரி, கருக்கை, சுருவம் முதலியவற்றையெல்லாம் வாரி வீசியும் அவர்களுக்கு இன்னல் விளைக்கலானான். அவற்றைக் கண்ட முனிவர்கள், "இவ் வனுமான் தன் வலியைத் தான் உணரான் ஆகுக; எவரேனும் நினைப்பூட்டினாலன்றி இவன் ஆற்றல் இவனுக்குப் புலப்படாதாகுக" என்று சாபமிட்டனர்.

அன்றுமுதல் அனுமான் தன் மிடுக்கொழிந்து அடங்கிப் பெரியோர்களிடம் மிகுந்த மரியாதையுடன் நடந்துவரலானான். அவர்களும் அவனிடம் அன்பு கூர்ந்து தாம் கற்ற கல்விகளையெல்லாம் அவனுக்குப் புகட்டலாயினர். அனுமானும் முனிவர்களிடம் கற்க வேண்டியவற்றையெல்லாம் கற்று, சூரிய பகவானிடம் சென்று வேதம், வேதாந்தம், இந்திர வியாகரணம் என்ற இலக்கணம் ஆகிய பல கலைகளையும் கற்றுச் சகலகலாபண்டிதனானான். அவனிடம் தூய்மை, வீரம்

கருணை, ஆள்வினை, மதி நுட்பம், நினைத்தது முடிக்கும் ஆற்றல் முதலிய பல நற்குணங்கள் படிந்தன. அவன் தன் வலிமைக்கு எவரும் ஈடில்லையென்று உலகம் கூறுமாறு விளங்கினான். 'மண்ணுலகில், விண்ணுலகில் மாருதியை யொக்குமவர் யாருமில்லையால்' என்று உலகம் அவனைப் போற்றலாயிற்று. அறம் அவனால் வாழப் போவதை உன்னி அது களித்தது.



2. நுண்ணறிவும் ஆராய்ச்சித் திறனும்

இவ்வாறு அனுமன் வளர்ந்துவந்த காலத்தில் தக்கிணத்தில் கிஷ்கிந்தை என்ற மலையும் காடும் செறிந்த நாட்டில் வாலி, சுக்கிரீவன் என்ற இருவானர சகோதரர்கள் அரசுபுரிந்து வந்தனர். ஒருபொழுது அவ்விருவர்களுக்குள்ளே பிணக்குண்டாக வாலி சுக்கிரீவனை நாட்டை விட்டோட்டி விட்டான். அதனால் இளையன் அண்ணனுக்கு அஞ்சி இரிசியமூகம் என்ற ஒரு குன்றில் மதங்கவனம் என்ற சோலையில் ஒளிந்து கொண்டிருந்தான். அவனுடைய பண்புகளைக் கண்டு மகிழ்ச்சி யுற்ற அனுமன் அவனையண்டி அவனுடன் நட்புக்கொண்டு வாழ்ந்து வரலானான். அவனோடு இன்னும் பலரும் கூடிக்கொண்டிருந்தனர். எனினும் சுக்கிரீவனுக்கு வாலியின்பாலிருந்த அச்சம் ஒரு சிறிதும் நீங்கவில்லை.

இவ்வாறிருந்த போது, வடக்கே அயோத்தி என்ற நகரிலிருந்து கோசலநாட்டை ஆண்டு வந்த தசரத சக்கரவர்த்தியின் திருக்குமாரனான இராமன் தன் மனைவி சீதாபிராட்டியுடனும் இளவல் இலக்குமணனுடன் தக்கிணத்திற்கு வந்து கோதாவரிக் கரையில் பஞ்சவடி என்ற இடத்தில் தங்கியிருந்த போது, சீதாபிராட்டியை இராவணன் என்ற இலங்கைமன்னன் தூக்கிச் சென்றனன். இராமன் ஆண்களுள் சிறந்தவன். ஆடவர் பெறக்கூடிய எல்லா ஆற்றல்களும் பண்பாடுக

ளும் அவனிடம் நிறைந்திருந்தன. எக்காலத்தும் இராமனைப் போல் ஒரு மகனைப் புவிமாது பெற்ற வளல்லள் என்று அறிஞர் கூறுவர். அவனு டைய வாழ்க்கைத் துணைவியான சீதாப்பிராட்டியும் மகளிர்க்குரிய எல்லாக் குணநலன்களையும் பெற்று விளங்கி வந்தாள். அத்தகைய மனைவியை இழந்த இராமன் மிகுந்த கவலையுற்றுத் தன் தம்பி இலக்குவ னோடு காடுகளையும் குன்றுகளையும் கடந்து சுக்கிரீவன் தங்கியிருந்த வனத்தை நோக்கி வந்துகொண்டிருந்தனன்.

சேய்மையில் வந்துகொண்டிருந்த இரு வீரர்களையும் ஒரு மலைச் சிகரத்தின் மீதிருந்த சுக்கிரீவன் கண்டு, "இவர்கள் என் பகைவன் வாலியின் ஆட்களே" என்றெண்ணி அஞ்சி ஒரு முழையினுள் புகுந்து ஒளிந்துகொண்டனன். அவனைச் சூழ்ந்து நின்ற அனை வரும் அவனைப் போலவே அஞ்சிப் பல விடங்களிலும் சிதறி ஓடி மறைந்தனர். அனால், மாருதி ஒருவனே ஓடாமல் தான் நின்ற விடத்தில் நின்றுகொண்டே வந்துகொண்டிருந்தவரைக் கூர்ந்து ஆராயலாயினன். அவர்கள் பகைவரல்லரென்றும், தான் நாடி அடைதற் குரிய இரு பெரியார்களென்றும், அவன் தன் மதி நுட்பத்தால் உணர்ந்து, சுக்கிரீவனிடம் சென்று, அவனைத் தேற்றித் தான் போய் உண்மையை அறிந்து வருவதாகக் கூறி வெளியேறினன்.

வெளியேறிய அனுமான் அவ்வீரர்கள் வரும் வழி யில் ஒரு மறைவிடத்தில் நின்றுகொண்டு ஆராய லாயினன். "இவர்கள் முகங்களில் வெகுளியும் அவல மும் மாறி மாறிப் புலப்படுகின்றன; இவர்கள் தவ

வேடம் கொண்டிருந்தும் கைகளிற் சிலைகளை ஏந்தியுள்ளனர். இவர்களின் முகப் பொலிவையும், கம்பீரத் தோற்றத்தையும் காணின் தேவர்களுக்கெல்லாம் தலைமை பூண்ட முதற்றேவரோ என்று சொல்லத் தோன்றுகிறது; ஆனால் அவர்கள் மூவர்; இவர்களோ இருவர்; இவர்கள் கைகளிலுள்ள விற்களுக்கு எதிராக நிற்பவர் மூவுலகிலும் உளரோ? இவர்களுடைய பெருமை என்னால் அளவிடற்கரியது" என்று வியந்தான்.

பிறகு அவன் அவர்களை இன்னும் சற்றுக் கூர்ந்து கவனித்து, "இவர்கள் தேவர்களல்லர்; மானிடரே; இவர்களுக்குத் துன்பம் விளைக்கக் கூடியவர் இவ்வுலகில் எவருமிரார்; எனினும் இவர்களின் முகத்தில் வருத்தம் தேங்கிக் கிடக்கிறது; ஏதோ தம் சிந்தனைக்குரிய ஒரு பொருளை நாடியலைபவர் போலக் காண்கின்றனர். தருமமும் தகவும் மிகுதியும் நிரம்பியவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர். ஆகவே, பேராசையின் வாய்ப்பட்டு இவர்கள் ஒன்றினை நாடுபவரல்லர். ஏதோ அருமருந்தனையதொன்றை இவர்கள் இழந்திருக்க வேண்டும்; அதனை ஆராய்ந்துகொண்டே இருபுறங்களையும் நெடுந்தூரம் நோக்கிக்கொண்டு நடந்துவருகின்றனர்.

"இவர்களுடன் என் இறைவன் நட்புச் செய்துகொள்வது நலம். இவர்களுடைய கண்களில் கருணை பொழிகின்றது. உண்மையையன்றிப் பிறிதொன்றை இவர்கள் கனவிலும் கருதுபவர்களாகக் காணவில்லை. இவர்களுடைய வீரத்துக்கும் எல்லை இல்லை" என்று அவன் கருதினான்.

பிறகு அவன், "ஏனே என் மனம் இவ்வாறு இவர்கள்பால் இழுப்புண்டு நிற்கின்றது? நெருப்பண்டை வைக்கப்பெற்ற வெண்ணெயாகவன்றே அஃது உருகுகின்றது! முன்பிறப்பில் இவர்களுடன் நெருங்கிப் பழகிவிட்ட குறையோ இது! என் அன்பு உருகுகின்றதே! இவர்களிடம் நான் இவ்வளவு சடுதியிற் பற்றுக் கொள்ளக் காரணம் என்ன? அன்பு என்பது இதுதானே? இதற்கு எல்லையில்லையோ?" என்று பரிதவித்தான்.

இவ்வாறு சற்று நேரம் மயங்கிப் பின் தான் வந்த காரியத்தை முடிக்கவெண்ணி மெதுவாக அவ்வீரர்கள் வந்துகொண்டிருந்த வழியில் ஓரோரத்தில் ஒதுங்கி நின்றுகொண்டு, அவர்களை நோக்கி, "ஐய, நுங்கள் வரவு மங்களமாக ஆகுக" என்றனன். இராமனும் அவனை நோக்கி, "அப்பனே! நீ எவ்விடத்தினை? நீ யாவன்?" என்றனன்.

அதற்கு அனுமன், "காரெனத் திகழும் மேனியாய்! செங்கமலமென அலர்ந்த கண்ண! யான் மாருதவேந்தனுக்கும் அஞ்சனா தேவிக்கும் புதல்வன்; அனுமன் என்னும் பெயரினன்; இம்மலையில் வாழும் சுக்கிரீவ மன்னனுக்கு ஏவல் செய்வேன்; நும் வரவு நோக்கி அவன் மகிழ்ந்து என்னை அனுப்பி நும்மை அழைத்துவரக் கட்டளையிட்டனன்" என்று கூறினான்.

அனுமான் கூறிய மொழிகளையும் அவன் முகப் பொலிவையும், ஆண்மையையும், பணிவையும் இராமன் கூர்ந்து நோக்கி. இலக்குமணனைப் பார்த்து, "இவனுடைய முகம் இவனுடைய ஆற்றலையும் நிறைவையும் கல்வியமைதியையும் புலப்படுத்துவதைக் காண்;

சொல்லின் செல்வனை இவனை எளியவன் என்று எண்ணற்க. இவன் பிரமனே சிவபிரானே என்று நான் ஐயுறுகிறேன். இவனுடைய பெருமை என்னை ஈர்க்கின்றது. இவனைப் போன்று சொற்றிறமுடையாரை நான் எங்கும் கண்டதில்லை" என்று கூறிப் பின்னும் அனுமனை நோக்கி, "அன்ப! நீ கூறிய மன்னன் எங்குளான்? அவனைக் காண விருப்புடையோம்" என்றனன்.

உடனே மாருதி, "மலைபோலுயர்ந்த தோள்களையுடைய நீவிர் எம் இறைவனைக் காண விரும்புவீர்களானால், அவனுடைய தவப் பெருமையை என்னவென்று கூறுவேன்! அவன் தன் அண்ணன் வாலி என்பவனால் துரத்தப்பட்டு இதோ காணும் இம்மலையிலே ஒடுங்கி வாழ்கின்றனன். தங்களைத் தூரத்திற் கண்டபோதே தன் துயரெல்லாம் தொலைந்தனவாக எண்ணி மகிச்சியுற்றான். தங்கள் நன்மை மிகுந்த வரவை நான் எவ்விதம் அவனிடம் சென்று புகல்வது என்று அன்புகூர்ந்து பணிக்க வேண்டுகிறேன்" என்று மிகுந்த பணிவுடன் கூறி வாய்புதைத்து நின்றான்.

அனுமன் அவ்வாறு கேட்கவும் இலக்குமணன் ஸ்ரீராமனின் வரலாறு முழுமையும் அவனுக்கு விளங்குமாறு சொல்லலுற்றான். "சூரிய குலத்தில் தோன்றி அயோத்தியில் ஆண்டுவந்தனன் தயரதன் என்னும் வீர வேந்தன் ஒருவன். அவனுடைய புதல்வனை இவ்வண்ணல் தன் தாயின் ஏவலால் தன் உரிமை யாவற்றையும் தம்பிக்குக் கொடுத்துவிட்டுக் காடடைந்தனன்; இவன் பெயர் இராமன் என்பது; நான் இவனுக்கு

ஏவல் செய்வேன், இவன் தன் பிராட்டியான சீதா தேவியோடு பஞ்சவடியில் தங்கியிருந்தபோது இலங்கை மன்னனான இராவணன் வஞ்சனையால் பிராட்டியைப் பிரித்து எடுத்துப்போயினன். அவள் சென்ற இடத்தை காடிக்கொண்டு நாங்கள் அலைகிறோம். வழியில் சபரி என்ற இருடி உன் மன்னன் இருக்குமிடத்தைக் கூறி அங்குச் செல்லுமாறு பணிக்க நாங்கள் இங்கே வந்தோம்." என்றனன். அச்சொற்களைக் கேட்ட அனுமன் மனமுருகிக் கண்களில் நீர் ஆறாகப்பெருக இராமன் திருவடிகளில் விழுந்தனன். அவனை இராமபிரான் தன் கைகளால் எடுத்துத் தேற்றிப் பின் தன் தம்பியை நோக்கி, "இலக்குமணா! இவனை நீ யாரென்று எண்ணுகின்றாய்? மறைகளுக்கும் ஞானத்துக்கும் எட்டாத பெரியோன் இவன்; இவனை நாம் பெற்றது நமக்கு நன்னிமித்தமே நம் துன்பங்களெல்லாம் தீர்ந்தன; நன்மையே எய்தினேம். இவனை ஏவல் பெற்ற அச் சுக்கிரீவன் யாது புண்ணியம் செய்தவனோ?" என்று கூறினான்.

அனுமன் அவர்களை நோக்கி, "பெரியீர்! எம் இறைவனை இங்கேயே அழைத்து வருகின்றேன்; இங்கேயே சற்றுநேரம் களைப்பாறுங்கள்" என்று கூறி விடை பெற்று அகன்றான்.

அகன்றவன் விரைவாகச் சுக்கிரீவனை அடைந்து தான் இராமபிரானைப் பற்றி அறிந்தவை யாவற்றையும் கூறி, "மன்னவ! இன்றோடு உன் பகைமை தீர்ந்தது! உலகமும் உய்ந்தது! வாலியின் காலனே இங்கு வந்துள்ளான் என்று கொள். அன்றியும், அவ்விருவரையும்

எளிய மானுடர் என்றெண்ணவேண்டா. அவர்கள் உலகமே உய்யப் பிறந்த உத்தமர். உன் நல்வினையே அவர்களை இங்குக் கொணர்ந்தது" என்று கூறினன். அறிஞனான சுக்கிரீவனும் அனுமன் கூறிய பொருண் மொழியைக் கேட்டு மனம் மகிழ்ந்து, "அன்ப, உன்னை உடைய எனக்கு அரியதெப்பொருள்! நான் அவர்களைக் காண இதோ எழுந்தேன்; முன்னே செல்க" என்று பணித்து அவன் முன்பு செல்லத் தான் பின்னே சென்றனன்.

சுக்கிரீவனும் இராமபிரானும் சந்தித்தனர். ஸ்ரீராமனைக் கண்ட சுக்கிரீவன் தான் பிறந்ததன் பயனைப் பெற்றுவிட்டதாகக் கருதினன். இராமனும் தனக்குயிர்த் துணைவனான ஒருவனைப் பெற்றதற்காக மன மகிழ்ந்தான். இரு பெரு வீரர்களும் ஒன்று கூடியதைக் கண்ட அனுமன் இவர்களின் சேர்க்கை, 'தவமும் முயற்சியும் ஒன்றுகூடியிருப்பதுபோலும், கல்வியும் ஞானமும் ஒருங்கு சேர்ந்தது போலும், இருப்பதாக எண்ணி ஆனந்தத்தில் அழ்ந்தான். சுக்கிரீவன் இராமனை நோக்கி, "ஐய, வலிமை சிறந்த வாலி என் உயிரை வாங்கக் காத்துக்கொண்டிருக்கிறன். அச்சத்தால் என் உயிர் இப்புறத்ததோ அப்புறத்ததோ என்று ஏங்கிக்கொண்டிருக்கும்போது என் நல்வினையே தங்களை இங்குக் கொண்டு வந்து சேர்த்தது; என்னைக் காக்க வேண்டுவது தங்கள் கடன்; நானும் என்னைச் சேர்ந்தாரும் தங்களுக்கு அடைக்கலம்" என்று பணிந்தான்.

சரணடைந்தவரைக் காப்பதே தன் பிறப்பின் கடமை என்று வாழும் இராமபிரான் சுக்கிரீவனை

நோக்கி, "நண்ப! நான் சொல்லவேண்டுவது ஒன்று மில்லை; உன் பகைவர் வானவரானாலும், பண்ணவரானாலும் என் பகைவரே! உனக்கு நண்பரானோர் தீயரானாலும் எனக்கும் நண்பரே! உன் கிளைஞர் என் கிளைஞர்; நீ என் இன்னுயிர்த் துணைவன்" என்றான்;

இச் சொற்களைக் கேட்ட சுக்கிரீவன் உணர்ச்சி மேலிட்டால் பேச மாட்டாமல், நாத்தழுதழுத்து, அனுமனை மார்போடணைத்து அவனை வாழ்த்தி, "உன்னாலன்றோ எனக்கிவ்வாழ்வு கிடைத்தது!" என்று முகமன் கூறி, இராமபிரானையும் இலக்குமணனையும் அழைத்துக்கொண்டு தன் இருப்பிடத்துக்குச் சென்றான்.

அங்கு வானரர்கள் அளித்த விருந்தை உண்டு இருவரும் இளைப்பாறியபின், அனுமான் இராமனிடத்தில் வாலியின் கொடுமைகளையும் சுக்கிரீவனின் மனைவியை அவன் அபகரித்து அவனையும் துரத்தினமையையும் விளக்கமாகக் கூறினான். ஒருவன் தன் தம்பியின் மனைவியை வௌவினான் என்று கேட்டதும் அறமூர்த்தியான இராமனுக்குண்டான சினத்துக்கு அளவேயில்லை, "ஏழேழு உலகங்களும் ஒருங்கு கூடி வாலிக்குதவ வந்தாலும், என் வில்லிற் பூட்டிய வாளியால் அவர்களனைவரையும் வீட்டி உன் தாரத்தை உனக்குத் தருவேன்" என்று அவன் வஞ்சினம் கூறினான்,

அவ் வீரமொழிகளைக் கேட்டுச் சுக்கிரீவன் மகிழ்ந்தானெனினும் வாலியின்பால் அவன் கொண்டிருந்த அச்சத்தால் அவன் மனம் இராமனின் வலிமையில் ஐயமுற்றது. அப்பொழுது மாருதி தன் மன்னனை விளித்து, "அண்ணலே! நீ இராமபிரானை உள்ளபடி உணர்ந்தா

யில்லை; அவர் கைகளிலும் கால்களிலும் சக்கர ரேகைகள் இருப்பதை நீ காணவில்லை போலும்; இத்தகை இலக்கணம் உலகில் வேறு எவர்க்குமில்லை; இப் பூவுலகில் அறத்தை நிலைநிறுத்துவதற்காகத் தோன்றிய திருமாலே அவன். இதன் உண்மையை நான் அறிவேன்; அவனை நினைக்கும்போதே என் எலும்பு உருகுகின்றது. எனக்கு வேறெந்த அடையாளமும் வேண்டியதின்று. எனினும், உன் ஐயம் தீர்வதற்காக ஒரு யோசனை கூறுகின்றேன்; இதோ, நம்முன் நிற்கும் ஏழு மராமரங்களை ஓரம்பால் ஊடுருவும்படி இராமபிரானை வேண்டிக் கொள்வோம்; அதனை அவன் வெற்றிகரமாகச் செய்து முடிப்பனேல் அவன் வலிமையைக் குறித்து நாம் உறுதி கொள்ளலாம்" என்று கூறினன்.

சுக்கிரீவன் அவ்வாறே செய்ய இணங்கி, இராமனிடம் தன் கருத்தை வணக்கத்துடன் விண்ணப்பிக்க, அவன் புன்முறுவல் செய்து தன் வில்லை வளைத்து நாணேற்றி ஓர் அம்பினைத் தொடுத்து அம்மரங்களை நோக்கி எய்தனன். எய்யவும், ஆதிசேடன் சிரம் வரையில் வேர்கள் படர்ந்தனவும், வானத்தைத் தம் உயரத்தால் தொட்டனவும், திக்குக்களெல்லாம் தம் கிளைகளால் வளைத்தனவும், ஒன்றற்கொன்று ஒவ்வாயல் வளைந்து வளைந்து வளர்ந்தனவுமான அவ் வேழு மரங்களும் இடியேறுண்ட மலை முடிகள்போல் தகர்ந்து வீழ்ந்தன. இராமன் விடுத்த அம்பானது அம் மரங்களை ஊடுருவி வீழ்த்திவிட்டு, ஏழு திசைகளையும் துளைத்துக் கொண்டு, இன்னும் துளைப்பதற்கு வேறு ஏழில்லாமையால் அவனுடைய அம்பறாத் தூணியை அடைந்தது. அச் செயலைக் கண்டு வியந்த கவியரசன் இராமனை

நோக்கி, "என் புன்செயலை மன்னிக்கவேண்டும். நும் பெருமையை அறிந்தேன். இனி எனக்குக் கவலையில்லை" என்றனன்.

பின்பு அவன் தான் சில நாட்களுக்குமுன் மலையின் பல விடங்களிலும் கண்டெடுத்த சில அணிகலன்களை யெடுத்து இராமன் முன் கொண்டுவந்து வைத்தான்; அவை இராவணனால் தூக்கிச் செல்லப்பட்ட சீதா பிராட்டி தன் உடலிலிருந்து கழற்றி எறிந்தவை. அவற்றைக் கண்டவுடன் இராமபிரான் அடைந்த துன்பத்திற்கு எல்லை யில்லை. அப்பொழுது அனுமனும் மிகவும் கவன்று, "ஐய, தங்கட்கு இவ்வளவு துயரம் உண்டாகு மென நாங்கள் கருதவே யில்லை; எனினும் தாங்கள் சிறிதும் கவலையடையவேண்டா. நும் உயிர்த்தேவி அயலுலகத்திற்கப்பாலிருப்பினும் அவரிருக்கு மிடத்தை நாடித் தங்களுக்கு அறிவிப்பது என் பொறுப்பு; இதனிற் சிறிதும் தாங்கள் ஐயுறவேண்டா. அவ்விராவணன் இருபது புயங்களும் பத்துத் தலைகளும் தங்கள் கையம்புக்கு முன் ஒரு நொடி நிற்க மாட்டுமோ? வீரரான இலக்குமணரும் மகாத்மாவான எங்கள் மன்னரும் அருகிலிருக்க நாயேங்களாகிய எழுபது கோடி வெள்ளம் சேனைகளும் காத்திருக்கத் தாங்கள் துன்புறுவது தகுமோ? இப்பொழுது அடியேனுக்கு விடையருளுங்கள், என் ஆற்றலை இங்கேயே காட்டுகின்றேன்" என்று பணிந்தான்.

காற்றின் சிறுவன் இவ்வாறு பேச, இராமபிரான் மனந்தேறி, 'வாலியை முடித்து உன் மன்னனுக்கு முடி சூட்டி மேல் ஆவதை ஆராய்வோம்' என்று கூறினன்.

பின்பு வாலியை வதைத்தற்குரிய வழிகள் ஆலோசிக்கப்பட்டன. சுக்கிரீவனை வாலியின்மீது போர்க்

கெழும்படி இராமன் தூண்டினன். அப்போரில் அவன் சுக்ரீவனுக்குத் துணையாய்நின்று, எவராலும் வெல்லற்கரிய வாலியின் உயிரை வாங்கினன். வாலிக்குரிய ஈமக் கடன்களையெல்லாம் செய்துமுடித்துச் சுக்ரீவன் பட்டமெய்திக் கிஷ்கிந்தைக்கு இறைவனானன். கார்காலம் குறுக்கிட்டமையால் இராமபிரானும் இலக்குமணனும் அம் மலைச்சாரலில் மதங்காச்சிரமத்திலேயே தங்கலாயினர். அனுமன் தானும் அவர்களோடு தங்கிப் பணிவிடை செய்துகொண்டிருக்க விரும்பியதை அறிந்து இராமன், "அனும! உன் அன்பினை அறிவேன்; எனினும் புதுமையாக அரசியற் பொறையைத் தாங்கவிருக்கும் உன் மன்னனுக்கு உன் துணை இன்றியமையாதது. நானே உன்னை அங்கு அனுப்புகிறேன்: போய் வருவாயாக" என்று ஏவினன். 'ஆணையின்படி நடப்பதே தன் கடமை' என்று நின்ற அனுமனும் அவ்வாறே சென்றனன்.

★



3. சிறப்புமிக்க தூதன்

கார்காலம் கழிந்தது. சுக்கிரீவன் தான் பெற்ற புதிய செல்வத்தில் மூழ்கி மதியிழந்து தான் இராமனுக்குக் கூறிய உறுதிமொழியை மறந்தான். அதனைக் கண்ட இராமன் வெகுள, இலக்குமணன் மிகுந்த கோபாவேசத்தோடு கிஷ்கிந்தையை நோக்கிச்சென்றான். அவனைக் கண்ட அனுமன் பெரிதும் அஞ்சித் தன் மன்னனுக்கும் இலக்குமணனுக்கும் சந்து செய்து வைத்து இராமனிடம் சுக்கிரீவனை அழைத்துச் சென்றான். சுக்கிரீவனுடன் சதவலி, சுசேடணன், தந்தகேசரி, இடும்பன், நீலன், ததிமுகன், அக்கன், சாம்பன், துன்முகன், துமிந்தன், குமுதன், பதுமுகன், இடபன் முதலிய படைத் தலைவர்களும் தத்தம் படைவீரர்களோடு சென்றனர். வாலியின் மகனும் கிட்கிந்தையின் இளவரசனுமான அங்கதன் பல்லாயிரங்கோடி வீரர்களுடன் நின்றான்.

அப் பெரிய படையைக் கண்ட இராமன் மன மகிழ்ந்தான். இலக்குமணன் அவர்களுடைய ஆற்றலைக் கண்டு, " இவர்கட்கு அரியது யாது? தேவியைத் தேடுவ தென்பது இவர்கட்கு எளியது: பாவம் தோற்றது; தருமமே வென்றது " என்று கூறிக் களித்தான். சுக்கிரீவன் அனுமனை நோக்கி, " வீர! நீ ஒருவனே இக் காரியத்தைச் செய்து முடிக்க வல்லவன். உன் தந்தை புகாவிடத்தும் நீ புகவல்லாய். இராவணன் பிராட்டியைத் தன் தலைநகரான இலங்கையிலேயே வைத்திருப்பா

னென்று எனக்குத் தோற்றுகிறது. அங்கதன், சாம்பன் முதலிய வீரர்களுடன் தெற்கு நோக்கி நீ செல்வாயாக. இரண்டு வெள்ளம் சேனைகளும் உன்னுடன் செல்லட்டும்" என்று கூறினன். பிறகு அவன் பிற தலைவர்களையும் அழைத்து அவரவர்கள் செல்ல வேண்டும் இடங்களைச் சுட்டிக் கட்டளையிட்டு அவர்களை நோக்கி, "நீவிர் ஒரு மாதத்திற்குள் தேவியின் இருப்பிடத்தை அறிந்து வரவேண்டும்; அச்செயல் அக்கால வெல்லையில் முடிவுறுவிடில் உங்களையேமுடித்துக்கொள்ளுங்கள்" என்று கூறினன்,

அனுமன் தான் செல்லவேண்டிய வழிகளையெல்லாம் ஆராய்ந்துகொண்டு நின்ற சமயத்தில் இராமன் அவனை அருகில் அழைத்துச் சீதையின் உருவ அடையாளங்களை அவன் மனத்தில் படியும்படி விளக்கிக்கூறி, அவளிடம் அடையாள மொழிகளாகக் கூறவேண்டிய பல இரகசியச் செய்திகளையும் சொல்லி, தன் கணையாழியையும் அவளிடம் கொடுக்கும் வண்ணம் சொல்லி ஆசி கூறியனுப்பினன்.

அனுமன் இராமபிரானையும் சுக்கிரீவமன்னனையும் வணங்கித் தன் நண்பர்களோடும் சேனைகளுடனும் தெற்கு நோக்கிப் புறப்பட்டான். அவர்கள் விந்தியம், நருமதை ஆறு, ஏமகூடம், முதலிய இடங்களிலெல்லாம் துருவி அலைந்து மிகக் கொடியதொரு பாலைவனத்தை யடைந்தனர். அதன் வெம்மையால் அவர்களுடைய ஐம்புலன்களும் ஒடுங்கின; உணர்வு அழிந்தது; உடல்கள் வேர்த்துப் புழுங்கின; கீழே கால்களை வைக்கவும் முடியாமல் அவர்கள் தத்தளித்தனர். அவர்கள் அவ்

வாறு துன்புற்றுச் செல்லும்போது அவர்களின்முன் தரையில் ஒரு பெரிய புழை காணப்பட்டது. அதனுள் புகுந்தாவது வெயிலின் கொடுமையினின்று தப்பலாம் என்று அவர்கள் எண்ணி அவ்வாறே செய்தனர். சிறிது தூரம் சென்றதும் அங்குள்ள இருளால் அப்பாற் செல்ல முடியாமல் அவர்கள் தயங்கினுர்கள்; ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கக்கூட முடியவில்லை, அவர்களை அச்சம் பிடித்துக்கொண்டது. அனுமன் மெதுவாக நடந்து அவர்கள் முன்னே சென்று அவர்களுக்கு ஊக்கமளித்தனன்.

இவ்வாறு அவர்கள் சிறிது தூரம் சென்றவுடன் அவர்களின் கண்முன் பொன்மயமான நகரமொன்று காணப்பட்டது. அங்குப் பல்லாயிரம் மரங்கள் கற்பகங் கள்போல் வானுற ஓங்கி வளர்ந்திருந்தன. குளங்களி லெல்லாம் கமலங்கள் பூத்து விளங்கின; கோபுரங்களும் மதில்களும் பொன்னுலாகியிருந்தன. இவ்வளவு பெருமையுற்றிருந்தும் அந்நகரில் மானிடர்நடமாட்டமே இல்லை. 'இஃதோர் சித்திர உலகமோ!' என்று அவர்கள் ஐயுற்றனர்; அல்லது 'இராவணன் நம்மைத் தடுக்க அமைத்த மாயமோ இது?' என்று ஏங்கினர். சற்றுத் தூரத்திற் சென்றபோது ஆங்கோர் அழகிய பெண் தவ நிலையில் நிற்பதை அவர்கள் கண்டு, 'இவள் சீதையோ?' என்று ஐயுற்றனர். அவள் சுயம்பிரபை என்ற ஒரு தேவ மாது; தேவேந்திரனுடைய சாபத்தால் அவள் அந்நகரத்துள் அடைக்கப்பட்டனள். இராமபிரானின் தூதுவர்களால் அவளுக்கு நற்காலம் பிறக்கும் என்று அவள் சாப வீடு பெற்றிருந்தாள். அவள் அனுமன் முதலியோரைக் கண்டு மனம் மகிழ்ந்து தன்னை அக்

குகையினின்று வெளியேற்றும்படி வேண்டினான். சாம்பன் முதலிய வீரர்களும் அவ்வாறே அவனை வேண்டினர். அனுமன் உடனே வானத்தை முட்டும் வண்ணம் பேருருவமெடுத்துக் கைகளை ஓச்சிக்கொண்டு ஆரவாரித்தான். அவனுடைய உருவத்தைத் தாங்கமாட்டாமல் குகை பிளந்தது. சுயம்பிரபை சாபம் விடுபட்டதை உணர்ந்து தன் இருப்பிடத்துக்குச் சென்றாள். வானரர்களும் மேலே நடக்கலுற்றனர். அன்றைப் பகலெல்லாம் வானரர்கள் நடந்து அந்திவேளையில் ஒரு பொய்கைக்கரையை யடைந்தனர். அங்கு அவர்கள் நீரருந்திக் கரையில் படுத்துறங்கும்போது அப் பொய்கைக்குரியனான அரக்கனொருவன் அங்குத் தோன்றி அவர்களைக் கண்டு வெகுண்டு உறங்கிக்கொண்டிருந்த அங்கதன் மார்பின்மீது ஒரு குத்துக் குத்த, வாலி மைந்தனான அங்கதன் எழுந்து அவனை ஓர் அறையில் வீழ்த்திக் கொன்றனன். அனுமான் முதலியோர் உறக்கத்தினின்று எழுந்தபின் நடந்ததையறிந்து அங்கதனைப் புகழ்ந்து அப்பாற் செல்லலாயினர்.

பெண்ணையாறு, தசாவ நாடு, விதர்ப்ப நாடு, தண்டகாரணியம், பாண்டுமலை, கோதாவரி, சுவணநதி, அருந்ததிமலை, மரகதமலை, திருவேங்கடம், தொண்டைநாடு, சோழநாடு, பாண்டியநாடு முதலிய இடங்களைக் கடந்து ஆங்காங்கே சீதையைத் தேடி மனஞ்சலித்தவராய்த் தென் கடற்கரையிலிருந்த மகேந்திரம் என்ற மலைச் சாரலை அடைந்தனர்.

★

4. சோர்வறியா மனம்

மகேந்திரமலைபாண்டிநாட்டின் தெற்கெல்லையாய்க் கடலை நோக்கிக் கம்பீரமாய் நின்றது. அதன் மீதேறி நின்ற வானரப்படை ஒரு நூறுயோசனை தூரம்அகன்று கிடந்த தென் கடலைக் கண்டது. நாட்டின் முடிவெல்லை வரை ஒரு திங்களாக அலைந்தும் பிராட்டியைக் காண முடியாத காரணத்தால் வீரர்களின் மனம் குலைந்தது. கவி மன்னன் இட்ட கால எல்லையும் இறுகலாயிற்று. இன்னது செய்வதென விளங்காமல் அவர்கள் அவல முற்று, நெடுநேரம் எண்ணிப் பிறகு தம்மைத் தாமே மடிவித்துக் கொள்வதென்று தீர்மானித்தனர். பிராட்டியைக் காணவில்லை என்று கூறிக்கொண்டு செல்வதை விட உயிரை விடுவதே சிறந்ததென்று அங்கதனும் சாம்பனும் கருதினார்கள். ஆனால், மாருதி மட்டும் அச் செயலுககு இணங்கவில்லை. அவன், 'நீங்கள் கூறுவதை என் மனம் ஒப்புகின்றதிலது. நாம் மூன்று லோகங்களுக்கும் சென்று நாடிவிட்டோமா? இன்னும் நாம் செல்லவேண்டிய இடங்கள் எத்தனையோ உளவே! கால வெல்லையைக் கடக்கின்றோமே என்பீரேல், காரியம் வெற்றியாகுமானல் நம் மன்னன் காலங் கடந்ததைக் கருதான். ஆதலால் இன்னும் நாடுதலே நலம்; அப்படியும் நாடி நாம் வெற்றியுறுமற் போவோமானல் சடாயுவைப் போல் நாம் மரணத்தையடைவது நலமாகும்" என்றனன்.

இச் சொற்களைச் சொல்லி முடித்தவுடன் மலையின் உச்சியிலிருந்து ஓர் உரு மலைபோல் உருண்டு வருவது போல் அவர்கள் முன் வந்து விழுந்தது. அவ் வுருவின் கண்களிலிருந்து நீர் ஆறாகப் பெருகிற்று அதனைக் கண்டதும் அங்கு நின்ற வானரர் எல்லோரும் அஞ்சி நடுங்கினர். அனுமான் மட்டும் அதன் முன் நின்று அதனை உற்று ஆராய்ந்து அதனை ஒரு கழுகெனவறிந்து இதன் முகக்குறிகளாலும் தொழில்களாலும் அது குற்றமற்றது என்றெண்ணினான்.

அதற்குள் அக்கழுகு உருவினன், "என் தம்பி சடாயுவைக் கொன்றவன் யாவன்?" என்று வினவினான். அதைக்கேட்டு அனுமான் 'உன் வரலாற்றை முன்னதாகக் கூறு. பிறகு நீ கேட்ட கேள்விக்கு விடை இறுப்பேன்' என்றனன். அதற்குக் கழுகு, "என் பெயர் சம்பாதி; நான் ஜடாயுவுக்குத் தமையன்; என் சிறகு ஒரு சாபத்தால் கரிந்துவிட்டது: நான் இம் மலை யுச்சியில் வாழ்கின்றேன். என் தம்பி இறந்தானென்று நீங்கள் கூறியதைக் கேட்டு உண்மையறிய வந்தேன்" என்று கண்ணீரைச் சிந்திக்கொண்டே கூறினான். அச் சொற்களைக் கேட்ட அனுமான் ஜடாயு இராவணனோடுபோர் புரிந்து இறந்த வரலாற்றைக் கூறச் சம்பாதி மிகுந்த துயருற்று, "என் தம்பி சிறந்த மரணத்தை அடைந்தான். அன்ப! நீ இராம கைங்கரியத்தில் உயிரைத் துறந்தாய்! இப்பேறு யார்க்கு வாய்க்கும்?" என்று கூறி தன்னை ஒருவாறு தேற்றிக்கொண்டு அனுமனை நோக்கி, "ஐயா! என் நற்காலமே உங்களை இங்குக் கொண்டுவந்து உய்த்தது. சூரிய வெப்பத்தால் என் சிறகுகள் கரிந்த போது, " இராம நாமத்தைக் கேட்டு நீ இழந்த சிறகை

மீளவும் பெருவாய்" எனக்குச் சாபவிடை கொடுக்கப் பட்டிருந்தது. என்னிடம் அன்புகூர்ந்து அத் தாரக மந்திரத்தைச் சற்றுநேரம் ஓதுங்கள்" என்று விண்ணப் பித்தான். அச் சொற்களைக் கேட்டு அனுமனும் பிறரும் இராமநாமத்தைப் பலமுறை ஓதச் சம்பாதியின் சிறகு கள் வானளாவி வளர்ந்தன.

பிறகு சம்பாதி வானரர்கள் அங்கு வந்த காரணத் தைக் கேட்டறிந்து, "ஐயன்மீர்! கொடிய இராவணன் பிராட்டியைத் தூக்கிச்சென்றதை நான்என் கண்களாற் கண்டேன். அவன் அவளை இப்பொழுது இலங்கையிற் சிறையில் வைத்துள்ளான். இராவணன் மிகக் கொடிய வன்; அவன் நகரம் கடுமையான காவலை யுடையது. மூத்தேவர்களாலும் அதனுள் புகவியலாது. ஆதலால் உங்களுள் மிகச் சாமர்த்தியசாலியான ஒருவர் வஞ்சக மாக அங்குச்சென்று பிராட்டியைக்கண்டு திரும்பிவருக" எனச் சொல்லி விடை பெற்றுச் சென்றான்.

பிராட்டி இருக்குமிடத்தை அறிந்தமகிழ்ச்சியைப்பெற் றாராயினும் வானரத் தலைவர்கள் கடலை எவ்வாறுகடப் பதென்று தயங்கினார்கள். ஒருவருக்கும் துணிவு பிறக்க வில்லை. நீலன், அங்கதன், சாம்பன் ஆகியோர் தம்மா லாகாதென்று மறுத்துவிட்டனர். ஆனால் பிரமனின் புதல்வனான சாம்பன் கூர்ந்த அறிவினனாதலால் கடல் கடத்தற்கு அனுமானே உரியவன் என்பதை உணர்ந்து அங்கதனை நோக்கி, "நாம் அறியாமையால் இவ்வாறு தயங்குவது தகாது; ஸ்ரீராமனை முதன் முதல் சந்தித்து நம் வானர மன்னனுடன் அவனை நட்புச் செய்வித்தவ னும், முன் வைத்த காலைப் பின் வைக்காத இயல்பின னும், ஆற்றலில் தனக்கு இணையில்லாதவனுமான அனு

மன் நம்முடன் இருக்கும்போது நாம் மனஞ் சோர்வது அழகோ?'' என்று கூறிப்பின் அனுமனை நோக்கி, "ஐய, பிரமன் இறந்தாலும் நீர் இறக்கமாட்டீர் என்று நீர் வரன் பெற்றிருப்பதை மறந்தீரோ? நீர்எல்லாக்கலைகளை யும் நுட்பமாக உணர்ந்தவர் அல்லீரோ? தூதுஉரைக்க உம்மினும் சிறந்தார் யாருளர்? போர்த் தொழிலிலோ நீர் சிவபிரான் போன்றீர், 'தெய்வப் படைகள் ஒன்று லும நீர் ஊறு அடையமாட்டீர் என்று நீர் பெற்ற வரத்தை அன்று முனிவர் இயம்பிய சாபத்தால் மறந்தீர் போலும். இக் கடலைக் கண்டு நீர் தயங்குவது எனக்கு நகையைத் தருகின்றது. இவ் வண்டத்துக்கு அப்புறம் குதிக்கவேண்டுமானாலும் செய்ய வல்ல உமக்கு இச் சிறு கடல் எம்மாத்திரம்? இளமையிலே சூரியன் மீது பாய்ந்த நீரோ இந் நடுவயதிலே இக் குட்டையைத் தாண்ட அஞ்சுகிறீர்? உம் அறிவுணர்ச்சியும், நீதியும், தூய்மையும், பிரமசரியமும், இராம பக்தியும் இச் சிறு தொழிலுக்குப் பயன்படாமற் போகுமென்றால், அதனை யார் நம்புவர்? ஆதலாலே நீரே செல்லவேண்டும். ஜான கிக்கும், எமக்கும், எம் இறைக்கும், இராமனுக்கும், உலகுக்கும் உம்மாலே உய்வுண்டாகப் போகிறது! அஞ் சாமல் எழும்'' என்று கூறினன்.

அவற்றைக் கேட்ட மாருதி கைகளைக் கூப்பிக் கொண்டு முகத்தில் புன்முறுவல் தவழச் சாம்பனை வணங்கி, "விடை கொண்டேன்'' என்று சொல்லி மலை யின் உச்சியிலேறிப் பேருருவம் கொண்டு நின்றான். 'திருவடி.' என்னும் பெயர் அவனுக்குப் பொருந்துமாறு அவன் தன் பெரிய அடிகளை மலைகளில் ஊன்றிக் கடலின்மீது பாயத் தொடங்கினான்.

5. அஞ்சிலே ஒன்றைத் தாவல்

அனுமன் தன் பேருருவத்துடன் அண்டம் முழுமையும் கண்டான். இலங்கையின் மதில்களும் சோலைகளும் அவன் கண்களிற்பட்டன. அவன் தாவுவதற்காக தன் கால்களை ஊன்றியபோது உலகமே உள்ளழுந்தி விடுமோ என்று தோன்றிற்று. கடல்களெல்லாம் பொங்கி வழிந்தன; மலைகளிலும் சோலைகளிலும்வாழ்ந்த விலங்குகளும் பாம்புகளும் பறவைகளும் விழிபிதுங்கி ஓடின. அவன் தன் வாலை விசையுடன் தூக்கி, தாள்களை மடக்கி, மார்பை யொடுக்கி, தோள்கள் பொங்க, கழுத்தினைச்சுருக்கி,பின்னங்கால்களையும் முன்னங்கைகளையும் நன்றாக நீட்டி வானத்தில் எழுந்தான். அவனெழுந்த வேகத்தில் மலைப்பாறைகளும் மரங்களும் அவனுடனேயே பெயர்ந்து பாய்ந்தன. கடல் நீர் கிழிந்தது; நாகருலகம்மேலேதெரிந்தது. மீன்களெல்லாம் நிற்க இடமில்லாமல் துள்ளிக் குதித்தன. அவனுடைய தோற்றம் கைலையங்கிரியையும், முழுமதியையும், கருடனையும், சக்கராயுதத்தையும், கால பாசத்தையும் ஒவ்வொரு சமயம் ஒத்துக் காட்டிற்று

இவ்வாறு இராமதூதன் கடலின்மீது சென்றுகொண்டிருந்தபோது மைந்நாகம் என்னும் மலை கடலினுள்ளிருந்து மேலே உயர்ந்துகொண்டிருந்தது. அம்மலையைக் கண்டு அனுமான், 'இஃது என்ன மாயமோ?' என்றெண்ணி மேலே உயர்ந்து செல்ல முடன்றான். மலையும் உயர்ந்தது. மாருதியும் மலையும் மாறி மாறி உயர



அஞ்சிலே ஒன்றைத் தாவல்

மைந்நாக மலைக்குரிய கடவுள் ஒரு மானுட உருவங் கொண்டு அனுமன் முன் சென்று வணங்கி, "ஐயா, முன்னொரு காலத்தில் இந்திரன் கிரிகளின் சிறகுகளை யெல்லாம் அரியத் தொடங்கினபோது உன் தந்தை என்னைக் காத்தனன். நான் இதுகாறும் நீர்க்குள் அழுந்திக் கிடந்தேன். நீ செல்லும் அரவத்தால் உன்னை அறிந்தேன். என்னிடம் சற்றுத் தங்கி இளைப்பாறிச் செல்வாயாக" என்று வேண்டினன். அனுமன், "இப்பொழுது எனக்கு நிற்க நேரமில்லை; என் ஆண்டான் அடிமைத் தொழில் முற்றித் திரும்புவதுண்டேல் அப்பொழுது உன் விருந்தினை அருந்திச் செல்வேன்" என்று கூறி அப்பாலகன்றான்.

இவ்வாறு அவன் கடிதிற் செல்லும்போது, தேவர்களின் கட்டளையால் சுரசை என்ற ஒருத்தி அரக்கியுருவமெடுத்து அனுமானின் ஆற்றலை அளக்கும் கருத்துடன் வழிமறித்து நின்றாள். அவள் உடல் திக்குக்களையெல்லாம் அடைத்துக்கொண்டு நின்றது. அவள் அனுமனை விளித்து, "அரியின் குலத்தாய்! என் நீள் பசிக்கு உதவ நீயே வலிய வந்தனை. இவ்வுதவிக்கு நான் மிக்க நன்றியுடையவளாகின்றேன். என் வாயினுட் புகுவாயாக" என்று கூறித் தன் வாயை அங்காத்தாள். அனுமன் அவளை நோக்கி, "நங்காய்! உன் பசி தீர்க்க நான் உதவுவேன்; அஃது இப்பொழுதன்று; தேவ நாயகன் ஏவலை முடித்துக்கொண்டு திரும்பும்போது நான் உன் வாயினுள் புகுவேன்; இப்பொழுது என்னை மறையற்க" என்று கூறினான்,

அவள் அதற்கு ஒப்பவில்லை. அவள் உருவத்தை இன்னும் பெரியதாக்கிக்கொண்டு வாயைத் திறந்தனள்.

அநுமன் தன் உருவையும் விரித்துக்கொண்டான். அவள் இன்னும் பெரியவளானாள். உடனே அறிவில் உயர்ந்த அநுமானும் தன் உருவத்தை மிகவும் சுருக்கிக் கொண்டு அவள் வாயினுட் புகுந்து ஒரு நொடிக்குள் வெளியே மீண்டான். அவனுடைய சமயோசிதமான ஆற்றலைக் கண்டு சுரசை அகமகிழ்ந்து அநுமனைப் புகழ்ந்தாள். தேவர்களும் ஆசி கூறினர்.

இந்நிகழ்ச்சிக்குப் பின் அநுமான் மேலே செல்ல, அங்காரதாரை என்ற ஓர் அரக்கி தோன்றினாள். ஆலகாலம் போன்ற நிறமும், மதுகைடவரை யொத்த வலிவும், பிறைத்துண்டம் போன்ற பற்களும், யானைத் தோல் போர்த்த உடையும, அண்டகோளத்துக்கே உறையிட்டது போன்ற பேழ்வாயும் கொண்டு அவள் காணப்பட்டாள். அவள் காதவழிக்கப்பாற் செல்லும் பொருள்களையும் அவற்றின் நிழலால் இழுக்கும் ஆற்றல் வாய்ந்தவள். அவளைக் கண்டு அநுமன், "என் வழிக்குக் குறுக்கிடாக நிற்கும் நீ யார்?" என்று வினவ, "என்னைப் பெண்பாலெனக் கருதினையோ? விண்ணவர்கள் உயிரையும் வாங்க வல்லேன் நான். உன்னை இதோ ஒரு நொடியிற் கொன்று தின்பேன்" என்று கூறிக் கிடுகிடுத்தாள்! ஐயன் இவளுடன் பேசி நிற்பது தகாதென்று ஓரே பாய்ச்சலாக அவள்மீது பாய்ந்து அவள் குடலைப் பிய்த்து வானில் எழுந்தான். இன்னும் எத் தீமைகள் தோன்றுமோவென்று அநுமன் அயிர்த்து இராமநாமத்தை உச்சரித்துக்கொண்டே மேலே எழுந்து ஓரே பாய்ச்சலாகப் பாய்ந்து இலங்கையை யடுத்த ஒரு பவள மலையில் இறங்கினான்.

6. பாலில் தெறித்த சிறு பிரை

சேய்மையில் நின்றுகொண்டே இலங்கையின் அழகையெல்லாம் அனுமன் கண்டு, "இவ்வூரின் மரங்களெல்லாம் கற்பகமோ? தேவமாதர் இங்குஏவல்மாதராய் உழைப்பது விந்தையே! திருமாலின் திருவயிறு போன்றன்றோ இவ்வூர் உயிர்களனைத்தையும் தன்னிடம் கொண்டு திகழ்கின்றது! இது தவம் செய்த தவமாகும்" என்று வியந்தான். பின்னும் அவன், "இவ்வூரை யமைத்த மயனின் கல்வியைப் புகழ்வேனோ? அல்லது அரக்கன் இராவணன் இழைத்த தவத்தினை மெச்சுவேனோ? அல்லது விரிஞ்சன் அளித்த வரனின் பெருமையைப் போற்றுவேனோ? யாரைநான் துதிப்பேன்!" என்று கூறினான்.

இவ்வாறு அனுமன் நகரத்தை வியந்துகொண்டிருந்தபோது அருக்கனும் மேல் திசையில் மூழ்கினான். நிசாசரர்களான அரக்கரும் அரக்கியரும் கூட்டங்கூட்டமாக வீதிகளில் வந்து உலாவலாயினர். அவர்களின் உடற்கட்டையும் களிப்பு மயக்கத்தையும் கண்டு அனுமான் பெரிதும் வியந்தான். படைவீரர்கள் அணியணியாகச் சென்றனர். மாதர் கூட்டங்கள் களியாட்டங்களில் அயர்ந்தன. தெருக்களெல்லாம் அரக்கரால்நெருக்குண்டு கிடந்தன. அந்நகரில் களிக்கின்றாரலால் கவல்கின்றார் ஒருவரும் அவன் கண்களுக்குப் புலப்படவில்லை.

இத்தகைய பெரிய நகரில் பிராட்டியை எங்குத் தேடிக் காண்பது என்று ஆஞ்சனேயன் ஐயுற்றான். அக்கொடிய வீரர்களுக்கிடையில் அந்நியனை தான் எவ்

வாறு நுழைவதென்றும் அவன் ஆராயலானான். அவன் மெதுவாக இருளில் நடந்து நகரின் மதிலையடைந்தான். அதன் கோபுர வாயிலை நோக்கி, "இது மேருவோ? மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையே நிறுத்திய தூணோ?" என்று அதன் பருமனையும் உயரத்தையும் கண்டு வியுற்று நின்றபோது அங்கே காவல்புரிந்துநின்ற இருநூறு வெள்ளம் படைவீரரின் அணி அவன் கண்ணுக்குத் தெரிந்தது. சூலம், மழு, வாள், வேல், தோமரம், உலக்கை, வில், பகழி, கப்பணம், முசுண்டி, கணை, நேமி, குலிசம், சுரிகை, குந்தம், வாலம் முதலாய படைகள் அவர்கள் கைகளில் மின்னின. "கருங்கடல் கடந்தது அரிதன்று; இக்காவல் பெரும் படையைக் கடப்பதே அரிது! இவ்வழியே சென்றால் பெரும் போர் மூளும்; அதனை முடிப்பதற்கு நாட்கள் பலவாகும்; ஆகவே வேறு வழியாகவே நான் நகர்க்குள் புகுவேன்" என்றெண்ணி அவன் மதில் வழியே சிறிது தூரம் சென்றான்.

அங்கேயே இலங்கையின் காவல் தெய்வமான பேரரக்கியொருத்தி நின்றுகொண்டிருந்தாள். அவளுக்கு எட்டுத் தோள்களிருந்தன; அவள் நிறம் ஏழுலகங்களையும் பெயர்த்தெறியும் போலிருந்தது. அவள் கண்கள் சுழன்றன; அவள் எட்டுத் திக்குகளையும் தன் கண்களால் அளந்துகொண்டிருந்தனள். அவள் நடக்கும் போது அவளுடைய நூபுரமும் சிலம்பும் எழுப்பிய ஒலி பேரிடிபோலக் கேட்பவரின் செவிகளைத் துளைத்தது. அவள் கைகளிற் பலவகைப் படைகள் மின்னின. அவள் பஞ்சவர்ண ஆடையொன்று உடுத்திருந்தாள்; அவள் மேலே பீதாம்பரம் ஒன்று தரித்திருந்தாள். அவள்

கழுத்தில் முத்துமாலை யொன்று மின்னிற்று. அவள் தலையில் மகுடமொன்று விளங்கிற்று.

அவள் அனுமன் செல்வதைப் பார்த்து, "நில்; நில்" என்று கூறி அவனை நோக்கி நடக்கலுற்ருள். அனுமன் அவளைக் கண்டு சிறிதும் அஞ்சாமல் நிற்பதைக் கண்டு அவள் வெகுண்டு, "அடே! அறிவில்லாய், உன் உயிரை மதிப்பாயானுல் அங்கேயே நில்" என்று அதட்டினுள். அறிவின் மிக்கான் அவளிடம் பணிவாகவே, "இந் நகரைப் பார்த்துச் செல்லும் பொருட்டு வந்தேன்; என்னுல் இவ்வூர்க்கு என்ன இடையூறு நிகழப்போகிறது? என்னை உள்ளே போகவிடுக" என்றனன். பின்பு அவர்களுக்கிடையே பின்வரும் பேச்சு நிகழ்ந்தது.

அரக்கி: "போ, என்ருல் போகாதே நின்று எதிர் மாற்றமா பேசுகிருய்? இவ்வூர் உன்னுல் நுழைதற் கெளியதோ? சென்றுவிடு.

அனுமன்: (நகைத்துக்கொண்டே) கோபியாதே. நான் உள்ளே புகுந்து பார்த்துவிட்டு வந்துவிடுகின்றேன்.

அரக்கி: நகைப்பவனே! நீ யார்? யார் அனுப்ப இங்கு வந்தனை?

அனுமன்: நான் யாராயிருந்தாலென்ன? உனக்கென்னுல் ஒருவித இடையூறு மில்லையே!

அரக்கி: ஆ! இவ்வளவு துணிவா! 'போ' என்ருல் இவ்வளவு பேச்சா?

அனுமன்: அம்மே! இவ்வூரினுள் புக்காலன்றிப் போகேன்.

அரக்கி: (தனக்குள்) இவன் எளியவனல்லன்போல். இவனைப் பார்த்தால் சிவபெருமான்போல்

இருக்கிறது. இனி இவனோடு பேசிக்
கொண்டிடுத்தலாகாது. (வெளிப் படை
யாய்) "வல்லையேல், இதனை ஏற்றுக்கொள்"
இவ்வாறு பேசி, அவன்மீது தன் கையிலிருந்த கொடிய வேலை எறிந்தாள். அவ்வேலை அனுமன் தன் கையினுற் பிடித்து இரண்டு துண்டுகளாக முறித்து வானத்தில் வீசி யெறிந்தான். அதனைக் கண்ட அரக்கி மேலும் வெகுண்டு இன்னும் பலபடைகளை அவன்மீதுவீசஅவற்றின் கதியும் அவ்வாறே ஆயிற்று முடிவில் வேறு வழியொன்றையும் காணுமல் அவள் அனுமான் மீது ஓரே பாய்ச்சலாக்ப் பாய்ந்து, அவனைக் குத்த, அவன் 'இனிப் பெண்ணென்று பார்த்தலாகாது' என்றெண்ணி அவள் மீது ஓரடி அடிக்க அவள் மண்ணைக் கவ்விக்கொண்டு கீழே விழுந்தாள்.

பிறகு அவள் மெதுவாக எழுந்து, "ஐய, கேள், அயன் ஏவலால் நான் இவ்வூர்க் காவலை யெய்தினேன்; என் பெயர் இலங்கைமா தேவி. நான் உனக்கோர் உண்மை உரைப்பேன்; அன்புடன் செவி சாய்ப்பாயாக. "நான் எவ்வளவுகாலம் இவ்வூரைக் காப்பேன்?" என்று மலரவனை வினவினேன். அவன், "முரண்வலிக் குரங்கொன்று உன்னை ஒரு நாள் குத்திக்கொல்லும்; அன்று நீ என்னைக் காண்பாய்; பிறகு இந்நகரமும் சிதையும்' என்றருளினன். அவ்வாறேமுடிந்தது; அறம் வெல்லும்; பாவந் தோற்கும். ஐயனே, உனக்கு மங்களமுண்டாகுக; நகரினுள் இனி நீ நுழைவாயாக" என்றுகூறி இறந்தாள்.

ஐயனும் இராமபிரானின் திருவடிகளை நினைத்துக் கொண்டே நகரினுள் புகுந்தான். அச் செயல் சிரிய பாலின்வேலை சிறுபிரை தெறித்தது போலாயிற்று.

7. தேடலும் காண்டலும்

இரவுக் காலமே அரக்கர்களுக்குத் தொழிற் காலம். சோலைகளிலும் ஆறுகளிலும் தெய்வ மாதர் நீராட்ட அரக்கியர் நீராடிக்கொண்டிருந்தனர். சில மாடங்களில் சில அரக்கியர் யாழ் மீட்டி வாசித்தனர். பலவிடங்களில் நாடகக் கணிகையர் ஆடிக்கொண்டிருந்தனர், சில வீதிகளில் சங்கம், பேரி முதலிய இன்னியங்கள் இயம்பத் திருவிழாக் கொண்டாடிக் கொண்டிருந்தனர் பலர்.

பலமாளிகைகளில் அரக்கர் உறங்கிக்கொண்டிருந்தமையையும் அனுமன் கண்டான். இராவணனைக் காண வேண்டுமென்று அவன் பல மாளிகைகளினுள்ளும் புகுந்துபார்த்தான். அவன் அன்றிரவு புகுந்த மாடம். கூடம், மாளிகை, யோகினிகை, ஆடரங்கு, தேவராயலம், பாடல் வேதிகை, பட்டி மண்டபம் ஆகியவற்றிற்கு அளவே யில்லை, அவன் அந்நகரிலுள்ள ஆடவர், மகளிர் யாவரையும் கண்டான். ஆனால், அவன் நாடிவந்த பிராட்டியைக் காணக்கூடவில்லை.

அவன் அன்றிரவு நெடுநேரம் அலைந்தான். தானைத் தலைவர், அமைச்சர், அரசகுமரர் யாவரையும் அவன் கண்டான். இராவணன் மாளிகையினுள்ளும் புகுந்தான்; பத்துத் தலைகளோடும் இருபதுகைகளோடும் அவன் படுத்துறங்கியதைப் பார்த்தான்; அப்பொழுதே அவனைக் கொன்று முடித்துவிடலாமா வென்றும் அவன் எண்ணினன். " இவ்வாறு செய்தல் இராகவன்

பணியன்று: அன்றியும் அவனை நான் கொன்றால் இராமனுடைய கொற்றத்துக்கு இழிவு உண்டாகும்; ஆகையால் இவனைக் கொல்லும் பணியை அவனுக்கே விட்டுவிடுவோம்" என்று அவன் தீர்மானித்து அப்பால் அகன்றான். இராவணனின் மனைவியான மண்டோதரி யைக் கண்டு, 'இவள்தான் பிராட்டியோ' என்று ஐயுற் றான். பின்பு அவள்பால் சில இலக்கணக் குறைகள் இருப்பதைக் கண்டு அப்பாலகன்றான். இவ்வளவு முயன் றும் சீதையைக் காணக்கூடாமையை எண்ணி அவன் பெரிதும் கவன்று நின்றபோது ஓர் அழகிய சோலை அவன் கண்களிற்பட்டது.

நகரெல்லாம் தேடி அலைந்து சலித்துப்போன மாருதி அச் சோலையைக் கண்டு, "இதுதான் கடைசி இடம்; இங்குப் பிராட்டியைக் காண்பேனேல் என் சிறுமை தீரும்; இங்கும் கண்டிலனேல் என் முயற்சி கள் வீண் முயற்சிகளே. இனித் தேடுவதற்கிடமில்லை. ஆனால் நான் உயிருடன் மீளேன்; இந்நகரையும் அழித்து என் உயிரையும் இங்கேயே முடித்துக் கொள்வேன்; இது திண்ணம்" என்று உறுதி செய்துகொண்டு அத னுள் புகுந்தான்.

அங்கே பிராட்டி இருந்த நிலைமையை எவ்வாறு கூறுவது! பருத்த உடல்களையுடைய அரக்கியர் பலர்க் கிடையில் மலைப்பாறையிலே முளைத்து மழையையுங் காணமல் வதங்கிக் கிடக்கும் வல்லிக்கொடியைப் போல் அவள் துவண்டு தோன்றினள். அவள் கண்கள் துயி லினை உணர்ந்து எத்தனையோ நாட்களாயின. அவள் மேனி வெயிலிடைக் கிடந்த விளக்குப்போல ஒளியிழந்

திருந்தது. புலிக்கூட்டத்தினிடையே அகப்பட்ட மானினப் பேடையைபோல் அவள் பரிதவித்தாள். 'இருந்தபடியே விழுவாள்; விம்முவாள்; வெதும்புவாள்; வெருவுவாள்; எழுவாள்; இராமனை எண்ணித் தொழுவாள்; சோர்வாள்; உடனே துளங்குவாள்; உயிரிழந்தவள் போல் சாய்வாள்; பெருமூச்செரிவாள்; அழுவாள். அவள் கண்களினின்று நீர் ஆறாகப் பெருகி அவள் உடையை யெல்லாம் நனைக்கும். அவளுடல் வெதும்பலால் உடனே அப்புடவை காயும். 'இராமன் வருவான், வருவான்' என்று திக்கெல்லாம் நோக்குவாள்; அவன் வராமையைக் கண்டு உள்ளமும் உடலும் சோர்ந்து விழுவாள்.' இவ்வாறு துன்புற்றிருந்த நங்கையை அனுமான் கண்டான். அவள் இராமனுடன் வாழ்ந்தகாலத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகளை எண்ணி மகிழ்ச்சியும் அவனை விட்டுப் பிரிந்ததால் உண்டான துன்பமும் அவன் இனித் தன்னை ஏற்றுக்கொள்ளமாட்டானோ என்ற எண்ணத்தால் உண்டாகும் ஏக்கமும் மாறி மாறி அவள் முகத்தில் தோற்றுவதையும் அவன் கண்டான்.

இந்நிலையில் அவளைச் சூழ்ந்திருந்த புலிகள்போன்ற அரக்கியர் சற்றுக் கண் அயர்ந்தனர். அவர்களுள் திரிசடை என்ற ஒருத்தி சீதையிடம் இரக்கங்கொண்டவளாய் விழித்துக்கொண்டிருந்து சமயம் நோக்கி அவளருகிற் சென்று அவளைத் தேற்றலாயினள். அவள் தான் கண்ட கனவைச் சொல்லி இராம்பிரான் வந்து இராவணனைக் கொன்று அவளை மீட்டுச் செல்வான் என்று கூறினாள், இதற்குள் சிறுதுயில்கொண்ட அரக்கிகள் விழித்தெழுந்ததால் திரிசடையும் தன் பேச்சைநிறுத்திக் கொண்டாள்.

அனுமான் யாதொரு சந்தடியும் செய்யாமல் மெது வாக அவ்விடத்துக்கு அருகில் வந்து ஒரு மரத்தின்மீது ஏறிக்கொண்டு ஒருவரும் அறியாமல் மறைந்துகொண் டான். சீதையையும் கூர்ந்துபார்த்தான், அண்ணல் கூறிய அடையாளங்கள் யாவும் அவள் பால் அமைந் திருப்பதைக்கண்டான், அவளைச் சூழ்ந்து நெருக்கமாக இருந்த அரக்கிகளையும் கண்டான். கார்மேகங்களி னிடையே கிழித்து ஒளிரும் மின்னல்போல் விளங்கும் பிராட்டியைப் பார்த்தான். அவள் கொடிய நிலையையும் கண்டான். அவன் மனம் ஆறுதலடைந்தது. "அறன் விடவில்லை; யானும் இனிச் சாகேன்; தேடினேன்; கண்டு கொண்டேன்; இவள் தேவியே!" என்று கூறிக் கொண்டு ஆடினான்; பாடினான்; உவகையால் கிளை களிலேயே ஓடினான்.

ஆ! வள்ளல் இராகவன் கூறின உருவ இலக்க ணங்கள் அப்படியே இருக்ககண்டேன்; பாவி, அரக்கன் என் இராமன் உள்ளத்தில் உறையும் தேவியைப்பிரித்து இங்குச் சிறையில் வைத்தனனே! இந்த அநீதியை என்னவென்பேன்! இப்பெண் தெய்வத்தைக் கண்ட என் கண்களே கண்கள்! ஆ! மணிபோன்ற இவள் மாசு மூடி மங்கியிருக்கின்றனளே! ஆ! இவள் தவந்தான் என்னே! இவள் இக்கொடுமையின் இடையிலும் தன் னையும் தன் கற்பையும் காத்துக்கொண்டு நிற்கும் பெரு மையை எவ்வாறு அளந்துரைப்பேன்! இவள் மனவுறு தியை வியப்பேனோ? இவளைப்பெற்ற சனகன் குலப் பெருமையைக் கூறுவேனோ? இவளை மணந்த இராகவ னின் மேன்மையைப் புகழ்வேனோ? ஆ! இவளால்தேவர் களுக்கும் நற்காலம் உண்டாகிவிட்டது; தேவ வேதியர்

களுக்கும்நற்காலம் உண்டாகிவிட்டது; அறமும்பிழைத் தது. உலகமே அழிந்துவிடும் என்று எண்ணினேன். இனி உலகும் பிழைத்தது.

"ஆ! இவள் தவத்தை எவ்வாறு வியப்பேன். நெருப்பில் மூழ்கியும், புலன்களை அடக்கியும், உணவு நீர் முதலியவற்றை நீக்கியும் கொடிய கானகத்தில் தவம் புரியும் முனிவர்கள் இவ்வம்மையின் தவத்திற்கு முன்னே நிற்பரோ? ஆ! இவ்வம்மையொருத்தி பிறந்த தால் பெண்மை பிழைத்தது. இவள் தவநிலையைக் காணப் பெருத இராகவன் தான் தாமரைக் கண்களைப் பெற்றும் கண்களாலான பயனைப் பெருதவனேயானுன். ஆ! தவமென்ருல் இதுவன்ருே தவம்! என்ன தனிமை! என்ன நம்பிக்கையற்ற நிலைமை! உலகத்தில் அறம் பெண்களிடமே அமைந்துள்ளது!

"ஆ! இவள் எவ்வாறு இங்கே தன்னைக் காத்துக் கொண்டு நிற்கிருள்? அல்லது தருமந்தான் இவளைக் காத்துவருகின்றதோ? அல்லது அப்பாவி இராவண னின் கருமந்தான் காக்கின்றதோ? அல்லது கற்பின் காவலோ? இஃது அருமை! அருமை! இதற்கொத்த ஒன்றை நான் வேறெங்கும் கண்டிலேன்!

"ஆ! இந்தஇராவணனுக்கிருக்கும் செல்வத்திற்கும் அளவுண்டோ? இவனுக்கேன் இவ்வளவு தீமைக்குணம் அமைய வேண்டும்! இதுதான் உலக இயற்கைபோ? இருக்கட்டும்; எப்படியும் தீமையை அறம் வெல்லமுடி யாது. இவ்வுண்மை இங்கே விளக்கமாயிற்று" என்று இவ்வாறெல்லாம் அவன் நினைத்துக்கொண்டான்.

8. அறமும் மறமும்

அச்சமயம் அங்கே இராவணன் தோன்றினான். அவனுக்கு முன்னே, பல அரக்கியர் வந்தனர். அவன் சிறந்த ஆடையாபரணங்களால் அலங்கரித்துக் கொண்டிருந்தான். அவன் சீதை யிருந்த விடத்திற்கு வந்து பல நய மொழிகளைக் கூறித் தன்னை ஏற்றுக்கொள்ளவேண்டினான். அவளுக்கு எவ்வளவோ பெருமைகளைக் கொடுப்பதாகக்கூறினான். இராமன் மிக்க எளியவனென்றும் தான் அவனை ஒரு நொடியில் வென்றுவிடக் கூடுமென்றும் சொன்னான். முடிவில் அவள் முன் தரையில் விழுந்து அவளை வணங்கிக் கெஞ்சினான். அவளைப் பெறமுடியாமல் தான் படும் இன்னல்களையெல்லாம் பகர்ந்தான்.

இந்த நீண்ட சொற்பொழிவைச் சீதை மிகுந்த மனக் கசப்புடன் கேட்டாள். அச்சொற்கள் அவள் காதுகளில் காய்ந்த சலாகைபோல் புகுந்தன. அவை தீய்ந்தன; உள்ளம் திரிந்தது; சோரி சிவந்து கண்களிற் பாய்ந்தது. அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை; பெண்மைக்கேற்காத சொற்களைப் பேசவேண்டியிருக்கிறதே யென்று அவள் கலங்கினாள்; 'உயிரினும் நாண் சிறந்தது; நாணினும் செயிர்தீர் கற்பு சிறந்தது' என்ற உண்மை அவள்பால் காணப்பட்டது; தன் பெண்மையை மறந்தாள்; தன் நாணத்தைத் துறந்தாள்; தன் உயிரைப் பொருட்படுத்தவில்லை, ஆயிரம் இயமன் ஒன்றுகூடினாற் போல் நின்ற இராவணனை ஒரு துரும்பென மதித்தாள்;

மண்ணில் முளைத்திருந்த ஒரு துரும்பைக் கிள்ளி அவன் முன்னே எறிந்தாள்; அதனை நோக்கிப் பேசலுற்றாள்.

"அட! துரும்பே! அற்பமே! என் நாயகன் வலிமையை அறியாமல் அவன் பகழியை இகழ்ந்து ஏன் உன் தலைகள் பத்தையும் சிந்த நிற்கின்றாய்! மேருவை வேண்டுமானாலும் அது பிளக்குமே! விண்ணைத் துளைக்குமே! அவனுடைய ஆற்றலைக் கண்டு அஞ்சித்தானே வஞ்சமான ஏவி என்னைப் பிரித்து எடுத்துவந்தாய்! அன்று அவன் கண்ணில் நீ பட்டிருந்தால் உன் கதி யாதாயிருக்கும்? நாய்க்குணம்பெற்ற உனக்கு ஆண்மையுமுண்டோ? ஒரு சடாயுவுக்குமுன் நிற்கமாட்டாமல் தலைதுப்புற விழுந்த நீ ஓர் ஆடவனா? மூக்கோடி வாழ் நாளும் யாவராலும் முடிவுறாத வாழும் பெற்றமையைக் கொண்டு குதிக்கின்றாய் போலும். அவை யாவும் என் நாதன் ஒற்றை அம்பின்முன் நெருப்பிற் பட்ட பஞ்சு போலாகுமே! உன் வாழ்நாள் முடிவுறும் காலம் நெருங்கிவிட்டது; நீ மட்டுமன்று, உன் அரக்கர் குலமே முடியப் போகின்றது. 'அட, பாவி! ஏன் பாவகாரியத் துள்ளிறங்கி உன் குல நாசத்துக்குக் காரணமாகின்றாய்! நீ இன்று நுகர்ந்துவரும் செல்வப் பெருமை யாவும் நீ முன்பு செய்த தவத்தின் பயனன்றோ? அதனை விட்டு உன் ஆற்றலால் அவை விளைந்தனவென்றெண்ணிப் பாவகாரியங்களில் தலையிட்டு ஏன் நாசத்தை நாடுகின்றாய்? உனக்கு நற்புத்தி கூறுவார் இங்கு யாரும் இல்லையோ? நான் கூறுவதையாவது கேட்டு மனம்மாறி நல்வழி அடை, வீணே மடியாதே" என்று கூறினாள்.

இச் சொற்களைக் கேட்ட இராவணனுடைய இருபது கண்களினின்று தீப்பொறிகள் பறந்தன.

பற்களை நறநறவென்று கடித்தான்; இடியிடித்தது போல உரப்பினன். அவன் தோள்கள் வானத்தை முட்டின; கைகள் திக்குக்களையெல்லாம் அளந்தன. அவன் பிராட்டியைப் நோக்கி, "அடாது சொன்னாய்! மூவுலகங்களையும் ஒரு நொடியில் முடிக்கவல்ல என் முன்னே பேதையாகிய ஒரு பெண் இச்சொற்களைக் கூறுவது; இதோ உன்னைக் கடித்துத் தின்பேன்! உன்னிடம் வைத்த மையலன்றோ என்னை அவ்வாறு செய்யவிடாமல் தடுக்கின்றது? உன் கணவன் ஆற்றலை வானளாவப் புகழ்கின்றாய்! என் ஆற்றலை நீ அறியவில்லை. தேவேந்திரன் எனக்கு ஏவல் புரிகின்றான்! மூத்தேவர்களும் எனக்கஞ்சித் தலைமறைவாகத் திரிகின்றனர்! நான் கண்ணை விழித்தால் உலகங்கள் யாவும் நடுநடுங்குமே! இப்படிப்பட்ட என் முன் கதியற்ற ஒற்றை மனிசன் எம்மாத்திரம்! நீ விரும்பினால், அவனை மட்டுமன்று அவனைச் சேர்ந்தார் யாவரையும் உன் முன் கொண்டு வந்து நிறுத்துவேன். பேதாய்! உன் முரட்டுத்தனத்தால் நீ மதிகெட்டலைகிறாய். உன்னோடு பேசிப் பயனில்லை. உனக்கு ஒரு மாதம் தவணை தருவேன். அதற்குள் நீ எனக்கு இணங்காயானால் அன்றே உன்னைக் கொன்று தின்பேன்; இதுவே உறுதி" என்று கடுகடுத்துப் பேசிவிட்டுத் திரும்பினன்.

★

9. அறமும் அறமும்

இவ்வளவையும் அனுமான் தன் மறைவிடத்தி லிருந்தே நோக்கிக்கொண்டிருந்தான். அவனுக்கு இன்னது செய்வதென்று தோற்றவில்லை. எல்லாம் ஒரு நொடியில் நடந்தன. பிராட்டியின் மன உறுதியையும் வீரத்தையும் அவன் கண்டு களித்தான்; இராவணனுடைய கொடுமையையும் நீசத் தன்மையையும் கண்டு வெகுண்டான்; அங்கே கூட்டமாக நிறைந்திருந்த அரக்கிமார்களைக் கண்டு மயங்கினான். அவர்களை அயரச்செய்து பிராட்டியினிடம் தன்னைத் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்றெண்ணி அவன் ஒரு மந்திரத்தை உச்சரித்தான். உடனே அரக்கியர் யாவரும் மயங்கி அயர்ந்தனர். அனுமான் மெதுவாக மரத்தினின்று இறங்கத் தொடங்கினான். அவனை அவ்வாறு செய்ய விடாமல் மற்றொரு நிகழ்ச்சி நேர்ந்தது.

அரக்கியா உறங்கியதைக் கண்ட அன்னை, "இனி நான் உயிர் வைத்திருந்து பயனென்ன? என் நாதன் வருவான் என்று நம்பவும் முடியவில்லை. இனி எனக்கு ஒரு வழியுமில்லை. இக் கொடியோன் இழைக்கும் இன்னலுக்கு எல்லையுமில்லை. இவ்வரக்கியரோ ஒரு நொடியேனும் என்னை விட்டகலார். ஏதோ தெய்வ வசத்தால் இப்பொழுது அவர்கள் உறங்குகின்றனர். இதுவே, எனக்குத் தக்க சமயம். ஏ நாதா! என் நிலையை அறியுங்கள். இதோ தங்கள் திருவடி நினைப்புடன் என் உயிரை மாய்த்துக்கொள்கிறேன்" என்று

தன்க்குள் கூறிக்கொண்டு எழுந்து அருகிலிருந்த மரக் கிளையில் தன் கூந்தலை மாட்டித் தன் கழுத்துக்குச் சுருக்கிட்டுக்கொண்டு உயிரை விடத் துணிந்தாள்.

பார்த்தனன் அனுமன். இனி ஒரு நொடியும் தாமதிக்கலாகாதென்று மரத்திலிருந்த வண்ணமே "இராம! இராம! இராம!" என்று இராமநாமத்தைக் கூறிக்கொண்டே மரத்தினின்று கீழே இறங்கினான்.

அச்சொற்களைக் கேட்டும் அவன் உருவத்தைப் பார்த்தும் சீதேவி திடுக்கிட்டாள். அவள் தான் செய்யத் துணிந்த செயலினின்று பின்வாங்கினாள் அவளுக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை.

அனுமான் சேய்மையில் நின்றுகொண்டே பிராட்டியை வணங்கி, "தாயே, அஞ்சவேண்டா. நான் இராம தூதன். அனுமன் என்னும் பெயரினன். அவன் கொடுத்த அடையாளப் பொருளும் உண்டு. சொன்ன அடையாளச் செய்தியும் உண்டு. என்னை ஐயுறற்க" என்று கூறி வணங்கினான்,


ஜானகி அவன் முகத்தை நோக்கினாள். அவன் உடலை உற்றுப் பார்த்தாள்; 'இவன் இருதனல்லன் ஐம்பொறிகளையும் அடக்கிய பெரியோனாகக் காண்கிறான்; தூயன்போல் தோற்றுகிறான்; வையிலன்; இவன் தேவனோ? வேறு யாவனோ? யாராயினும் ஆகுக. என்னுடைய இந்நிலையில் இங்கு வந்து என் நாதன் பெயரைச் சொல்லி என் உயிரைத் தந்தான்; உள்ளத்தை உருக்கினான்; இதைவிட உறுதியுண்டோ?" என்றெண்ணி மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு "வீர! நீ யாவன்?" என்றாள்.

அதனைக் கேட்டு அனுமான், "அம்மையே! பிரபு உன்னை விட்டுப் பிரிந்தபின் வானரத் தலைவனை சுக்கிரீவ மன்னனைக் கண்டு அவனுடன் நட்புச் செய்து கொண்டான். சுக்கிரீவனுக்கு வாலி என்ற தமையன் ஒருவன் உண்டு; அவன் இந்த இராவணனைத் தன் வாலிற் கட்டி உலகெலாம் திரிந்த வலியோன். அவ் வாலி சுக்கிரீவனுக்குப் பெரியதொரு இன்னலிழைத் திருந்தான். உன் நாதன் அவ்வாலியைக் கொன்று என் மன்னனுக்கு முடிசூட்டினன். அச் சுக்கிரீவனுடைய மந்திரச் சூழலில் நாயேனும் ஒருவன். அனுமானென் னும் பெயரினேன்: வாயுவின் மைந்தன். உம்மைத் தேடுவதற்காகச் சுக்கிரீவன் அனுட்பிய பல கோடி வானரர்களுள் நான் ஒருவன். பிரபு என்னையே இங்கு அனுப்பினன். அவன் சொல் வீணாகுமோ? அதிருஷ்ட வசத்தால் உம்மை இங்குக் கண்டேன். இனி ஒரு கவலையுமில்லை. அன்று நீர்கழற்றியெறிந்த அணிகலன்க ளெல்லாம் எம்மால் எடுத்து அண்ணலுக்குக் காட்டப் பட்டன. அவற்றைக் கண்டபின்பே இராமபிரானுடைய உயிர் அவனிடம் நின்றது. அவையே இன்று உம் நானைக் காத்தன. அம்மையே இனி அஞ்சற்க" என்முன்.

இவற்றைக் கேட்ட தேவியின் மனம் உவகை கொண்டது. அவளை மூடிக்கொண்ட துயரம் எங்கோ பறந்துபோயிற்று. அவள் திருமேனி வானளவும் ஒளி வீசிற்று. கண்களினின்று ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. நாதழதழத்தது. தனக்கும் நற்காலம் வந்தது என்று அவள் விம்மினாள். அவள் அனுமனை நோக்கி, "ஐய, என் பிரான் திருமேனி எத்தகையது? உரைக்கவல்லை யேல் கூறுக" என்றனள.

அனுமன், "அம்மையே! ஐயனின் வடிவம் என்னால் உரைக்கத் தக்கதோ? தாமரை போன்ற திருவடியும், கதிரவன் கிரணங்களை ஒத்த உகிர்களும், வயிரம் போன்ற விரல்களும், நிலனோடு பொருந்தாத் திருவடிகளும், அம்புப் புட்டில் போன்ற கால்களும், கரியின் கரங்கள் போன்ற குறங்குகளும் இலஞ்சி போன்ற உந்தியும், யானைக் கோடுகள் போன்ற தடக்கைகளும், தாமரை இதழ்களை யொத்த உகிர்களும், மலைகள் போன்ற புஜங்களும், சங்கு போன்ற கழுத்தும், கமலத்தை வென்ற முகமும். பவளத்தையொத்த உதடுகளும், அறத்தின் வித்தெனக் கூறும் பற்களும், மரகதத் துண்டம் போன்ற நாசியும், மறத்தைத் துடைக்கக் குனித்த புருவமும், எட்டாம்நாள் பிறைபோன்ற நெற்றியும், தெய்வநெறி கமழும் குஞ்சியும், மத்தயானையின் நடையை யொத்த நடையும் ஆகிய எம்பெருமானின் உருவை நானோ மொழியவல்லேன்!

"அவர் என்னிடம் தங்களுக்குக் கூறும் வண்ணம் சொல்லிய செய்திகள் சிலவுண்டு. அவர் தம் சிறிய தாயின் விருப்பத்திற்கிணங்கிக் கானகத்துக்கு எழத் தொடங்கியபோது உடுத்த துகிலோடும், உயிருக்கும் உடலோடும், எடுத்த முனிவோடும் தாம் அயலே நின்றீராம். நகரவாசலைக் கடக்குமுன் "கானகம் வந்துவிட்டோமா?" என்றீராம். சரயு நதிக் கரையில் சுமந்தரனிடம் தாம் வளர்த்த கிளிக்குச் செய்தி சொல்லியனுப்பினீராம். இவையெல்லாம் இராமபிரான் உமக்கு அடையாளச் செய்திகளாகச் சொன்னவை. இன்னும் நான் சொல்லவேண்டுவதொன்றுமின்று. இதோ அவர் கையால் என்னிடம் கொடுத்த



அனுமானும் சீதாபிராட்டியும்

அவருடைய கணையாழி" என்று சொல்லித்தான் பொதிந்து வைத்திருந்த ஆழியை நீட்டினான்.

அதனைக் கண்டவுடன் அம்மை அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. அப்பொழுது அவள் செய்தவற்றைப் புலவர்களும் விளக்கிக் கூறத் தயங்குவர். அதனை அவள் உச்சிமோந்தாள்; கண்களில் ஒற்றிக் கொண்டாள்; ஆனந்தக் கண்ணீரால் அதனை நனைத்தாள். அவள் அனுமானை நோக்கி, "ஐய, என் ஆருயிர்த் தலைவனுக்குத் தூதாய் வந்து எனக்கு இன்னுயிர் கொடுத்த வள்ளலே. உனக்கு எவ்வாறு என் நன்றியைத் தெரிவிப்பேன். என் அம்மையே! என் அப்பனே! எனக்கு இம்மை மறுமை இரண்டினையும் நல்கினாயே! வீர! என் துயரை நீத்த நீ, சிரஞ்சீவியாய் வாழ்வாயாக. நான் மாசிலா மனத்தேனென்னில் நீ என்றும் வீயாது வாழ்க" என்று கூறினாள்.

பின்பு அவள் தன்னைவிட்டு இராமன் பிரிந்தபின் தண்டகாரணியத்தில் நிகழ்ந்த வரலாறுகளையெல்லாம் மாருதியிடமிருந்து கேட்டறிந்துகொண்டாள். அவள் பிரிவால் அவன் படும் துயரையெல்லாம் அனுமான் கூறினான். இவற்றையெல்லாம் கேட்டறிந்தபின் அவள் மனத் துயர் நீங்கிற்று. அனுமான் கடலை எவ்வாறு தாண்டினான் என்ற ஐயம் அவளுக்கு உண்டாயிற்று அதனை அவள் தெரிவிக்க அனுமான், "தாயே! உம் கணவருடைய திருவடிகளைத் தியானிக்கும் அன்பர்கள் பிறவிப் பெருங்கடலையே கடக்கின்றார்களே! இக்கருங் கடல் அவர் அடியவர்களுக்கு ஒரு பொருட்டோ?" என்றனன். "இச் சிறிய யாக்கையைக் கொண்டு நூறு

யோசனை அகலமுள்ள இக்கடலை எவ்விதம் கடந்தனை என்பதே என் ஐயம்" என்று அவள் மேலும் வினவ ஆஞ்சனேயன் அவள் முன் கூப்பிய கையனாய் இராம பிரானைத் தியானிக்க, அவன் உடல் மிகப் பெரிதாக வளர்ந்தது. அவனுடைய தலை வானத்திற்கும் அப்பாற் சென்றது. அங்குள்ள உடுக்கூட்டங்களெல்லாம் மரக் கிளைகளில் மொய்க்கும் மின்மினிகள் போல் அவனுடல் உரோமக் கால்களில் புகுந்தன. இரண்டு காதுகளிலு மிருந்த குண்டலங்கள் கிழக்கிலும் மேற்கிலும் காணப் பெறும் இரு பெருஞ்சுடர்கள் போல விளங்கின. அன்று உலகங்களெல்லாம் அனுமனைக் கண்டன. அவனும் அண்டத்துக்கு அப்புறத்திலுள்ளவற்றைக் கண்டான். அவனுடைய கால்கள் தரையில் அழுந்தியதால் கடல்க ளெல்லாம் பொங்கி வழிந்தன. ஜானகி அனுமன் காலி லிருந்த கழலையும் காணவில்லை; அவ்வளவு உயரத் தில் அஃதேறிவிட்டது. அவள் அனுமனை நோக்கி, "ஐயா! உன் முழு உருவையும் என்னுற காணவிய லாது; குறுகிக்கொள்வாய்" என்று வேண்ட, அவனும் முன் போலானான்.

சீதைக்கு அப்பொழுதுண்டான மகிழ்ச்சிக்கும் தைரியத்துக்கும் அளவில்லை; 'இனி நான் அஞ்சவில்லை; நான் என் நாதனைக் காண்பேன்" என்று கூறினாள்; அனுமனை பலபடியாகப் புகழ்ந்தாள். அப் புகழ்ச்சிச் சொற்களைக் கேட்கப்பொறாத அனுமான் "என் அரசன் ஆட்சியில் என்னைவிட வலியவர் இலக்ஷக்கணக்கில் உளர். அவனுடைய எழுபதுவெள்ளம் சேனையில் ஆளுக்கொருவர் ஒரு கையெடுத்துக் குடித்தால் இக் கடல் போதாதே" என்று கூறி அவளைத் தேற்றினான்.

பிறகு அனுமான் மனதில் ஒருயோசனை தோன்றிற்று. சீதையை அப்படியே விட்டுவிட்டு வெறுங்கையுடனே இராமனிடம் செல்வதைவிட அவளையும் எடுத்துச் செல்வது சிறப்பாகாதோ எண்றெணணினன். அக்கருத்தை அவளுக்கு அறிவிக்க எண்ணி அவள்முன் வணங்கி, "தாயே, அடியேனுக்கு ஓர் ஆவல் இருக்கிறது உம்மைத் தனியே இங்கு விட்டுச் செல்லாமல் என்மீது சுமந்துகொண்டு இராமபிரானிடம் சேர்ப்பித்துவிட்டால் உம் இன்னல்களெல்லாம் தீருமேயென்றெண்ணுகிறேன். தமக்கு யாதோரிடையூறுமில்லாமல் நான் எடுத்துச் செல்வேன்; விடை தருக" என்று கூறி இறைஞ்சினன்.

அதற்குப் பெண்களுள் நாயகமான பிராட்டி பின்வருமாறு விடை கூறினள். "மாருதி, நீ நினைத்ததை முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவன் என்பதை நான் உணர்ந்தேன். எனினும் உன் விருப்பத்திற்கு இணங்குவது உரியதன்று என்று எனக்குத் தோன்றுகிறது. நீ சிறந்த இராம பக்தனேயெனினும் ஆண்மகனே. என்னை நீ தொடுவது தகாது. அடுத்ததாக, நீ அழைத்துச் சென்றுவிட்டால் என் நாதன் தன் வீரத்தைக் காட்ட வாய்ப்பில்லாமற் போய்விடும். நானே இக் கொடும்பாவியைச் சபித்து அழித்திருப்பேன்; அதற்கு எனக்காற்றலுண்டு; என்றாலும் என் நாதன் வில்லுக்கு மாசு வருமே என்று அவ்வாறு செய்யவில்லை. அவன்தான் ஒருவரும் இல்லாத பொழுது பார்த்துக் கள்ளத்தனமாய் என்னைத் தூக்கி வந்தான்; அப்படியே நீயும் செய்யலாமோ? அன்றியும், என்னைப் பார்த்த அவன் கண்களைக் காகங்கள் கொத்தவும், அவன் தலைகள் தரையில் உருளவும்

நான் காணவேண்டாவோ? ஆதலால், உன்னுடன் வருவது என்பது தகாது.

"நீயும் இனி இங்குத் தாமதிக்காமல் உடனே புறப்பட்டுச் சென்று என் தலைவனைக் கண்டு என் நிலையைக் கூறி உடனே இங்கே வரச்செய். அரக்கன் எனக்குக் கொடுத்த ஒரு மாத எல்லையையும் என் நாதன் வருகைக்காக காத்து நான் உயிரைத் தாங்கியிருப்பேன். அதன் பின்னும் அவன் வரத் தாழ்ப்பனேல் நான் என் உயிரை விடுவது திண்ணம். இதனை அவனிடமும் என் மைத்துனனிடமும் கூறு. இதோ என் சூடாமணியை என்னிடமிருந்து பெற்ற அடையாளப் பொருளாகப் பெற்றுக்கொள்". இவ்வாறு அவள் கூறித் தன் ஆடையிற் பொதிந்து வைத்திருந்த தன் சூடாமணியை அனுமன் கையிற் கொடுத்து அவனை வாழ்த்தினாள்.

அனுமனும் அதனை மிகுந்த வணக்கத்துடன் ஏற்றுத் தன் கண்களில் ஒத்திப் பத்திரமாய்த் தன் ஆடையிற் பொதிந்துகொண்டு, பிராட்டிக்குப் பல தேறுதல் மொழிகளைக் கூறி அப்பாலேகினான்,

★

10. பகைவனைக் காண முயற்சி

அனுமான் நேராக வடக்கு நோக்கித் திரும்பினன். வண்டுகளும் மலர்களும் நிறைந்த பொழிலினூடே அவன் நடந்தான். அப்பொழுது அவன் மனத்தில் ஒரு கருத்து தோன்றிற்று. "இவ்வளவு தூரம் வந்து நான் யாதொன்றையும் செய்யாமற் செல்வேனு? பகைவர்களையெல்லாம் கொன்று, இவ்வூரையும் கடலிலே அழுத்தி, அம்மையையும் அழைத்துச் சென்றேனல்லேன்; என் அடிமை வேறு எவ்வாறு புலப்படும்? இராவணனையாவது என் வாலால் கட்டிப்பிடித்துச் சிறையிலிட்டுச் செல்ல முடிந்ததா? அதுவுமில்லை. நல்லது; இந்த நகரில் ஏதேனும் ஒரு கலகத்தைச் செய்தாவது அகல்வேன்; இப்பொழிலை ஒடித்து வீழ்த்தினுல் அரக்கர்கள் என்னிடம் போர்புரிய வருவர்; அவர்களைக் கொன்றொழிப்பேன். அதனை இராவணன் அறிவான்; அவன் பல படைவீரர்களை என் மீது ஏவுவான்; அவர்களையும் கொன்று தீர்த்தால் அவனே நேரில் வருவான். அப்பொழுது என் மனமார அவனைப் புடைத்து என் கோபத்தை ஒருவாறு தணித்துக் கொண்டு செல்வேன்" என்று அவன் இவ்வாறு எண்ணி மிகப்பெரிய உருவத்தை எடுத்துக்கொண்டு அப்பெரிய பொழிலைத் துகைக்கத் தொடங்கினன்.

அப்பொழுது ஆஞ்சனேயனின் செயல்களால் விளைந்தவற்றை எவ்வாறு கூறலாம்? மரங்கள் பலவும் முடிந்தன; பிளந்தன; முரிந்தன; நெரிந்தன; மடிந்தன;

பொடிந்தன; மறிந்தன; முறிந்தன; இடிந்தன, தகர்ந்தன; எரிந்தன; கரிந்தன.

அவற்றை வாரி நாலாபக்கங்களிலும் அவன் வீசினான். சில விண்ணுலகத்தில் போய் விழுந்தன; சில கடலைத் தூர்த்தன; சில நகரத்திற்குள் விழுந்து மாளிகைகளைத் தகர்த்தன. ஒன்றன்மேலொன்றாக ஆயிரக்கணக்கான மரங்கள் நகரவீதிகளில் விழவே பல அரக்கர்கள் உயிரிழந்தனர்; பலர் கைகால்களை இழந்தனர்.

இதற்குள் பொழுது விடிந்தது. விலங்குகளும், பறவைகளும் இரவில் நிகழ்ந்த அல்லோல கல்லோலத்தால் மனம் பதை பதைத்து அங்குமிங்கும் ஓடலாயின. சீதையைச் சூழ்ந்திருந்த அரக்கியர் தமக்கு யாது நேருமோவென்று பதைபதைக்கலாயினர். நகரத்திலுள்ளவர் இவை எவ்வாறு நிகழ்ந்தனவென்று அறிய மாட்டாதவராய்த் திகைத்தனர். பொழிற் காவலாளர்கள் அனுமனைக் கண்டு அஞ்சி, "இஃது என்ன வானரமா? அல்லது மூவரிலொருவர் இவ்வுருக்கொண்டு வந்தனரா?" என்று ஏங்கி அங்கு நடந்த செய்திகளை மன்னனுக்கறிவிக்க ஓடினர். அவர்கள் ஓடியதைக் கண்ட அனுமான் அண்டம் கிடுகிடுக்கும்படி ஓர் ஆரவாரம் செய்தான்.

அவ்வோசை இடியோசைபோல இராவணனின் செவிகளிற் புகவே அவன் வெகுளியாற் பொங்கி எழுந்தான். காவலாளர்களும் அவன் முன் சென்று குரங்கின் செய்தியைக் கூற, அவன் அருகிலிருந்த படைவீரர்களை உறுத்து நோக்கி, "நீங்கள் சென்று அக்குரங்கைப் பிடித்து வாருங்கள்" என்று கட்டளையிட்டான்;

உடனே, ஆயிரக்கணக்கான கிங்கரர் சூலம், வாள், முசலம், வேல், தோமரம், தண்டு, பிண்டி, பாலம் முதலிய படைக்கலங்களைச் சுமந்துகொண்டு எழுந்தனர். மலைபோன்ற உடல்களையுடைய அவர்கள் வீராவேசத்துடன் புறப்பட்டதைக் கண்ட தேவர்கள் அஞ்சியொளிந்தனர். அரக்கர்கள் இட்ட இரைச்சலால் கடல்கள் வாயடைத்தன.

அனுமான் அவர்களின் வரவைத் தூரத்திலிருந்தவண்ணமே கண்டான். தான் செய்த சூழ்ச்சி பயனளித்தது என்று அவன் மகிழ்ந்தான். அஃமகிழ்ச்சியால் அவன் திருமேனி இன்னும் அதிகமாக ஒளி வீசிற்று. அவனைக் கண்ட கிங்கரர், 'கண்டோம்! கண்டோம்!' என ஆர்த்தனர். "அடி! பிடி! குத்து! உதை! கட்டு! இழு!" என்று கத்தினர்; வாள்களையும் வேல்களையும் அவன் மீது வீசினர்; நாலாபக்கங்களிலும் வந்து அவனைச் சூழ்ந்துகொண்டனர்.

அவன் ஒன்றுக்கும் அஞ்சாமல் தன்மீது பாய்ந்த வீரர்களைக் கைகளாலும் கால்களாலும் பிடித்தும் துகைத்தும் சின்னபின்னப் படுத்தினான். தாள்களால் மடிந்தவர் பலர்; தடக் கைகளால் மாய்ந்தவர் பலர்; தோள்களால் மாண்டவர் பலர்; விழிகளின் பார்வையால் இறந்தவர் பலர்; இவ்வாறு கிங்கரர் படை மடிந்தது. எட்ட நின்றவர் ஓடோடியும் சென்று இராவணனிடம் நடந்த செய்தியை உரைக்காமலுரைத்தனர். உண்மையை முற்றிலும் அறியமாட்டாமல் அவன் அவர்களை மேலும் வினவ, "ஐய! நம் கிங்கரர் யாவரும் மாண்டனர்; அக்குரங்கை வெறுங்குரங்கென நாங்கள்

காண்கின்றிலம். மூவுலகையும் விழுங்க வந்த ஒரு புதிய யமனே அது" என்றனர்.

பகைவனைப் புகழ்ந்த வுரையைக் கேட்டறியாத இராவணன் என்றுமில்லாதவாறு பொங்கியெழுந்தான். அருகிலிருந்தவர் அனைவரும் யாது விளையுமோ என்று நடுநடுங்கினர். அப்பொழுது இராவணன் அங்கு நின்ற சம்புமாலி என்ற படைத்தலைவனை நோக்கி, "இக்குரங்கைத் தாம்பினைக் கட்டிக்கொண்டு வரும் ஆற்றல் உனக்குளதோ?" என்று வினவ அவன், "ஐய, இவ்வளவு வீரர்களுக்கிடையில் எனக்கு இப்பணி கிடைத்தது என்றால், இதனினும் பெரும் பேறு எனக்குண்டோ?" என்று சொல்லி வணங்கி நால்வகைப் படைகளைக் கூட்டிக் கொண்டு போருக்கு எழுந்தான். பல்லியங்கள் துவைப்ப, பணிலங்கள் முரல, தேர்ச்சில்லிகள் இடிப்ப, வாசிகள் சிரித்திட, தாரும் வில்லும் நின்றிசைப்ப, யானை முழக்கம் விட்டார்ப்ப அவனுடைய படைகள் நடந்தன. கொடிகள் வானத்தை வளைத்தன; தூளி திக்கெல்லாம் மறைத்தது.

இவ்வாறு தன்மீது பொங்கிவரும் பெரும்படையை வானரவீரன் கண்டான். அவர்களைக் கண்டதும் அவனுக்கு ஆவேசம் பொங்கிற்று; அதனில் அவன் ஓர் ஆர்ப்பினை எழுப்பித் தன் தோள்களைக் கொட்டினன். அவ்வொலியால் உலகெலாம் நடுநடுங்கிற்று. அவன் தன்முன் வரும் பெரும் படைக்கு எதிராகத் தன்னையும் தயாரித்துக்கொண்டான், அவனுடைய நாமம் செறிந்த நெற்றியே முன்னணியாயிற்று; உடலிலுள்ள உரோமங்களே நடுப் படைகளாயின; உகிர்கள் நீண்ட கைகளே பக்கப் படைகளாயின; திருவாலே கூழைப்படையா

யிற்று. இவ்வாறு படைவகுத்துக்கொண்டு வீரனும் நின்றான்

போர் தொடங்கிற்று. பல்லாயிரக்கணக்கான ஆயுதங்கள் அவன்மீது எறியப்பட்டன. அவற்றையெல்லாம் அவன் கைகளாற் பற்றிப் பிசைந்தொடித்தெறிந்தான் அதனைக் கண்ட சம்புமாலியின் படைகள் அவன்மீது நாற்புறங்களினின்று தாக்கத் தொடங்கின. அதன்மேல் அவன் தான் நின்ற விடத்தினின்றே எதிர்க்கப் முடியாதென்றெண்ணி எழுந்து, கையில் ஓர் எழுவை பிடித்துக் கொண்டு சாரி சுற்றத் தொடங்கினான்.

எழுந்தான்; இழிந்தான்; உயர்ந்தான்; திரிந்தான்; புரிந்தான். அவன் இன்னது செய்தான் என்று எவரும் அறிந்திலர். பலர் அவனைக் கண்டு அஞ்சி ஓடினர். சிலர் அவன் ஓய்ந்தனனென்றெண்ணி அவனண்டை நெருங்கினர்; அனைவரையும் அவன் பிடித்துத் துகைத்தான். இடக்கையால் ஆயிரம் ஆயிரமாக யானைகளை அழித்தான். குதிரைகளும் காலாட்களும் உடைந்தனர்; ஓடிந்தனர்; இடிந்தனர்; மடிந்தனர். அவன் கரிகளைக்கொண்டு கரிகளையும் பரிகளைக்கொண்டு பரிகளையும் முடித்தான். அரக்கர் பலரும் மூளை சிதைந்தவராய், தலையிழந்தவராய், கைபொடிந்தவராய், காலொடிந்தவராய் அழிந்தனர். சம்புமாலியும் இறந்தான்.

இச்செய்தியை அறிந்த நகரத்தார் பெரிதும் புலம்பினர். அரக்கியர் போர்க்களங் குறுகித் தத்தம் கணவன்மார் உடலைக் கண்டு கட்டிக்கொண்டு அரற்றினர். இராவணன், "நானே சென்று இக்குரங்கைப் பிடிப்

பேன்" என்றெழுந்தான். அவனருகில் ஐவர்சேனாபதிகள் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் அவனைத் தடுத்து "ஐய! தாங்கள் ஒரு வெறுங்குரங்கின்மீது போர்க்கெழுத லென்பது கருடன் ஒரு கொசுகின்மீது எழுவதற்கு ஒக்கும். தங்கள் பெயரை நினைத்தமாத்திரத்தில் நடுங்கிக் குலுங்கும் வெள்ளிக் குன்றமும் நகுமே! மூவர் முகங்க ளும் முறுவல் பூக்குமே! சம்புமாலி வலிமையற்றவன்; அவனை அனுப்பினமையால் இச்சிறுமை உண்டா யிற்று. எங்களை அனுப்புங்கள்; ஒரு நொடியில் அக் குரங்கினைப் பிடித்துத் தங்கள் திருவடியில் வைக்கி றோம்" என்றனர்.

இலங்கையரசனும் அச்சொற்களுக்கிசைய, பஞ்ச சேனாபதிகளின் பெரும்படைகள் புறப்பட்டன; அத் தோற்றம் ஐம்பெரும் பூதங்களும் ஒருங்கு திரண்டு எழுந்தது போலிருந்தது. முன் போர்களில் அவர்கள் வாசவனுடைய குலிசத்தையும், வருணனுடைய கயிற் றையும், இயமனுடைய எழுவையும், ஈசனின் சூலத்தை யும் எதிர்த்து வெற்றி பெற்றவர்கள். அவற்றால் பெற்ற வடுக்களையுடைய மேனியர்; குபேரனையும், பிரமனையும், இந்திரனையும் அவர்கள் போரில் பின்னடையக் கண்ட பெருமையுடையர். இத்தகைய வீரமும் பெருமையும் கொண்ட அரக்கர்கள் அசோக வனத்தில் நின்ற அனுமனை முற்றுகையிட்டனர்.

அவர்களைக் கண்டதும் அனுமன் ஆங்கிருந்த தோரணமண்டபத்தின் மீதேறிக் கொண்டான். தான் தனித்திருந்தும் சிறிதும் அஞ்சாமல் நிற்கும் அனுமனை அரக்கர்கள் கண்டு அவன்மீது ஆயிரம் ஆயிரமாக

ஆயுதங்களை வீசினர். அவையெல்லாம் அவன் உடலிற் பட்டதும் ஒடிந்து விழுந்துவிட்டன. அதனைக் கண்ட அரக்கர் அவன்மீது தேர்களையும் யானைகளையும்செலுத்தினர். அவற்றை அனுமன் தன் கைகளாலும் கால்களாலும் துகைத்தெறிந்தான். பஞ்சசேனாதிபதிகளுள் ஒருவரை அவன் தேரிலேயே மாய்த்தான்; ஒருவனை விண்ணில் எறிந்து வீழ்த்தினான். இருவரை இரண்டு கைகளாலும் ஏந்தி உயரத் தூக்கிப் பிடிக்க அவர்கள் அங்கு நின்றபடியே போரிட்டு இறந்தனர். ஐந்தாமவன் தரையில் நின்றுகொண்டே போரிட்டு உயிரிழந்தனன். இவ்வாறு ஐந்து சேனாதிபதிகளையும் அவர்களுடைய அளவற்ற சேனைகளையும் கொன்றுவிட்டு அனுமான் ஓரிடத்தில் சோர்ந்திருந்தான். அவன் உடற்புண்களினின்று குருதி ஆறாக ஓடிற்று.

★

11. உண்மை வெற்றியும் போலி வீழ்ச்சியும்

இச் செய்தியும் இராவணன் செவிகளில் விழுந்தது. அவன் பெருமூச்சுவிட்டான். அப்பொழுது அவன் உடல் அடைந்த வெப்பத்தால் மாலைகள் கரிந்தன; கண்கள் அரக்குண்டனபோலச் சிவந்தன. அக் காட்சியைக் கண்டு அவனுடைய மைந்தனான அட்சகுமாரன் அவன் அடிகளில் விழுந்து தான் போய் வென்று வருவதாகக் கூறி எழுந்தான். முன் சென்ற படைகளிலும் அதிகமானவை அவன் பின்னே சென்றன. சோலையில் தோரணத்தின்மீது நின்ற மாருதியைக்கண்டு அவன் நகைத்து, "இக் குரங்கைப் பிடிக்கவோ இவ்வளவு பெரிய முயற்சி! ஆ! நான் இதை மட்டுமன்று, இவ்வுலகத்திலுள்ள எல்லாக் குரங்குகளையும் கொன்று குவிப்பேன்" என்று கூறித் தன் படைவீரர்களை அனுமன்மீது ஏவினான். அனுமான் போரின் செறிவைக் கண்டு, "வந்தவன் இராவணனோ, அல்லது இந்திரஜித்தோ?" என்று முதலில் அயிர்த்து, பின் அவ்வயிர்ப்பு நீங்கி முன்போல் கடுமையான போர் புரிந்தான். போர் நெடுநேரம் நடந்தது. அரக்கர் படை குலைந்தது. அதனைக் கண்டு அட்சகுமாரன் தானே நேரில் வந்து அஞ்சனை மைந்தனோடு கைகலந்தான். அட்சகுமாரன் வாளால் போர் செய்ய ஆஞ்சனேயன் தன் தோளாலேயே அவனை இடித்துத் தள்ளி, வாலாலே இறுகக் கட்டி, அவனுயிரை முடித்

தான். தலைவன் இறந்ததைக் கண்டு எஞ்சிய படைகள் சிதறுண்டோடின. இலங்கை நகரம் துயரத்திலாழ்ந்தது.

தன் தந்தைக்கு வந்த இடுக்கணையும், அரக்கர் குலத்துக்கு வந்த இழிவையும் இராவணனின் மூத்த மகனான இந்திரசித்து கேட்டான். வெகுளியும் அவலமும் அவனை ஆட்கொள்ள அவன் பன்னிருநூறு பேய்கள் பூட்டிய தன் தேர்மீதேறித் தந்தை கோயிலை நோக்கிச் சென்றான். அவனுடைய சேனைகள் வீராவேசத்துடன் அத்தேரைப் பின்பற்றின. அக்கோலாகலத்தைக் கண்டு முத்தேவர்களும் பிரமித்தனர். இந்திரன் கவலையுளாழ்ந்தான்.

இந்திரசித்து தன் தம்பி இறந்ததை எண்ணிக் கண்ணீர்சொரிந்தான். அவன் தன் சிலையை அடிக்கடி நோக்கி, வாய்மடித்து உருத்து நகைத்தான் "மரத்தில் வாழும் ஒரு குரங்கு, 'என் தம்பியைக் கொன்றது என்று கூறுவது தகாது; என் தந்தையின் புகழைத் தின்றது' என்று கூறுவதே தகும்" என்று அடிக்கடி அவன் தனக்குள் சொல்லிக்கொண்டான். இவ்வாறு சென்று அவன் தன் தந்தையைக் கண்டு அவனடிகளில் விழுந்து அழுது, "ஐய, தங்கள் அறிவின்மையை எண்ணியெண்ணிவருந்துகின்றேன்; குரங்கு வலிமையுள்ளதென்பதை அறிந்தும் ஒருவர்மேல் ஒருவராகப் பல எளியர்களை அதன்மீது அனுப்பினீர்கள். கிங்கரர், சம்புமாலி, ஐவர் என்ற இவர்களெல்லோரும் சென்று தேய்ந்தனரே! அப்பொழுது அக் குரங்கு எப்படிப் பட்டது என்பதை அறிய வேண்டாவோ? அது கிடக்க, நான் இப்பொழுதே அதனைச் சென்று காண்பேன். தாங்கள்

கவலைகொள்ள வேண்டா" என்று சொல்லி அசோக வனத்தை நோக்கித் தன் தேரைத் திருப்பினான். அவனுடைய நால்வகைப் படைகளும் அவனை முந்திச் சென்றன.

செல்லும் வழியில் பல பிணக் குவியல்களை அப் படைகள் கடக்கவேண்டியிருந்தன. இந்திரசித்து அட்ச குமாரன் உடலைக் கண்டு, அதனில் மாருதியின் நகப் பதிவுகள் இருப்பதையும் அவ்வுடல் நொய்யப் புடைப் புண்டு நசுங்கிக் கிடப்பதையும் பார்த்துக் கண்ணீர் விட்டான். தன்மீது வரும் இந்திரசித்தை அனுமனும் பார்த்து, "இவ்வீரனை நான் கொன்றால் என் மனம் மகிழ்வுறும். இவனொழிந்தால் இராவணனுமொழிந் தான்" என்றெண்ணி இந்திரசித்தின் ஒளியைக் கொண் டாடினான்.

பெரும்போர் மூண்டது. அனுமான் ஒரு மாமரத் தைப் பிடுங்கிக்கொண்டு அரக்கர் பலரைத் தொலைத் தான். இந்திரசித்தின் வாளிகள் அனுமனைப் பலவிடங் களிலும் துளைத்தன. அனுமான் இந்திரசித்தைத் தேரி னின்று புரட்டி வீழ்த்தினான். இந்திரசித்து அனுமானை வெல்வதற்கு வேறொரு வழியையும் காணமல் பிரமாஸ் திரத்தை மந்திரித்த மாருதியின்மீது செலுத்தினான். அது நெருப்பினைக் கக்கிக்கொண்டு மாருதிமீது வீழ்ந்து அவனுடைய தோள்களை இறுகப் பிணித்துக்கொண் டது. அது சதுமுகன் படையென்பதை அனுமான் கண்டு அதற்குரிய மதிப்பைச் செலுத்தவேண்டுமென் றெண்ணி அடங்கிவிட்டான். அதனைக் கண்டு அரக்கர் பலரும் அவனண்டை வந்து அவனைப் பற்றி ஈர்த்துக் கொண்டு செல்லலாயினர்.

குரங்கு பிடிபட்டதென்று கேட்டதும் இலங்கா நகர அரக்கர் அடங்கா மகிழ்ச்சிகொண்டனர். தெருக்களிலும், மாளிகைகளிலும், கோபுரங்களிலும், மரங்களிலும் அவர்கள் நெருங்கினார்கள். வீட்டு வாயில்களிலும் சாளரங்களிலும் பெண்டிர் மொய்த்தனர். வீதிகளில் எட்புகவும் இடமில்லாமல் மக்கள் நிறைந்தனர்.

பிரமாஸ்திரம் ஓர் அரவின் உருவங்கொண்டு அனுமனைச் சுற்றிக்கொண்டதால் அதன் வாலைப் பல்லாயிரம் அரக்கர் பிடித்துக்கொண்டு அவனை ஈர்த்தனர். அவனைக் கண்டவர்களுட் பலர் அவன் கட்டுண்டு செல்கின்றானென்பதை உணராமல் அச்சத்தால் ஓடலுற்றனர். சிலர், 'இவன் அடங்கிச் செல்கின்றானென்று எண்ணவேண்டா: திடீரெனப் பாய்வான்' என்றஞ்சி ஒதுங்கி நின்றனர். தேவர்களும், வித்தியாதரரும், நாகலோகத்தவரும், 'இவனால் நம் கலி தீருமென்றிருந்தனமே! இவன் கதியும் இவ்வாறாயிற்றே!' என்றேங்கினர். தேவ ஸ்திரீகள், 'சீதைக்கு விடிவு காலம் வருமென்றிருந்தோமே! இவன் கதி இப்படியாயிற்றே!' என்று கண்ணீர் விட்டனர். அவனுடலைப் பார்த்தவர் 'இவன் மூத்தேவரும் கூடிய ஓர் உருவினனோ?' என்று ஐயுற்றனர். சில அரக்கர்கள், "இவனை வெட்டுங்கள்! குத்துங்கள்! கொல்லுங்கள்!" என்று கூச்சலிட்டனர்; அரக்கியர் பலர் அவன்முன் வந்து, "பாவிக் குரங்கே! எங்கள் கணவன்மாரின் உயிரைக் கொடுத்துப் போ" என்று கேட்டனர்.

இப்படிப் பலர் பலவாறு சொல்லிக்கொண்டிருக்க, அனுமன் நகர வீதிகளை நன்றாய் ஆராய்ந்துகொண்டே

சென்றான். முதல் நாள் இரவில் அந்நகர மாளிகைகள் முழுமையும் விளக்கமாக அவனாற் காணமுடியவில்லை. ஊரை நன்றாகக் காணவும், இராவணனை நெருங்கி நேராகச் சந்திக்கவும் இப்பொழுது வாய்ப்புகிடைத்தது; இதனை நழுவ விடலாகாது' என்று எண்ணிக் கொண்டே அனுமான் வாய் பேசாமல் நடந்தான்,

அசோக வனத்தில் சீதையின் செவிகளிலும் அனுமான் பிடியுண்ட செய்தி விழுந்தது. அவள் நெருப்பில் விழுந்த புழுப்போல் துடித்தாள். "வானத்தையும் உருவியெழுந்தனையே! உன் முற்றிய கலையறிவைக் கண்டு மகிழ்ந்தேனே! கடல் கடந்தும், கண்டகர் உடல் கடந்தும், உன் விதியை நீ கடந்திலையே! ஊழிக்காலம் வரையில் நீ வாழ்வாய் என்று கூறிய என் வாய் ஈரம் புலர்வதற்குள் இக் கதி உனக்கு வருவதோ? எனக்கு ஆருயிர் காட்டிய நீ உனக்கு இறுதி விளைய இடங் கொடுத்துக்கொண்டனையே!" என்றுஎண்ணிஏங்கினாள்,

★

12. இராவணனுக்குக் கூறிய அறிவுரையும் விளைவும்

அனுமானை இராவணன் முன்னிலையில் கொண்டு வந்து நிறுத்தினர். அவன் நாகத்தைக் கண்ட கருடன் போல் சினந்தான். 'தோளிற் கிடக்கும் இப்பாசத்தை உதறிவிட்டு இவன்மீது பாய்வேன்'' என்றெண்ணினான். ''உறங்கும்போது உயிருண்டல் பிழையென்று நின்றேன்; அசோகவனத்தில் நடப்பது இன்னதென்பதை ஆராய்வதற்காக ஓய்ந்தேன். இப்பொழுது எனக்குச் சமயம் வாய்த்திருக்கிறது. இதனை நழுவவிடலாகாது. இவன் பத்துத் தலைகளையும் இதோ சிந்துவேன்'' என்று சற்று எழுந்தான். ''இவனை வெல்ல முடியாமல் நான் மாள நேர்ந்தாலும் எனக்குப் புகழ்ச்சியே'' என்றெண்ணினான். அடுத்த கணம் அவன் மனம் மாறிற்று. ''இவனைக் கொல்வதோ வெல்வதோ எளிதன்று. இராமபிரானல்லாமல் வேறு எவரும் இவனைக் கொல்ல வல்லரோ? இவனாலும் என்னை வெல்ல இயலாது. ஆகவே இப்பொழுது நான் போருக்கெழுந்தால் அது எத்தனை காலம் நீடிக்குமோ? அன்றியும் 'அவனைக் கொல்வது என் கடன்' என்று சொன்ன பிரானின் மொழியும் பாழ்படும். இவற்றோடு, 'இன்னும் ஒரு திங்கள்தான் நான் உயிருடன் இருப்பேன்' என்று கூறிய தாயின் கருத்துக்கும் இடையூறுரும். ஆதலால், மிதமிஞ்சி நான் ஒன்றினையும் செய்தலாகாது. தூதனுய்

வந்த நிலையையே நிறைவேற்றுவேன்" என்றெண்ணிக் கோபந்தணிந்து நின்றான்.

அச்சமயத்தில் இந்திரசித்து அனுமனைத் தன் தந்தைக்குக் காட்டி, "இவன் சிவனோ, திருமாலோ அறியேன்; அரி உருவில் தோன்றியுள்ளான" என்று கூறி அறிமுகப்படுத்தி வணங்கினான். இரவணனுடைய கண்கள் அவன் கோபத்தைக் காட்டின; வாய்கள் புகைந்தன; உடல் உரோமங்களெல்லாம் பொடித்தன; அவன் பெரும்பாம்புபோல் உயிர்த்தான். அவன் அனுமனை நோக்கி, "இங்கு வந்த காரணம் யாது? நீ யாவன்?" என்று வினவினான். பின்னும் அவன், "நீ நேமியோ? குலிசியோ? நெடுங்கணிச்சியோ? தாமரைக் கிழவனோ? பூமி தாங்கும் பல்தலைப் பாம்போ? இவர்களுள் யாவன் நீ? அல்லது, நீ நீலக்காலனோ? அல்லது கிரௌஞ்சத்தை உருவின முருகனோ? தென்றிசைக் கிழவனோ? அன்றேல் திக்பாலர்களுள் ஒருவனோ? இல்லாவிடில் யாரேனும் முனிவர் ஒருவர் என்னை எதிர்ப்பதற்காக அங்கியில் எழுப்பிய பூதமோ? நீ இவர்களுள் யாவன்? இங்கு வந்த காரணம் யாது? அஞ்சாமற் கூறுக" என்றான்.

அவ்வினாக்களுக்கு ஆஞ்சனேயன் பின்வருமாறு விடையிறுத்தான். "நீ அடுக்கிக்கூறிய அவர்களுள் ஒருவனுமல்லேன்; அத்தகையோருள் ஒருவருக்குத் தொண்டு செய்பவனுமல்லேன்; உலகத்தில் தீமையை நீக்கி, அறத்தை நிலை நிறுத்துவதற்காகவே தோன்றியுள்ள ஒருவனின் தூதன் யான், அன்று முதலை வாய்ப்பட்ட யானையைக் காக்க வந்த அந்த ஆதிமூலமே அவன்.

அவனுக்கு அடிமை யான்; அனுமனென்னும் பெயரினன்; அவன் தேவியைத் தேடித் தெற்கு நோக்கி வந்த வாலி மைந்தன் படையைச் சேர்ந்தவன்" என்றான்.

இச்சொற்களைக் கேட்டு இராவணன் பத்து வாய்களும் திறந்து நகைத்து, "வாலிசேய் விடுத்த தூத! வாலி! வலியனோ? அவன் வாழ் அரசியல் நன்றோ?" என்றான்.

அதற்கு அனுமான் நகைத்து, "அஞ்சலை! அரக்கர் வேந்தே! அஞ்சலை! வாலி இவ்வுலகத்தைவிட்டு விண்ணுலகை யடைந்துவிட்டான். அவன் வாலும் அவனுடன் போயிற்று" என்று கூறி, இராமனுக்கும் சுக்கிரீவனுக்கும் உண்டான நட்பையும், வாலியின் வதையையும் விளக்கினான்.

அதனைக் கேட்ட இலங்கை வேந்தன், "மிக நன்று, தன் அண்ணனைக் கொன்ற அந்நியன் ஒருவனோடு நட்புப் பூண்டு செய்யும் அரசியல் மிக நன்று! அவன் சொல்லியனுப்பிய தூது யாது? உனக்கு ஊறு விளைவியேன்; அஞ்சாமல் பேசு" என்றான்.

நீதிமொழிகளை அரக்கனுக்குக் கூறினால் ஒருவேளை நன்மை யுண்டாகுமென்று மாருதி நினைத்தான். அவ்வண்ணமே அறத்தின் பெருமையையும் மறத்தினால் வரும் கேட்டையும் அவனுக்கு வற்புறுத்திக் கூறினான். காமத்தினால் விளையும் தீமைகளை அவன் விளக்கி, கற்பிற்கரசியாகிய சீதையை அவன் கவர்ந்ததால் அவனுக்குண்டாகப் போகும் தீமைகளைக் கூறினான். "அருமையாக நீ பெற்ற செல்வமும் உன் உயிரும் உன் கிளைஞரும் வாழவேண்டுமானால் சீதையை விட்டு விடு" என்று அவன் செவிகள் சுடுமாறு போதித்தான்.

"குன்றின் வாழும் ஒரு குரங்கா நமக்கு நன்மொழி கூறுவது!" என்று இராவணன் அவனை இகழ்ந்து பின்பு அவனை நோக்கி, "தூது வந்த நீ பொழிலை இறுத்து, அரக்கரைக் கொன்றது ஏன்?" என்று வினவ, அனுமன், "உன்னைக் காட்டுவாரில்லை; ஆதலால் காட்டினை அழித்தேன்; என்னை எதிர்த்தவர்களை வீட்டினேன்; பின்பு உன்னைக் காணவேண்டி மென்மைக் குள்ளானேன்" என்றான்.

இச்சுடு சொற்களை இராவணன் கேட்டுக் கடுங் கோபங் கொண்டு, "இவனைக் கொல்க" என்று கட்டளையிட்டனன். உடனே கொலையாளிகள் அனுமனை நெருங்கினர். அச்சமயத்தில் இராவணனின் தம்பியான வீடணன் எழுந்து, 'நின்மின்' என்ற கூறி, கொலைஞரை நிறுத்தி, அண்ணனை நோக்கி, "அரசநீதியை நன் கறிந்த பெரியோய்! "தூதுவந்தேன்" என்று அவன் இயம்பிய பிறகு அவனைக் கொல்லுதல் நீதியோ? மாதர், தவசி இவர்களைக் கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய் வில்லை தூதரைக் கொன்ற அரசர்க்கு" என்ற நூல் மொழியை மறந்தீர்களோ? தாங்கள் இவனைக் கொல்வ தால் நம் பகைவர்களின் நகைப்புக்கு இடம் கொடுத்த வர்களேயாவோம்" என்று கூற, இராவணன் வீடணன் கூற்றுக் கிணங்கி, "நல்லது, இவனது வாலை மூலமறச் சுட்டு எரியுங்கள்" என்று கட்டளையிட்டான்.

அயன்படை தோளிலிருக்கும் போது எவரையும் ஊறுபடுத்துதல் கூடாதென்ற நியாயத்தால் இந்திர சித்து அதனை முதலில் அப்புறப்படுத்தினான். அதனை எடுத்தவுடனே அருகில் நின்ற அரக்கர்கள் வலிய கயிறு களால் அனுமனை இறுகப் பிணித்தார்கள்.

13. அஞ்சிலே ஒன்று வைத்தான்

அனுமன் பிரமாஸ்திரம் தன்னை விட்டு நீங்கினதைக் கண்டு, "தெய்வப் படையை மீறினேனென்ற குற்றம் எனக்கு இனி வராது. இவர்கள் என் வாலைக் கொளுத்த முயலுதலும் நல்லதே. அவர்கள் இட்ட தீயினால் அவர்களின் ஊரையேசுடுவேன்" என்றெண்ணி அமைந்திருந்தான். அரக்கர்கள் நகரிலுள்ள கயிறுகளையெல்லாம் கொண்டுவந்து அவனைக் கட்டினார்கள். இச்செயலில் அரக்கியரின் நாண் கயிறுகளைத் தவிர அந்நகரத்தில் கிடைத்த கயிறுகள் யாவும் செலவிடப்பட்டன. அனுமன் எல்லாவற்றிற்கும் உட்பட்டிருந்தான். விஞ்சைகள் யாவற்றையும் அறியாதான்போல் நடிக்கின்ற "விஞ்சையன் போலும் பொய்யை மெய்போல் நடிக்கும் யோகிபோலும்" ஆஞ்சனேயன் அரக்கர்களின் இன்னல்களுக்கெல்லாம் உட்பட்டிருந்தான்.

அவனை அரண்மனையிலிருந்து இழுத்துக்கொண்டு, நகர்ப்புற வெள்ளிடைக்குக் கொண்டு வந்தனர். அங்கு வந்ததும் அரக்கர் அனுமனுடைய நீண்ட வாலில் கிழிகளைச் சுற்றி அதனை நெய்யில் தோய்த்துக் கடுந்தீக் கொளுத்தினர். அவ்வாறு கொளுத்திவிட்டு, அவன்மீது கட்டப்பட்டிருந்த கயிறுகளை இருபக்கங்களிலும் நூறு நூறாயிரம் அரக்கர்கள் பற்றிக்கொண்டு "இந்த ஊரை அழித்து, சீதையைக் கண்டு பேசி, அட்சகுமாரனையும் கொன்ற குரங்கைப் பாருங்கள்; வாருங்கள்" என்று அவர்கள் பெருங் கூச்சலிட்டார்கள். நகரின் சந்து

களிலும் பொந்துகளிலும் அவனை இழுத்துச் சென்று இச் செய்தியைப் பறையறைவித்து அறிவித்தார்கள். சிலர் அசோகவனத்துக்கும் ஓடிப் பிராட்டியிடமும் கூறினார்கள்.

அவள் பதைபதைத்து, "அக்னி தேவனே! நீயே உலகுக்கு ஒரு சான்று. உன்னைத் தொழுகின்றேன். அனுமானின் தந்தை உன் தோழனல்லனோ? நான் கற்புடைய தூயவள் என்பது உண்மையானால், அனுமனைச் சுடாதே" என்று வேண்டிக்கொண்டாள். உடனே அங்கிக் கடவுள் தன் இயற்கையை மாற்றிக் கொண்டு குளிர்ச்சியடைந்தான். அன்று கடலின் நடுவி லுள்ள வடவைக் கனல் குளிர்ந்தது; சிவபெருமான் நெற்றிக் கண்ணின் தீயும் தணிந்தது; அவன் கைந் நெருப்பும் தண்ணென்றாயிற்று; மேகத்து இடிகளும் குளிர்ந்தன; சூரிய மண்டலமும் குளிர்ந்தது: மீளா நரகமும் குளிர்ந்தது.

அனுமான் வாலிலிட்ட தீ மலையைவிட உயரமாக எரிந்தும், அது தன்னைச் சிறிதும் சுடாமையை அறிந்து "இந்து அம்மையின் அருளாலேதான் விளைந்திருக்க வேண்டும்" என்றுணர்ந்து அவளிருந்த திசையைநோக்கி வணங்கினான். அச் சமயத்தில் கதிரவனும் மறைய, நகரை இருள் சூழ்ந்துகொண்டது.

அனுமான் நகரில் தான் பார்க்கவேண்டிய இடங் களையெல்லாம கண்டாயிற்றென அறிந்தவுடன், வானத் தின்மீது ஒரே பாய்ச்சலாகத் தாவினான். அவ்வாறு எழுந்தவுடனே அவனைப் பற்றியிருந்த நூறாயிர அரக்கர் யாவரும் 'ஓ' என்றலறிக்கொண்டு விழுந்தழிந்

தனர். வானத்தில் அனுமான் அரக்கர்கள் தொங்கவும் வால் கொழிந்துவிட்டெறியவும் நின்ற தோற்றம் கருடன் பல அரவங்களைத் தொங்கவிட்டுக்கொண்டு பறந்ததுபோல் இருந்தது. அங்கிருந்து அவன் கீழே இறங்கி, 'இந்த நகரைச் சுட்டெரித்துவிட்டு நீங்குவேன்' என்று எண்ணி நகரம் முழுமையும் திரிந்து கண்களிற் பட்ட இடங்களையெல்லாம் கொளுத்தினன், யுகமுடிவு தான் நேர்ந்துவிட்டதென்று இலங்கை நகரத்தினர் கலங்கினர். மாளிகைகளும். சூளிகைகளும், வனங்களும், சோலைகளும் எரிந்தன. ஆஞ்சனேயன் இவ்வாறு நகரைக்கொளுத்திவிட்டுத் தன் வாலைக் கடலில்தோய்த்துத் தீயை அவித்தான். அனுமனிடமிருந்து விடுபட்டவுடன் தீ தன் இயற்கை வெப்பத்தை ஏற்றுக்கொண்டது. நகரம் நெருப்பினல் உருக்கப்பட்டது. அரக்கர் தம் உயிரைக் காத்துக்கொள்ள கடலிலும் குளங்களிலும் கிணறுகளிலும் மூழ்கினர்.

அனுமான் தான் வந்த காரியம் முடிந்ததை உணர்ந்து அந்நகரை விட்டு எழுந்தான். புறப்படுவதற்குமுன் சீதை இருந்த வனம் மட்டும் நெருப்பால் ஊறுபடவில்லையென்றறிந்து மகிழ்ந்தான்.

★

14. வெற்றியைத் தெரிவித்தல்

அனுமான் இடைவழியிலே மைந்நாகக் குன்றிற்குத்தான் முன் கூறியபடி சற்றுநேரம் தங்கி இளைப்பாறி வெகு விரைவாகச் சென்று தன் நண்பர்கள் தங்கியிருந்த மகேந்திரமலையிற் குதித்தான். அவனுடைய வரவை ஆவலுடன்நோக்கியிருந்த வானரர்கள் தாயின்வரவைக் கண்ட குஞ்சுகளைப் போல ஆரவாரித்து அவனை எதிர்கொண்டனர், அவனைக் கண்டதும் அவர்களின் மனம் விம்மிதத்தால் வெடித்துவிடும் போலாயிற்று. சிலர் அழுதனர் ; சிலர் ஆர்த்தனர்; சிலர் அருகில்வந்து தொழுதனர்: சிலர் ஆடித்துள்ளினர்: சிலர் அவனை விழுங்கி விடுவார்போல் மொய்த்தனர்; சிலர் அவனைச் சுற்றிச் சுற்றிவந்து தொழுதனர், சிலர் அவனைத் தூக்கிக் கொண்டு ஆடினர். சிலர் அருகிலுள்ள சோலைகளுட் புகுந்து சிறந்த பழவகைகளைக் கொண்டு அவனிடம் நீட்டி, "இவற்றை உண்டு களைப்பாறிப் பிறகு பேசுக" என்றனர். சிலர் அவனுடலெங்கும் நிறைந்து காண லுற்ற புண்களைக் கண்டு நெஞ்சுருகிக் கண்ணீர் விட்டனர்.

அனுமான் அங்கதனை முதலில் வணங்கிப் பிறகு சாம்பனையும் பிறரையும் வணங்கி எல்லோரையும் நோக்கி, "இங்கிருந்தோர்க்கெல்லாம் தேவி நன்மை சொல்லினள்" என்றான். அச்சொற்களைக் கேட்டதும் வானரர்கள் யாவரும் மகிழ்ச்சி பொங்கிப் பேராரவாரம் செய்தனர். அவர்கள் அனுமனை நோக்கி, "அண்ணலே

நீ போய்வந்த செய்தியை ஒன்றும் விடாமற் கூறுவாயாக" என்று கேட்டனர். அவனும் பிராட்டியின் தவ நிலையை முற்றிலும் கூறினனேயன்றித்தான் நிகழ்த்திய தொன்றையும் கூருமல் நின்ருன். ஆனல் அவர்கள், 'அனுமா, உனக்கு நிகழ்ந்தவை யாவும் நீ சொல்லாமலே எங்களுக்குத் தெரிய வருகின்றன. நீ போரிட்ட செய்தியை உன் புண்கள் கூறுகின்றன. அப்போரில் நீயே வென்ருய் என்பது நீ திரும்பி வந்ததால் தெரிய வருகிறது. நீ ஊரைத் தீயிட்டதை அங்கு உண்டான பெரும்புகையால் நாங்கள் அறிந்தோம். பகைவருடைய பெருமை தேவி உன்னுடன் வராமையாலேயே தெரிய வருகின்றது. இனி எங்களுக்குத் தெரிய வேண்டுவது யாது?" என்றனர்.

"இனித் தாமதித்தலாகாது; தேவியைக் கண்ட செய்தியைப் பிரானுக்கு உடனே தெரிவிக்கவேண்டும்' என்றெண்ணி அவர்கள் எழுந்து வடக்கு நோக்கி நடக்கலாயினர். செல்லும் வழியில், சுக்கிரீவனுக்குரிய மது வனம் என்ற சோலையை அவர்கள் அடைந்தனர். அப்பொழுது நல்ல உச்சிவேளை; பசியும் தாகமும் அவர்களை வாட்டிற்று. அவர்கள் அங்கதனை நோக்கி "இளவரசே! எங்களுக்கு உண்வு சிறிது அளிப்பாயாக; இம்மதுவனத்தில் நாங்கள் புகுந்து உண்ண இடம் கொடு" என்று கேட்டனர். அவனும் உடன்பட வானரங்களெல்லாம் சோலையுட் புகுந்து, அங்கிருந்த தேனைப் பருகின; கனிகளை அருந்தின; கிளைகளுக்குக் கிளை தாவின; காய்களை உதிர்த்தன. இதனைக் கண்ட சோலைக் காவலாளர்கள் வெகுண்டு, "மகாராஜாவுக்கு உரிய இச்சோலையை இவ்வாறு அழிக்கின்றனரே" என்று பார்க்க வாலி

சேயின் தலைமையிலுள்ள வானரப்படையே இச்செயலுக்குக் காரணம் என்பதை அவர்கள் உணர்ந்தனர். காவலர்களின் தலைவனான ததிமுகன் பெரிதும் அஞ்சி அங்கதனிடம் போய், "இவ்வாறு செய்தலாகாது" என்று கூறித் தடுத்தான். அங்கதன் அச்சொற்களைப் பொருட்படுத்தாமற் போகத் ததிமுகன் பின்னும் கூற இருவருக்கும் சண்டை உண்டாகிவிட்டது. அங்கதன் ததிமுகனை நன்றாகப் புடைத்துவிட்டான். அவன் ஓடோடியும் சென்று சுக்கிரீவனுக்கு அறிவிக்கலானான்.

அச்சமயம், நாற்றிசைகளிலும் சென்ற வானரர்களுள் ஒருவரும் திரும்பி வராததால் மிகுந்த கவலையுள் ஆழ்ந்து கிடந்த இராமனைச் சுக்கிரீவன் தேற்றிக்கொண்டிருந்தான். "சென்றவர் மாண்டுபோயினரோ! அல்லது காரியம் கைகூடாமையால் இன்னும் அலைந்துகொண்டிருக்கின்றரோ!" என்று அவன் ஏங்கிக் கொண்டிருந்தான்; அதனைப் பார்த்து அனைவரும் துயரில் ஆழ்ந்தனர். அந்நிலையில் ததிமுகன் அங்குச் சென்று தன் அரசனுக்கு மதுவனச் செய்தியைப் புகன்றனன்.

அச்சொற்களைக் கேட்ட சுக்கிரீவன் மனம் மகிழ்ச்சியடைந்தது. அங்கதன், அனுமன் முதலியோர் வெற்றியுடன் திரும்பி வந்தாலன்றி மதுவனத்துள் நுழையத் துணியமாட்டார்களென்பதை அவன் உணர்ந்து ததிமுகனை நோக்கி, "அவர்களை வெகுளேல்; உடனே இங்கு வரச் சொல்" என்று சொல்லியனுப்பி இராமனுக்கு ஆறுதல் மொழி கூறினான்.

★

15. இராமனின் உயிர் தளிர்த்தல்

இவ்வாறு அவர்கள் அங்கதன் முதலியோரை எதிர்பார்த்திருக்க, தெற்கே சூரியோதயம் உண்டானது போல் ஓர் ஒளி தோன்றிற்று. அனுமான் வருவதை இராமன் மிகுந்த அன்பு கனிந்த மனதுடன் பார்த்துக் கொண்டிருந்தான். அனுமான் அவர்களிருந்த இடத்தை அடைந்தான்; அடைந்தும் இராமபிரானையோ தன் அரசனையோ வணங்காமல் சீதையிருந்த தென்திசையை நோக்கித் தரையில் விழுந்து எழுந்தான். இச்செயலை இராமன் நோக்கினான்; குறிப்பினாலுணரும் ஆற்றல் பெற்ற இராமபிரான், "இவன் செயல் நன்று; சீதையும் உயிருடன் இருக்கிறாள்; அவளும் தன் கற்பில் தவறாமலிருக்கின்றாள்" என்று கண்டான்; அவன் உள்ளம் குளிர்ந்தது; உடல் பூரித்தது; அவன் மனத்தின் காதல் நீண்டது.

அனுமன் கைகளைக் கூப்பிக்கொண்டு, "கண்டேன்; கற்பினுக் கணியைக் கண்களால் கண்டேன்; ஐய! இலங்கையில் அம்மை தங்களைக் குறித்துக் கொடிய தவம் செய்துகொண்டிருப்பதைக் கண்டேன்.

'தங்கள் தேவி என்ற உரிமையும், அயோத்திமன்னரின் மருகி' என்னும் உரிமையும் அவள் நிலை நிறுத்திக் கொண்டாள். அவள் தன் உயர்நிலையினின்று சிறிதும் வழுவாமலிருப்பதைக் கண்டேன். பிறந்த குலப் பெயரும் புகுந்த குலப் பெயரும் அவளால் நன்கு

காப்பாற்றப்பெற்றுள்ளன. அந்த அம்மையே நான் வணங்கும் தெய்வம். அவளுக்கு அவளே ஒப்பு. உன் புகழையும் என் அடிமையையும் அவள் நிலைநிறுத்தி விட்டனள்.

"வீரரே! இலங்கையில் அவள் மானிட மாதாகவா காட்சியளிக்கின்றனள்? நற்குடிப் பிறப்பு, பெரும் பொறுமை, கற்பு இம் மூன்றும் அவளுருவில் களிநடம் புரிகின்றன என்றே சொல்லவேண்டும். அந்த அம்மை எப்போதும் தங்களையே நினைத்துக்கொண்டு காலந் தள்ளுகின்றனள்.

"இலங்கையில் அசோக வனம் என்ற சோலையில் தங்கள் தம்பி சமைத்த புற்குடிசையிலே தான் அவள் இருக்கின்றனள். அப்பெருங் கற்பினளை அப்பாவி தொடுவானானால் அவன் தலை வெடித்துவிடுமாதலால் அவன் அம்மையை மண்ணோடுப் பெயர்த்துப் போனான். அவள் படும் இன்னலையும் தனிமையையும் துயரையும் என்னால் சொல்லவியலாது. அவளைச் சூழ்ந்து அச் சந்தரத் தக்க அரக்கியர் சூழ்ந்திருந்து கடிய காவல் புரிந்துவருகின்றனர். நான் சமயம் பார்த்து அம்மையைக் காணவிருந்தபோது அக் கொடிய இராவணன் அங்கே வந்து அவள் கால்களில் விழுந்து வணங்கினன், அம்மை அவனை ஒரு துரும்பென இழித்துக் கூறி விடுத்தனள். அவன் ஒரு திங்கள் தவணை கூறி அகன்றான். அச் சமயம் நான் அம்மையைக் கண்டு வணங்கித் தாங்கள் கொடுத்த மோதிரத்தையும் கொடுத்தேன். அக் கணையாழியை அவள் தன் கண்ணீரால் நனைத்த முகத்திலும் கண்ணிலும் வைத்துப் பெரிதும் போற்றினாள்.

நான் அவள் நிலையை யாதென்று கூறுவேன்! 'என் நாதன் வரவு நோக்கி இன்னும் ஒரு மாதம் இருப்பேன்; அதன் பிறகு என் உயிர் உடலில் தங்காது' என்று அம்மை கூறி இச் சூடாமணியையும் தந்தாள்" என்று தன் ஆடையில் பொதிய வைத்திருந்த அவ்வணிகலனை எடுத்து இராமன்முன் நீட்டினான்.

அதனைப் பெற்றுக்கொண்ட இராமன் உணர்ச்சி வயத்தனானான். அவன் உடல் மயிர்க் கூச்செறிந்தது; கண்களினின்று நீர் ஆறாகப் பெருகிற்று. மார்புந் தோளுந் துடித்தன; வியர்வை தோன்றிற்று: வாய் மடித்தது; ஆவி வருவதும் போவதுமாக ஆயிற்று; உடல் பருத்தது. அப்பெருமான் உள்ளுணர்ச்சியை யாரே அறிவர்!

சுக்கிரீவன் தன் படைகளை உடனே இலங்கையை நோக்கி எழக் கட்டளையிட்டான். முரசங்கள் முழங்கின; வள்ளுவர் யானைமீதேறிப் போர்ச் செய்தியை பரப்பினர். சேனை எழுந்து கடல்போல் பரந்தது. நீலன் என்பான் முன்னணியிற் சென்றான். இராமபிரான் அனுமான் மீதும் இலக்குமணன் அங்கதன் மீதும் ஆரோகணித்துக்கொண்டனர். சுக்கிரீவன் முதலியோர் தத்தம் வாகனங்களில் ஏறிக்கொண்டனர். இவ்வாறு சென்று பன்னிரண்டு பகல்கள் கடந்து கடற்கரையில் போய்த் தங்கினர்.

★

16. போர்

வானரப்படைகள் தென் கடற்கரையில் வந்து தங்கின. அப்பால், இலங்கையில் இராவணன் அனுமானல் தனக்கு விளைந்த பேரிழிவை நினைத்து மனங்கலங்கினன். அவனுடைய தம்பியர்களுள் வீடணன் அவனுக்கு நற்சொற்கள் கூறி அவனை நல்வழியில் திருப்ப முயன்றான். அவன் அறத்தின் மேன்மையை அவனுக்கெடுத்துக்காட்டி அதன்வழி நிற்கவேண்டுமென மன்றாடினன்; இராமனின் கடவுட்டன்மையையும் இணையற்ற வலிமையையும் அவனுடைய அறநிலையையும் தன்னால் முடிந்தவரை வற்புறுத்தி, சீதையை அவனிடம் விட்டுவிடுவதே அரக்கர் உய்ய வழியென்று கூறினன். கொடுமதியான் இராவணனின் செவிகளில் அச்சொற்கள் நாராசம்போல் ஏறின; அவன் அளவு கடந்த கோபங்கொண்டு வீடணனை அச்சுறுத்த அவன் இனித் தான் உய்வதற்கு இராமபிரானிடம் சரணம் புகுவதே ஏற்றவழியென்றெண்ணித் தன் அமைச்சர் நால்வருடன் கடல்கடந்து இராமனிருக்கும் சூழலைவந்தடைந்தான். அவ்வாறு வந்த அரக்கர் தலைவனின் கருத்தை அறிந்த இராமபிரான் சுக்கிரீவன் முதலியோரை நோக்கி, 'நம்பால் வந்த வீடணனை ஏற்றுக்கொள்ளலாமா?' என்று வினவ, அனுமனையன்றி அனைவரும் அவனைச் சேர்த்துக்கொள்ளலாகாதென்று கூறிவிட்டனர். அனுமன் ஒருவனே 'ஒருவனைப் பிறப்பால் உணரக்கூடாது; குணத்தால் உணரவேண்டும்' என்றுகொண்டு வீடணனைச் சேர்த்துக்கொள்வதே

நல்லது என்று கூறினன். அச்சொற்களையே இராமன் ஏற்றுக்கொண்டான். அவ்வாறு அனுமன் கூறிய அறிவுரைகளின் உண்மையைப்பிறகு இராமனுக்கும் இராவணனுக்கும் நிகழ்ந்த போரில் அனைவரும் அறிந்தனர். அனுமனின் ஆராய்ந்துணரும் அறிவுக்கு இதனை ஒரு சான்ருகக் கூறலாம்.

பிறகு இராமன் வருணனின் உதவிகொண்டு, சேதுவைக் கட்டிக் கடலைக் கடந்து இலங்கையுட் புகுந்து இராவணனுடன் போர்புரியத் தயாராயினன். போரைத் தொடங்குவதற்குமுன் அங்கதனைத் தூதனுப்பி இராவணனுக்கு நல்லறிவு புகட்ட இராமன் விரும்பினன். தன் ஆணவத்திலே மயங்கிக்கிடந்த அரக்கனிடம் அங்கதன் சொற்கள் பயனற்றவாயின. எழுபது வெள்ளம் வானரப்படைகள் நகரை வளைத்தன. அனுமான் புறவாயிலில் நின்ருன். அங்கதன் தென் வாயிலில் நின்ருன்; நீலன் கீழ்வாயிலைக் காத்தான்; இராமனும் இலக்குமணனும் வடக்கு வாயில் நின்றனர். ஒவ்வொருவரிடமும் அவ்வளவு கடந்த சேனைகள் நின்றன. இரண்டு வெள்ளம் வானரர்கள் சேனைகளுக்கு உணவளித்துக்கொண்டு நின்றன. வீடணன்எல்லாவற்றையும்மேற்பார்வையிட்டுவந்தான்.

வானரப் படைகள் அகழிகளைத் தூர்த்து மதில்களின்மீது தாவத் தொடங்கின. இச் செய்திகளை யறிந்த இராவணன் தானும் தன் படைகளை அணிவகுத்துக் கொண்டு முனனே எழுந்தான்.

போர் மிக மும்முரமாக நடந்தது. 'இராம இராவண யுத்தத்துக்கு இராம இராவண யுத்தமே நேர்' என்ற பழமொழி பிறக்கும் வண்ணம் மிக உக்கிரமாகப்

போர் மூண்டது. இராவணன் அம்புக்குமுன் நிற்கமாட்டாமல் வானரப்படைகள் கலங்கின. அவர்கள் குன்றுகளையும் மரங்களையும் வாரி வீசினர்; அரக்கர் தம் படைக்கலங்களை அவர்கள்மீது வீசினர். சுக்கிரீவன், நீலன், அங்கதன், ஜாம்பவான் முதலிய மாபெரும் வீரர்கள் அரக்கர்களிற் பல்லாயிரவரைக் கொன்றனர். கும்பானு. பிரகத்தன், சுபாரிசன், முதலிய அரக்கர் படைத்தலைவர்கள் மாண்டனர்.

இச்செய்திகளை அறிந்த இராவணன் மனமுடைந்து தானேமுன்வந்து போர்தொடுக்கலாயினன். இராமபிரானும் அவனோடு எதிர்நின்று உறுத்தான். அவனருகில் நின்ற சுக்கிரீவன்மீது இராவணன் ஓர் அம்பை எய்ய அவன் அதனைத் தாங்கமாட்டாமல் ஓய்ந்தான். அதனையறிந்த மாருதி மிகவும் வெகுண்டு இராவணன்மீது ஒரு மலையைப் பிடுங்கி வீச, அரக்கன் பத்து அம்புகளை ஒரே நேரத்தில் தொடுத்து அம்மலையை ஆயிரங்கூறாக்கினான். மேலும் அனுமான் பல மலைகளை வீச, அவன் அவற்றையெல்லாம் பொடியாக்கி அனுமான் உடலிலும் பலவிடங்களிற் காயங்களை யுண்டாக்கினான். பின்னும் ஆஞ்சனேயன் ஒரு மாமரத்தைப் பிடுங்கி வீச அஃது இராவணன் சாரதியைச் சாய்த்தது. அதனைக் கண்ட இராவணன் பல தெய்வப்படைகளை அவன்மீது செலுத்த அவை அனுமனை அலக்கண் செய்தன. இவ்வாறு அனுமான் சலித்தபின் இலக்குவன்முன் போந்து இராவணனுடன் போர்புரியத் தொடங்கினான். அரக்கர் படை முறிந்தது. பிணங்கள் மலைபோல் குவிந்தன.

அனுமன் இதற்குள் அயர்வு நீங்கி எழுந்து இலக்குவன் போர் புரிவதைக் கண்டு ஓடிவந்து எதிர் புகுந்து

இராவணனை நோக்கி, 'முதலில் என்னோடு போரிட்டு முடிந்து மேலே செல்க' என்று உரக்கக் கூவி நின்றான். அப்போது அவன் உடலம் வானம் வரையில் வளர்ந்தோங்கியது. அவன் இராவணனை மேலும் நோக்கி, "பலவகைப் படைகளையும் உடையாய்! பத்துப் புஜங்களையும் பெற்றுள்ளாய்! உன் ஆண்மையை இதோ காண்கிறேன். வல்லையேல் என்னுடன் படை; என் கையினால் நான் ஒரு குத்துக்குத்த நீ பொறுப்பாயானால் ஏற்றுக் கொள்; பிறகு நீ அதற்குச் சாகாமல் நின்றாயெனில் நீ என்னை ஒரு குத்துக் குத்து;" என்றனன்.

இச்சொற்களைக் கேட்டு இராவணன் வியந்து, 'என் முன் நின்று எதிர்த்தோர் இதுவரை எத்தனையோ பேர்; எனினும், என்னுடன் எதிர்நின்று இவ்வாறு பேசியவர் எவருமிலர்; உன் வீரச் செயலை நான் முன்பே இலங்கையிற் கண்டுள்ளேன்; எனினும் இன்று உன் விருப்பத்துக்கு இணங்குவேன். என்னை முதலில் குத்துவாய்' என்றனன். அவ்வாறே அனுமான் தன் முழுவலியோடும் இலங்கேசனின் வயிரமார்பில் ஒரு குத்துவிட அவனுடைய விழிகளெல்லாம் பிதுங்கின; மூளை கலங்கிற்று; அவன் இருபது கைகளிலிலுமிருந்த ஆயுதங்களெல்லாம் கீழே விழுந்தன; பற்கள் ஒடிந்து விழுந்தன. முன்னொரு நாள் திக்கயங்கள் எட்டும் அவனோடு பொருது தோற்று, அவற்றின் தந்தங்களையெல்லாம் அவன் மார்பில் புகவிட்டோடின; அவ்வாறு கிடந்த அவை அன்று அனுமன் குத்தினதால் முதுகுப்புறமாகக் கழன்று வெளியே விழுந்தன. அவன் மார்பிலிருந்த வைரக்கவசம் கிழிந்தது. அவன் நிற்கவும் முடியாமல் சலித்தான். சிறிது நேரம் மூச்சிழந்தவனாக அவன் நின்று, பிறகு தெளிந்து

அனுமனை நோக்கி, "வீர! வலிமை இன்னதென்பதை இன்று உன்பால் உணர்ந்தேன். மெலிவு என்பது இன்னதென்பதையும் உணர்ந்தேன். நீயே வென்றாய்" என்று அவனைப் பாராட்டினன்; மாருதியோ "இராவண! நீயே என்னை வென்றாய்; என் குத்துக்குமுன் சாகாமல் நின்று பேசும் நீ, வலியனே! முன் நம் ஒப்பந்தத்தின்படி நீ இப்பொழுது என்னைக் குத்தவேண்டும்; அதனைச் செய்வாயாக" என்று தன் மார்பினைக் காட்டிக்கொண்டு நின்றான்.

இராவணன் தன் பற்களையெல்லாம் கடித்துக் கொண்டும், உதடுகளை மடித்துக்கொண்டும், கண்களிற் தீ பறக்கவும், தன் கையால் மாருதியின் மார்பில் ஓங்கி ஒரு குத்துவிட்டான். அதனை ஏற்ற அனுமான் இடியேறுண்டமலைபோல் சாய்ந்தான். அப்பொழுது இமையவர் உலகெலாம் சாய்ந்தது; அறம் சாய்ந்தது; மெய்ம்மொழி சாய்ந்தது; தகவு சாய்ந்தது; புகழ் சாய்ந்தது; சுருதியும் சாய்ந்தது; நீதியும் கருணையும் சாய்ந்தன.

இவ்வாறு அனுமன் சாய்ந்ததைக் கண்ட வானரர் ஓவென்று இரைந்துகொண்டு கற்களை எடுத்து இராவணன் மீது வீசினர். வானத்தை மறைத்துக் கொண்டு தன்மீது வரும் பெரும் கல்மழையை இராவணன் தன் அம்புகளால் விலக்கினன். பின்பு அவன் வானரப்படைமீது அம்புகளை ஏவ அவர்கள் யாவரும் இரிந்தோடினர். அச்சமயத்தில் இலக்குவன் முன் போந்து, அனுமன் இடையே புகுந்து நிறுத்தின போரைத் தொடங்கினன். உலகமே முடிந்துவிடுமோ என்று வானவர் அயிர்த்தனர். இலக்குவன்முன் தன்

அம்புகள் யாவும் பயன்படாமற்ற போக இராவணன் பிரமன் தனக்குக் கொடுத்த வேலை எடுத்து அவன்மீது மந்திரித்து எறிந்தான். பிரமனுடைய வரப்பிரசாதத்தால் அவ்வேல் இலக்குமணன் மார்பில் தைத்ததும் அவனைக் களத்திடை சாய்த்தது. அதைக் கண்ட வானரப்படைகளெல்லாம் ஓட்டமெடுத்தன. "இலக்குமணன் இறக்கவில்லை; உணர்விழந்தானுமல்லன்; ஆனால் வலியற்றவனானன். இவனை இப்படியே தூக்கிச் செல்வன்" என்று இராவணன் எண்ணி அவனைத் தரையினின்று தன் இருபது கைகளாலும் தூக்க முயன்றான். வெள்ளியங்கிரியைப் பெயர்த்தெடுத்த அவனால் இலக்குவனின் உடலைத் தூக்கவியலவில்லை.

இவ்வாறு அவன் வருந்திக்கொண்டிருந்தபோது சரேரென மாருதி அங்குப் புகுந்து ஒரு பூமாலையைக் கையில் ஏந்திக்கொண்டு எழுவதுபோல் இலக்குவனைத் தூக்கிக்கொண்டு வானிலெழுந்து இராமபிரானிருந்த விடத்தை யடைந்து அவன் திருவடிகளில் அவனை வைத்தான். வலிமையிலாகாத காரியத்தை அன்பினால் செய்து முடித்த அனுமனை யாவரும் புகழ்ந்தனர். இலக்குவனும் சக்தியின் வேகம் குறைந்ததும் தூங்கி எழுபவன்போல் விழித்தெழுந்தான்.

இராமன் தான் இனிச் சும்மாவிருத்தலாகாதென்று நேராக இராவணனுடன் போருக்கெழ அதனைப் பார்த்த மாருதி, "அரக்கன் தேரினிற் செல்ல என் ஐயன் தரையில் நிற்பது அழகின்று" எனக் கருதி இராமனை அண்மி, "ஐய! என் தோளில் ஏறிக்கொள்க" என்று பணிந்தான். அவனும் அவ்வாறு செய்ய, கன்று

தாங்கிய தாய்போல் அனுமன் இராமபிரானைத் தன் தோளின்மீது ஏற்றிக்கொண்டு களம் புகுந்தான். ஓதம் போன்ற மாருதியையும் அதனகத்துறையும் நாதனையும், வேதம் போன்ற அடியானையும் அதன் சிரம் போன்ற அண்ணலையும் கண்ட அனைவரும் ஆர்த்தனர்.

இராம இராவணப் போர் நேராகத் தொடங்கிற்று. இராவணனுடைய படைகள் யாவும் ஒழிந்தன ; அவனுடைய மாவும் களிறும் பட்டன ; தேர் ஒடிந்தது ; குதிரைகள் அழிந்தன; படைக்கலங்களெல்லாம் முறிந்தன; அவன் முடியும் தகர்ந்தது. அவன் யாவும் இழந்து தரையை விரல்களாற் கிளைத்துக்கொண்டு நின்றான். இருபது கைகளையும் பத்துத் தலைகளையும் அவன் தொங்கவிட்டு நின்றது விழுதுகளோடு நின்ற ஆலமரம்போலிருந்தது. அவனைக் கண்டு இராமன், 'இந்நிலையில் இவனைக் கொல்லுதல் நன்றன்று' என்றெண்ணி, 'இன்று போய் நாளை வா' என்று சொல்லியனுப்பினான். இவ்வாறு முதற் போர் முடிந்தது.

பின்பு இராவணனின் தம்பி கும்பகருணனும், மகன் அதிகாயனும் ஒருவர் பின்னொருவராகப் போர் புரிந்து பட்டனர். அப் போர்களின் கொடுமை சொல்லுந்தரமன்று. அதிகாயனுடைய சேனைவீரர் கணக்கற்ற யானைப் படையோடு மும்முறை வந்து எதிர்க்க அப் படைகள் யாவற்றையும் அனுமன் ஒழித்தெறிந்தான். தேவாந்தகன், திரிசிரசு, நிகும்பன் என்னும் அரக்க சேனைபதிகளையும் அவனே கொன்றான்.

இப்போர்களுக்குப் பின் இராவணன் பெரிதும் வருந்தினான். அவனுடைய மூத்த மகனும் இளவரசனும்

இந்திரசித்து என்னும் சிறப்புப் பெற்றவனும் முன்பு தன் பிரமாஸ்திரத்தால் அசோக வனத்தில் அனுமானை வென்றவனுமான மேகநாதன், 'நான் இலக்குவனைக் கொல்வேன்' என்று சபதம் கூறிக்கொண்டெழுந்தான். அவன் கையில் பிடித்திருந்த வில் பிரமன் இந்திரனுக்கு முன்னொரு காலத்தில் கொடுத்தது. அவனுடைய அம்பறாத்தூணி யமனும் புகுந்து குடியிருக்கத்தக்கது. இன்னும் சிவபிரானும் பிற தேவர்களும் அவனுடைய தவத்துக்கிரங்கி அளித்த பல படைக்கலங்களும் அவனிடம் இருந்தன.

இலக்குமணனுக்கும் இந்திரசித்துக்கும் நடந்த போரின் கொடுமையைச் சொல்வது எளியதன்று. சுக்கிரீவன் முதலிய வானரவீரர்கள் பலமுறை தோற்றுச் சலித்தனர். இலக்குமணன் அனுமான்மீது ஏறிக்கொண்டு கடும்போர் புரிந்தான். இந்திரசித்து பல முறை தோற்றான்; அனுமான் அவனுடைய தேர்க்குதிரையைக் கொன்று தேரை உருட்டினான். இந்திரசித்து தான் தோற்று வருவதைக் கண்டு நாகபாசத்தை எடுத்துக்கொண்டு வானத்தில் எழுந்தான். அவன் அங்குச் சென்று தன்னை எவரும் காணமுடியாதபடி மிக நுட்பமான உருவத்தையெடுத்துக்கொண்டு அஸ்திரத்தை அபிமந்திரித்து இலக்குமணன் மீது வீசினான். அவ்வஸ்திரத்தின் தன்மையால் வானரர் அனைவரும் தத்தம்மீது ஆயிரம் அம்புகள் பட்டவர்போல் வீழ்ந்தனர். இலக்குமணன் தன் நினைப்பொழிந்து வானத்துக் கதிரவன் அறுந்து கீழே வீழ்ந்தது போலச் சாய்ந்தான். இலக்குவன் இறந்துவிட்டான் என்று அனைவரும் அழுங்கினர். இராமன் தானும் உயிரைத் துறந்துவிடலாமென்று

தீர்மானித்தான். அச்சமயம் கருட பகவான் அங்கே எழுந்தருள நாகபாசம் இருந்த விடந்தெரியாமல் மாய்ந்தது. இந்திரசித்து தன் முயற்சி வீணானதைக் குறித்து மனமாழ்ந்து திரும்பினான்.

பின்னும் பல அரக்க வீரர்கள் வானரப்படைகளோடுபோரிட்டுமாய்ந்தனர். அப்போர்களிலும் அனுமானின் பங்கு அதிகமேயிருந்தது. இந்திரசித்து தன் பக்கம் தோற்றுக்கொண்டே வருவதை எண்ணி, மறுமுறையும் போருக்கெழுவது என்று தீர்மானித்துக் கொண்டான் அவன் அறுபது வெள்ளம் தானையோடு புறப்பட்டு அப்படையைக் கிரௌஞ்ச வியூகம் என்ற முறையில் நிறுத்திச் சங்கநாதம் செய்தான். அதனைக் கேட்டு இராமன் அனுமான் மீதும் இலக்குமணன் அங்கதன் மீதும் ஏறிக் கொண்டு மற்றைப் படைத்தலைவர்களைப் பின்னே வருமாறு ஏவி முன்னே சென்றனர். அகோர யுத்தம் நடந்தது. அனுமான் தன் தோளைத் தட்டிய ஆரவாரத்தால் பல்லாயிரக் கணக்கான அரக்கர்கள் மாய்ந்தனர். இந்திரசித்து தான் எதிர்த்து நிற்க இயலாமல் தன் மாயையால் தன்னை மறைத்துக் கொண்டு வானத்தில் ஏறி, பிரமாஸ்திரத்தை விட ஏற்பாடு செய்தான், அவன் அஞ்சி ஓடி விட்டான் என்று வானரப் படைகள் கருதினர். இராமபிரான் வீடணனைப் படை வீரர்களுக்கு உணவு சேகரித்து வருமாறு அனுப்பி விட்டுத் தான் அத்திரபூஜை செய்யப் போய் விட்டான். அச்சமயம் நோக்கி இராவணன் மகோதரன் என்ற தளகர்த்தனைப் போருக்கு அனுப்ப அவன் பல சிறந்த சேனை வீரர்களுடன் பல விடங்களிலும் போரை எழுப்பினான். அனுமன் முதலியோர் அவர்களுடன் சண்டையிட்டனர்

17. சஞ்சீவி அனுமான்

அச்சமயத்தில் இந்திரசித்து இலக்குமணனை நோக்கித் தன் பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்தான். அதன் வேகத்தால் இலக்குமணன், அனுமன், சுக்கிரீவன், அங்கதன், நீலன், மயிந்தன் துவிவிதன், சுடேணன், கேசரி முதலியவானரத்தலைவர் யாவரும்தாக்குண்டு மயங்கிச் சாய்ந்தனர். இவ்வாறு வானரப் பெருவீரர் அனைவரும், இலக்குமணனும் ஒடுங்கினதைக்கண்டு அவர்கள் யாவரும் இறந்தனரென்றெண்ணி மகிழ்ந்து இந்திரசித்து தன் அரண்மனைக்குத் திரும்பினான்.

ஸ்ரீராமன் அத்திரபூஜ்ஜையை முடித்துக் கொண்டு வந்து பார்க்கையில் தன் தம்பியும் பிறரும் மூர்ச்சையற்றுக் கிடப்பதைக் கண்டு மனங்கலங்கி மிகவும் பரிதபித்துத் தானும் சாய்ந்து விட்டான். இதனைக் கண்ட அரக்கர் ஓடோடியும் சென்று இராவணனுக்குக் கூற; அவன் அகமகிழ்ந்து, தன் அருகில் நின்ற அரக்கியரை நோக்கி, "சீதையை விமானத்திலேற்றிப் போர்க்களத்தைக் காட்டி வாருங்கள்" என்று கட்டளையிட்டான். அக்கோரக் காட்சியை கண்ட பிராட்டி பெரிதும் வருந்தினாள். அவளருகிலிருந்த திரிசடை அவளைத் தேற்றி, இராமலக்குமணர்கள் இறக்கவில்லையென்றும், சோர்ந்துதான் இருக்கிறார்களென்றும் அவர்கள் முகக் குறிகளினின்று தான் அறிவதாகக் கூறினாள்.

இங்கு இஃது இவ்வாறாக, உணவு தேடச் சென்ற விடணன் திரும்பி வந்து இந்திரஜித்தின் பிரமாத்திரத்தால் விளைந்த இன்னல்களைக் கண்டு, மெதுவாக அனு

மானிடம் சென்று, அவன் உடலைத் தடவி எழுப்பினான். பிறகு அவ்விருவரும் சாம்பனை எழுப்பினார்கள். சாம்பன் நடந்தவற்றையெல்லாம் உணர்ந்து விரைவில் அனைவரையும் பிழைப்பிக்கச் சஞ்சீவியைக் கொண்டு வரவேண்டுமென்றும் அதனை அனுமனே செய்ய வல்லவனென்றும் கூறினான். அம் மருந்தின் பெருமையையும் அது இருக்கும் இடத்தையும் அறிந்துகொண்டு, மாருதி தன் பேருருவை எடுத்துக்கொண்டு மேருமலையை நோக்கி வடக்கே பாய்ந்தான். அவன் வாலை வளைத்துக் கொண்டும், கையை உயர்த்திக்கொண்டும், வாயைச் சிறிது அகற்றி மடித்துக்கொண்டும், மார்பை விரித்துக் கொண்டும், கழுத்தைச் சுருக்கிக்கொண்டும் பிறந்த காட்சியைக் கண்டு விண்ணவர் யாவரும் வியந்தனர். அவன் சென்ற வேகத்தால் மழைக் குலங்கள் கிழிந்தன; கடல்கள் பிளந்தன; விண்மீன்கள் உதிர்ந்தன; மலைகளும் மரங்களும் பின்தொடர்ந்தன. இவ்வாறு காற்றை விட வேகமாகப் பாய்ந்து சென்று இமயம், கயிலை, ஏமகூடம், நிடதம் முதலிய மலைகளைக் கடந்து, உத்தரகுரு என்னும் நாட்டைஅடைந்து நீலமால்வரைக்கு அடுத்து நின்ற மருத்துமலையைக் கண்டான்.

சாம்பன் சொன்ன அடையாளங்களால் அம்மலையின் தன்மைகளை அவன் உணர்ந்து, அதனைக் காத்து நின்ற தெய்வங்களின் அனுமதியைப் பெற்று அதனைப் பெயர்த்துக் கொண்டு மேலே எழுந்தான். அனுமான் இவ்வாறு திரும்பிக்கொண்டிருக்கையில் சாம்பனும் விடணனும் இராமபிரானை மெதுவாக எழுப்ப, அவன் எழுந்து இலக்குமணனை இழந்ததால் தான் படும் துயரங்களைப் பலபடியாகச் சொல்லி வருந்தினான்.



சஞ்சீவி அனுமான்

சாம்பன், மாருதி மருத்துவ மலைக்குச் சென்ற செய்தியைக் கூறி அவனைத் தேற்றிக்கொண்டிருக்க, வடதிசையினின்று பேரொலியொன்று கேட்டது; பெருங்காற்றொன்று வீசிற்று; வானத்திலிருந்த விண்மீன்கள் நிலைகுலைந்தன; அனுமானுடைய ஆரவார ஒலி கேட்டது.

அவ்வொலி வானமும் மண்ணும் ஒருமித்து ஒலித்தனபோலும் கேட்டது. 'அனுமன் தான் வந்தனன்' என்று சாம்பன் கூறுமுன்னே அவனும் வந்திறங்கினான். மலையின்மீது அடித்த காற்று வீச இறந்தவர் அனைவரும் உயிர்பெற்றெழுந்தனர். யோகம் நீங்கி எழுந்த முனிவன்போல் இலக்குமணன் உணர்வுபெற்று எழுந்ததைக் கண்டு இராமன் பெருமகிழ்ச்சியடைந்து அவனை மார்புறத் தழுவிக்கொண்டான். அப்பொழுது வானத்தில் துந்துபி முழங்கிற்று; வேதங்கள் ஆர்த்தன. இராமன் அனுமனைத் தழுவிக்கொண்டு, "தாயினும் அன்ப! தசரத சக்கரவர்த்தியின் புதல்வர்களாகப் பிறந்த நாங்கள் பிரமாத்திரத்தால் இறந்தோம். இன்று உன்னிடம் தோன்றினோம். எமக்கு உயிரைக் கொடுத்ததோடு எங்களுக்குப் பழி வராமலும் எங்களைக் காத்தாய். எங்கள் குலத்தையும் அழியாமற் காத்தாய். எங்கட்குச் சற்று நேரம் உண்டான துன்பமும் ஒரு வகையில் எனக்குச் செய்த உபகாரமேயாகும். ஏனெனில் என் தம்பியின் அருமையை நான் மூர்ச்சித்துக் கிடந்தபோதுதான் உணர்ந்தேன். ஐயனே! சமய சஞ்சீவியாக நீ வந்து உதவினாயே! எங்களுக்கு வாழ்வளித்த நீ இன்னல் நோயுறாது என்றும் வாழ்தி" என்று கூறினான். ஏனையோரும் அனுமனைத் தொழுது வாழ்த்தினர்.

18. மாருதி மயக்கமுற்றது

இங்கு நடந்தவற்றையெல்லாம் இராவணன் கேட்டு மாருதியின் உதவியால் பிரமாத்திரம் பயனற்றுப்போன செய்தியைக் கேட்டு மிகவும் வருந்தினன். அப்பொழுது இந்திரசித்து அவனை நோக்கி, "ஐய, நீங்கள் கவலையுற வேண்டா. நான் நிகும்பலை என்றவிடத்திற்குச் சென்று வேள்வியொன்று புரிந்து எவராலும் வெல்லவியலாத அரிய படைகளைப் படைத்து வருகிறேன். ஆனால் உங்கள் தம்பி என் கருத்தை அறியவருவானானால் அவ் வேள்வியை எப்படியும் கெடுக்க முயல்வான். அதன் பொருட்டு ஒரு யுக்தி செய்ய எண்ணியிருக்கிறேன். அதாவது சானகியைப்போல் ஒரு மாயாவுருவைச் செய்து அனுமான் முன்னிலையில் அவ்வுருவைச் சிதைத்து வடக்கே அயோத்தியை நோக்கிப் படையெடுப்பது போல் பாசாங்கு காட்டி வருகிறேன். அவர்கள் ஏமாந்து மயங்கிக்கொண்டிருக்கையில் நான் வேள்வியை முடித்து வருகிறேன்" என்று கூறினன்.

இராவணன் அதற்கிணங்க, இந்திரஜித்து தன் மாயத்தால் ஒரு சீதையைப் படைத்து அவளைக் கூந்தலைப் பிடித்து இழுத்து வந்து, அனுமான் நின்றவிடத்துக்கு அயலிலே, அவன் தன்னைப் பார்க்கத்தக்க ஓரிடத்தில் நின்று, "இப்பாவி காரணமாக எந்தை அடையத் தகாத துயரை அடைந்தனர்; இவளை இப்பொழுதே கொல்வேன்" என்று உரக்கக் கூறித் தன் வாளை ஓச்சினன்.

அக்கொடுஞ் செயலைக் கண்ட அனுமான் தான் காண்பது நனவோ கனவோ என்று ஐயுற்று, பின்பு தெளிந்து, "ஐயோ" என்றலறிக் கொண்டே இந்திர ஜித்திடம் ஓடி அவனைப் புகழ்ந்தாவது அத்தீவினையைத் தடுக்க எண்ணி, "குணம் மிக்கவனே! பெண் கொலை பொல்லாது என்பதனை நீ அறியாயோ! நான் முகன் குலத்தில் தோன்றியவனே! என் சொல்லைக் கேள். பெண் கொலை தகாது" என்று கூறினான். இந்திர ஜித்து, "இவளால் என் இலங்காநகரமே அழிந்தது; இவளைக் கொல்வதில் யாதொரு பழியுமில்லை; இவனை யும் கொல்வேன்; உடனே சென்று அயோத்தியையும் எரிப்பேன்" என்று சொல்லி அம்மாயா உருவத்தை வெட்டி உடலை தன் விமானத்திலேற்றிக் கொண்டு வடக்கு நோக்கிப் புறப்பட்டான்.

அவற்றையெல்லாங் கண்ட அனுமான் மூர்ச்சையுற்று மண்ணில் வீழ்ந்து பின்பு எழுந்து பலவாறு புலம்பலானான். "என் அன்னையே! பெண்ணின் அருங் கலமே! இதனைக் காணவோ நான் பிறந்தேன்! இதற்காகவோ கடல் கடந்தேன்! இதற்காகவோ போர் புரிந்தேன்! கற்பினுக்கு அணிகலமே! 'கண்டேன் சீதையை' என்று கூறிய வாயால் இராமபிரானுக்கு இச் செய்தியையும் கூறுவேனோ? என்னே காலம்! பாதக வரக்கன் தெய்வ பத்தினியைத் தொட்டானே! தவத் துளாளைத் தபுத்தானே! அப்பாவி அவளை வெட்டக் கண்டு நின்ற நானல்லனோ பாவி! ஏ! சீதா! உன்னை நோய் செய்தாரை வெல்விக்க வந்து உன்னைக் கொல் விக்க உதவினேனே! என்னே என்பெருமை! மருத்துவ மலையைக் காட்டி இராமனை மகிழ்வித்த நான் அவனி

டம் சென்று, 'உன் மனைவி துஞ்சினள்; நான் பார்த்துக் கொண்டு அயல் நின்றேன்' என்று கூறுவேனோ? அப்படிக் கொன்ற அப்பாதகனைத்தான் கொன்றேனா? அதுவும் செய்யத் தவறினேனே!" என்று பலவாறு புலம்பி, "அப்பாதகன் அயோத்தி மீது எழுந்தான்; அதனையாவது காலத்தில் ஐயனிடம் தெரிவிப்பேன்" என்று தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டு இராம னிருந்த விடத்தை நாடினான்.

அவனைச் சார்ந்ததும் அனுமான் துயர்மிகுதியால் கீழே விழுந்துவிட்டான். அவன் அங்கங்களும் மனமும் கண்ணும் ஆவியும் அலக்கண் உற்றன; அவன் பொருமினான்; பெருமூச்சுவிட்டான்; அவன் கண்களினின்று நீர் ஆறாகப் பெருகி அவன் திருவடிகளை அலம்பின. இராம னுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அவன் அனுமானைக் கைகளால் தூக்கி நடந்ததைக் கேட்க அனுமான் தான் கண்டதை மெதுவாக விளம்பினான். அப் பொழுது இராமன் அடைந்த துயரை யாரே கூறுவர்! அவன் மூர்ச்சித்துக் கீழே விழுந்தான். வீடணன் செய்த உபசாரங்களால் அவன் விழித்தெழுந்து சீதையை எண்ணி எண்ணிப் புலம்பலானான். சுக்கிரீ வன், "இனி ஒரு நொடி தாளேன். இராவணனை உடனே கொன்று வருவேன்" என்றெழுந்தான்.

அப்பொழுது அனுமான் இந்திரசித்து அயோத் திக்கு எழுந்த செய்தியைத் தெரிவிக்க இராமனுடைய மனம் பரதன்பாலும் அயோத்திலுள்ள பிறர்பாலும் சென்றது. அவர்களை எண்ணி அவன் பெரிதும் புலம்ப இலக்குவன் அண்ணனை நோக்கி, "நன்று

யிருந்தது நம் துயரம். மாற்ருெருவன் மனைவி யைக் கொன்று தம்பிமீது போர்க் கெழுந்தான்" என்று கேட்டும் அழுதுகொண்டிருப்பதோ ஆண்மை, பழிக்குப் பழி வாங்க வேண்டாவோ?" என்று வீரமொழி பகர, அனுமன் இலக்குமணனை வேண்டி, "ஐயா, தாங்கள் என்மீது ஏறிக் கொள்ளுங்கள்; ஒரு நொடியில் நான் தங்களை அயோத்திக்குக் கொண்டு செல்கிறேன்" என்று கூறி ஆயத்தமாக நின்ருன்.

இவற்றை யெல்லாம் கண்டு ஆழ்ந்த ஆராய்ச்சியில் இறங்கிய விபீடணன் அனைவரையும் நோக்கி, "ஐயன்மீர்! என் மனம் ஐயமுறுகின்றது. பத்தினியைப் பாதகன் தன் கைகளால் தீண்டியிருப்பாளுனல் அக்கணமே மூன்று லகும் தீய்ந்து போயிருக்கும். அன்றியும், இராவணன் எவளுக்காகத் தன் உயிரை வைத்திருக்கிருனே அத் தகைய திருவைக் கொல்லச் சம்மதிப்பாளு? மேலும் அயோத்திமேல் சென்ருன் என்ற சொல் சித்திரமாயிருக் கிறது. எல்லாம் மாயையாயிருக்கலாம். சற்றுப் பொறுங்கள். நான் வண்டினுருவங்கொண்டு நகருக்குள் புகுந்து உண்மையை அறிந்து வருகிறேன்" என்று சொல்ல அனைவரும் அதற்கிணங்கினர்.

வீபீடணன் நேராக அசோகவனத்திற் புகுந்து பிராட்டி உயிருடனிருப்பதையும், நிகும்பலையை நோக்கி யாகப் பொருள்கள் சென்றுகொண்டிருப்பதையும் கண்டு பரபரப்புடன் திரும்பிவந்து உண்மையைக் கூறி யாவரின் இடுக்கணையும் தீர்த்தான். பிறகு வீடணனும் இலக்குவனும் நிகும்பலைக்கேகி அங்கு இந்திரஜித்து செய்து கொண்டிருந்த வேள்வியை அழித்தனர். அனும

னும் கூடச் சென்றிருந்தான். இருதிறப் படைகளுக்கு மிடையே கொடும்போர் விளைந்தது. இந்திரஜித்து பிரமாஸ்திரம், நாராயணுஸ்திரம், பாசுபதாஸ்திரம் முதலிய பெரும்படைகளை விட்டும் தோல்வியுற்று ஓடினான்.

அவன் இராவணனிடம் சென்று இராமலக்குமணர்களை வெல்வது அரிது என்றும் சீதையை விட்டுவிடுவதே சிறந்தது என்றும் கூறினான். அதனைக் கேட்ட அரக்கனுக்குச் சினம் பொங்கிற்றேயன்றி அவனுக்கு அறிவு பிறக்கவில்லை. அதன் மேல் இந்திரஜித்து தானே மற்றொரு முறை போருக்கு எழுவதாகச் சொல்லி எழுந்தான். இலக்குவன் இந்திரஜித்தின் தேரையும், சாரதியையும், குதிரையையும் அழித்துவிட்டான். இந்திரஜித்து வானத்தில் ஒளிந்துகொண்டு தன் மாயையால் கல்மழை பெய்விக்கவே, இலக்குவன் அதனைத் தன் அம்புகளால் மாற்றி, அவன் விற்கையையும் அறுத்துத் தள்ளினான். முடிவில் அவனும் தலையற்று வீழ்ந்தான். இவ்வாறு இந்திரஜித்தின் வரலாறு முடிந்தது.

★

19. வெற்றி

மறுமுறை சஞ்சீவி

மகன் இறந்தது கேட்ட இராவணன் கொதித்தெழுந்தான். அவனுடைய மூலப் படைகள் இராமனால் அழிக்கப்பட்டன. பிறகு இராவணனே தேரேறிப் போருக்கெழ, இலக்குவன் அவனை எதிர்த்துக் கடும் போர் புரிந்தான். வீடணன் அவனருகில் நின்று உதவி வந்தான். அவனுடைய பல ஆயுதங்களும் தோற்றன. பிறகு அவன் தான் மயனிடமிருந்து பெற்ற கொடிய வேலைத் திரித்து வீடணன் மீது வீசினான். அது பெரும் புயலை எழுப்பிக்கொண்டு வேகமாக வந்தது. இலக்குமணனின் அம்புகள் அதனை ஒன்றும் செய்யக்கூடவில்லை. அவன் 'நம்மை அடைக்கலம் புகுந்தவனைக் காப்பதே மேலென்று கருதி முந்திச் சென்றான். அங்கதன் அவ்விருவரையும் தள்ளிக்கொண்டு தான் முந்தினான். அனைவரையும் தள்ளிக்கொண்டு அனுமான் முன்னே சென்று நின்றான். இவையெல்லாம் ஒரு நொடியில் நடந்தேறின. இவ்வாறு ஒருவர் முன் ஒருவர் மயன் வேலை ஏற்க முந்துவதை இலக்குவன் பார்த்து, 'இது தகாது' என்று சொல்லி அனைவர்க்கும் முந்திச் சென்று அக் கொடிய வேலைத் தான் ஏற்று நின்றான். முன்பு இந்திரசித்தின் பிரமாஸ்திரம் பட்டவுடன் நிகழ்ந்த நிகழ்ச்சியே . இப்பொழுதும் நிகழ்ந்தது. சாம்பன் மறுமுறையும் அனுமானை ஓடதி கொண்டு வருமாறு வேண்ட, அவனும்

முன்போலவே சென்று மருந்துடன் திரும்ப இலக்கு வன் உயிர் பெற்றெழுந்தான். இச் சமயத்திலும் இராமன் மாருதியைத் தழுவிக்கொண்டு, "பெரியோய்! உன்னைப் பெற்ற எனக்குக் குறை யாது? இடையூறு செல்லா ஆயுளைப் பெறுவாயாக" என வாழ்த்தினன்.

பின்பு இராவணனுடன் இறுதிப் போர் தொடங்கிற்று. இராவணன் தேரின்மீது ஏறியபோது இமையோர் யாவரும் மயங்கினர்; உலகமெல்லாம் திகைத்தது. அவன், 'இன்று சீதை துயரின் எல்லையைக் காணவேண்டும்; அல்லது மண்டோதரி அத் தொழில் உறவேண்டும்" என்று வஞ்சினம் கூறினன். அவன் தன் வில் நாணியைத் தெறித்து மார்பினைத் தட்டி ஆரவாரிக்க, ஆதிசேஷன்தான் தன் ஆயிரந் தலைகளைக் கிளர்ந்து கொண்டு சீறினனோ என்று அனைவரும் ஐயுற்றனர். இராமபிரானும் தன் அம்புப் புட்டிலை நிரப்பிக்கொண்டு தன் கோதண்டத்துடன் நின்றான். அவனுக்கு உதவுமாறு தேவேந்திரன் ஒரு தேரையும் மாதலியென்ற தேர்ப்பாகனையும் அனுப்ப, இராமன் அதன்மீது ஏறினன்.

போர் தொடங்கிற்று. கருமமும் ஞானமும் போர் புரிவதுபோலும், அவிஞ்சையும் விஞ்சையும் வினையாடல் போலும், பாவமும் தருமமும் மலைவதுபோலும் இராவண இராமன் போர் தோன்றிற்று. இராவணன் சங்கொலி எழுப்பினன்; இராமன்மீது அம்புகளைத் தூவினன்; இருவர் வில்லொலிகளும் வானத்தை நிரப்பின. வானர சேனைகளும் அரக்கர் சேனைகளும் சிதறின. இருவரும் தரையில் போரிட்டனர்; வானத்தில்

போரிட்டனர். இராம இரதத்தின் இடிக்கொடியை இராவணன் அறுத்துத் தள்ளினான். அதனிடத்தில் கருடன் வந்து நின்றான். இராமனுடைய அம்பு இராவணனுடைய வீணைக்கொடியை வீழ்த்தி அவன் கவசத்தையும் ஊடுருவிற்று. இராவணன் தாமதாஸ் திரத்தை ஏவினான்; அதனை இராமன் சிவாஸ்திரத்தால் தடுத்தான். அவன் விடுத்த ஆசுராத்திரத்தை இராமன் ஆக்கினேயாத்திரத்தால் அழித்தான். அவனுடைய மாயாத்திரத்தை காந்தருவாத்திரம் அழித்தது. அரக்கன் தன் மாயையால் பலவகைப் பூதங்களையும் பேய்களையும் தோற்றுவித்தான். இராமன் ஞானத்திரத்தால் அவர்களை ஒழித்தான். அவன் விடுத்த சூலாயுதமும் பயனற்றதாயிற்று. இராமன் இராவணனின் தலைகளை ஒவ்வொன்றாக அறிந்து தள்ள, அவை மீண்டும் மீண்டும் முளைத்தன. அவனுடைய கைகளும் அவ்வாறே வெட்ட வெட்ட முளைத்தன. இராமன் முடிவாகத் தன் பிரமாஸ்திரத்தை எடுத்து மந்திரித்து எய்ய, அது கடிதிற் சென்று இராவணனின் மார்பில் புகுந்து அவ னுயிரைக் குடித்துவிட்டுக் கடலில் மூழ்கி இராமனிடமே திரும்பிவந்தது. இவ்வாறு இராவணப் போர் முடி வுற்றது. அவனுக்குரிய ஈமச்சடங்குகளை வீடணன் செய்துமுடித்து இலங்கைக்கரசனாக முடி சூட்டிக் கொண்டான்.

பின்பு இராமன் அனுமனை நோக்கி, "சீதையின் பால் செய்தியைத் தெரிவிப் பாய்" எனப் பணித்தனன். அவ்வாறே அவன் பலமுறை இராமபிரானின் திருநாமங் களைப் பாடிக் கொண்டே அசோகவனத்தை அடைந்து அவளை வணங்கி, "அன்னையே சுபச் செய்தி கொண்டு

வந்துள்ளேன்" என்று கூறி இராமனுடைய வெற்றியைத் தெரிவித்தான். அச்செய்தியைக் கேட்டுச் சீதை களங்கம் நீங்கிய முழு நிலாப்போல முகம் மலர்ந்தாள். அவளுடம்பு பூரித்தது. அவள் களிப்பு மிகுதியால் பேசமாட்டாதவளானாள். அவள் அனுமனை நோக்கி, "அனும! முன்பு என் சிறை நீக்குவேன் என்ற நீயே இன்று வந்து இவ்வுவகைச் செய்தியையும் கூறினாய். இதற்கு நான் செய்யக் கூடிய கைம்மாறு யாது? என் தலையினால் தொழுவதே தகும். இதைத் தவிர நான் செய்வது ஏதேனுமுண்டோ?" என, அனுமான், "அம்மே! நும்மை இதுகாறும் துன்புறுத்திய இத்தீய அரக்கியரை ஒறுக்க விழைகிறேன்; விடைகொடுக்க" என்றான். அச்சொற்களைக் கேட்ட அரக்கியர் யாவரும் நடுநடுங்கினர். அதனைப் பிராட்டி கண்டு மாருதியை நோக்கி, "ஐய, இவர்கள் குற்றமற்றவர்கள்; அரக்கன் ஏவியதையே இவர்கள் செய்தனர்; இவர்களைக் கோபிப்பதில் நன்மையில்லை" என்று கூறி அவனுடைய வெகுளியை மாற்றினள்.

பிறகு இராமன் சீதையைக் கண்டவுடன், "அந்நியன் வீட்டில் தங்கிய இவள் தன் தூய்மையைக் காட்டினாலன்றி இவளை ஏற்றுக் கொள்ளலாகாது. இவளை நெருப்பில் குளிக்கச் செய்து அழைத்து வருக" என்று இலக்குமணனுக்குக் கட்டளையிட, அவனும் நெருப்பு மூட்டினான். அதனில் அன்னை புகுந்து, 'நான் மறுவிலா மனத்தேன் என்பதை இவ்வங்கி நிரூபிப்பதாக' எனக் கூறிக்கொண்டு, தன் கணவனை மனத்தில் நினைத்து நின்றாள். நெருப்பு அவளை ஓர் ஊறும் செய்யா தொழிந்தது. அச்சமயம் தேவர்களும் தேவவுடலிலிருந்த தயரத

னும் அங்குத் தோன்றி இராமனையும் சீதையையும் புகழ்ந்து சென்றனர்.

அப்பால் இராமன் முதலியோர் புஷ்பக விமானத்தில் ஏறிக் கொண்டு அயோத்தியை நோக்கிச் சென்றனர். போகும் வழியிலுள்ள இடங்களையெல்லாம் இராமன் சீதைக்குக் காட்டிக்கொண்டே சென்றான். இடையில் பரத்துவாஜரின் ஆச்சிரமம் வர, இராமன் முனிவரை வணங்கச் சென்றான். முனிவரும் இராமனை எதிர் கொண்டழைத்து, அவனைத் தழுவி மகிழ்ந்து, அவனுக்கு வேண்டிய வரமளிப்பதாகக் கூறினார். இராமன், "வானரக்கூட்டங்கள் செல்லும் வனங்களெல்லாம் எப்பொழுதும் மழை பொழியவும் காய்கனிகளும் தேனும் நிரம்பச் செழிக்கவும் வரமருள வேண்டுகிறேன்" என்றனன். பரத்துவாஜர் மனமகிழ்ந்து அவ்வாறே அருளி இராமபிரானையும் அவனுடன் வந்தோர்களையும் விருந்துண்ண அழைத்தனர்.

அதற்கு இராமன் இணங்கினான். எனினும் தான் பரதனுக்குக் கூறிய கால எல்லை கடந்து போகுமே என்றஞ்சி, அனுமனைப் பார்த்து, "அன்ப! என் பரதன் பதினாலாம் ஆண்டெல்லை கடந்தும் நான் வரத்தவறுவேனேல் தீப்பாய்ந்து இறந்து விடுவதாகக் கூறியுள்ளான். நீ உடனே அவனிடம் சொல்லி நான் வருவதைத் தெரிவித்து வா" என்று அடையாளமாகத் தன் கணையாழியையும் கொடுத்தனுப்பினான்.

அவ்வண்ணமே அனுமான் காற்றின் வேகமும் பிற்படக்கடிதிற் சென்றான். இதற்குள்ளாக நந்திக் கிராமத்தில் இராமபிரானின் திருவடிகளை அரியாசனத்தில்

இருந்து அதன் பெயரால் அரசியலை நடத்தி வந்த பரதன், இராமன் திரும்பவேண்டிய நாளை எண்ணிக் கொண்டே வந்து, அந் நாள் தவறிவிட்டதால் தான் இனி உயிர் வாழ்தலை விரும்பானாய் நெருப்பில் விழுந் திறக்கத் திட்டமிட்டுக் கொண்டிருந்தான். நெருப்பு கொழுந்துவிட்டெரிந்தது. நகரமாந்தரும், அமைச்சரும், முனிவரும் அழுத கண்ணுடன் நின்றுகொண்டிருந் தனர். பரதன் யார் சொல்லையும் கேளாமல் இறக்கத் துணிந்து, அழுதுகொண்டு நின்றுகொண்டிருந்த தன் தம்பி சத்துருக்கனனை அருகழைத்து அவனை இறுகத் தழுவி, "என் உயிரனையாய்! நீ எனக்கு ஒரு வரம் தர வேண்டுவேன்; சொன்ன நாளில் இராகவன் தோன் றிலன்; இனி நான் ஒரு கணமும் உயிர்வாழேன்; என் சொல்லை மீறாமல் இவ்வரசியலை நீ ஏற்றுக்கொள்வா யாக" என்றனன்.

இதனைக் கேட்ட சத்துருக்கனன் இடி விழுந்த நாகம் போலத் துணுக்குற்று, "அண்ணா! நான் உனக்குச் செய்த பிழை யாது? ஒருவன் தன் தந்தை சொல்லைக் காக்கக் கானகத்துக்குச் சென்றான்; அவனைக் காக்க ஒரு தம்பி அவன் பின்னே போனான்; அவன் வருவ தாகச் சொன்ன நாள் வந்தும் அவன் வராமையால் உயிர்விடத் துணிந்து நின்றான் ஒரு தம்பி. நானும் ஒரு தம்பி; அரசாள நானும் ஒருவன் நிற்கின்றேன். இஃது எத்தனை நேர்மையானது? இராமனுக்குப் பின் பிறந்த நீ அவனுக்குரிய அயோத்தியினுள் புகாமல், இந்தக் கிராமத்தில் தங்கி, அரசவேடத்தையும் கைவிட்டு, அடிமைத் தொழில் பூண்டு நின்றாய். இன்று அவன் வரவில்லையென்று உயிர்விடத் துணிந்தாய்; உனக்

கொத்தது எனக்கும் ஒவ்வாதோ?" என்று கடுத்துக் கூறினன். பரதன் சத்துருக்கனுக்குச் சமாதானம் கூறித் தீயில் பாய எழுந்தனன்.

அச்சமயம், "ஐயன் வந்தனன்; ஆரியன் வந்தனன்" என்று கூவிக்கொண்டே அனுமன் அங்கே வந்து குதித்து, உட்புகுந்து எரிந்துகொண்டிருந்த எரியைக் கரியாக்கினன். அவ்வாறு செய்து அவன் பரதனின் திருவடிகளில் தன் தலையை வைத்து வணங்கி, வாய் புதைத்து, இராமன் சொல்லியனுப்பிய செய்தியைச் சொல்லினன். அச் சொற்களைக் கேட்டும் அடையாள மோதிரத்தைக் கண்டும் யாவரும் ஆனந்தக்கடலில் முழுகினர். அழுத வாயெல்லாம் ஆர்த்தன; அழுத கண்களெல்லாம் ஆனந்தங்கொண்டன; தொங்கின தலைகளெல்லாம் உயர்ந்தன. எல்லோரும் அனுமனை வணங்கினர். பரதன் அடைந்த மகிழ்ச்சி சொல்லத்தக்கதோ?

அவன் அனுமானின் வரலாற்றைக் கேட்டு அக மகிழ்ந்தும், அவனைப் பேருருவம் எடுக்கச் செய்து அதனைக் கண்டு வியந்தும், அவனுக்குப் பலவகை அணிகலன்களைப் பரிசாகக் கொடுத்தனன்.

பின்பு இராமபிரானுக்குப் பட்டாபிஷேகம் செய்ய எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டன. நகரம் முழுமையும் எழுந்து இராமனை எதிர்கொண்டழைத்துச் சென்றது. அனுமானும் பரதனுடன் சென்று இராமனை வரவேற்றனன். நல்லதோர் ஓரையில் பதினெண் நாட்டு மன்னரும் இராமனையும் சீதையையும் சூழ்ந்திருக்க, வானரர்களும் மானிடரும் வாழ்த்தொலிக்க, வானவர் மலர்மாரி பொழிய, மன்னர்களும் தேவர்களும் அபிஷேகம் செய்ய, வசிட்டமுனி

இராமனுக்கு முடி சூட்டினர். "இறையவன் இராமன் வாழி! அரும்புகழனுமன் வாழி!" என்று அனைவரும் வாழ்த்தினர்.

முடிசூடிய பின் ஸ்ரீராமன் அத்தாணி மண்டபத்தில் சீதாபிராட்டி அருகில் வீற்றிருக்க. மூவர் தம்பியரும் அருகில் நின்று பணிபுரிய, முனிவர் முதலியோர் வாழ்த்த, அமைச்சர் முதலியோர் ஏவல் கேட்க இராமன் அரியாசனத்தில் அமர்ந்து அங்கு முடிசூட்டு விழாவுக்கு வந்திருந்த அனைவருக்கும் தக்க பரிசுகளை யளித்து விடை கொடுத்தனுப்பினான்.

முடிவில் அனுமனுடைய முறை வந்ததும் அவனை இராமன் முகமலர்ந்து நோக்கி, "ஐயனே! உதவி செய்வதில் உன்னை ஒத்தவர் யாவர்? நீ எனக்கும் பிராட்டிக்கும் தம்பியர்க்கும் உயிரைக் கொடுத்த வள்ளல் அல்லையோ? உனக்கு நான் என் நன்றியை எவ்வாறு காட்டுவேன்? இதுவே நான் உனக்குச் செய்யக்கூடியது" என்று தன் ஆசனத்தை விட்டெழுந்து அவனைத் தன் மார்போடு இறுக அணைத்துக் கொண்டான்; பிறகு அவனுக்கு விலையுயர்ந்த மணியாரங்களையும் ஆடைகளையும் அளித்தான். பிறகு இராமன் பிராட்டியை நோக்கி, 'உனக்கு உகந்த வற்றையும் இவனுக்குக் கொடுப்பாயாக' என்று கூற, அவள் மனமுவந்து முன்பொரு காலத்தில் கலைமகள் தனக்குக் கொடுத்த முத்தாரத்தை எடுத்துத் தனக்குப் பேருதவி புரிந்த மாருதியிடம் இனிய முகத்தோடு ஈந்தாள். இராமபிரான் கட்டளையின்படி அனுமன் தன் மன்னனுடன் கிட்கிந்தைக்கு ஏகினும் அடிக்கடி அயோத்திக்கு வந்து இராம சேவையில் ஈடுபட்டிருந்தான்.

20. பீமனும் அனுமானும்

காலங் கடந்தது. யுகங்கள் கழிந்தன. எனினும், பிரமதேவன், இராமபிரான், சீதாபிராட்டி ஆகியோரால் முறை முறையே வாழ்த்துப் பெற்ற அனுமான் என்றும் வாழ்பவனே ஆனான். அவனுக்கு மரணமில்லை யென்ற தன்மை நிலைத்தது. மகாபாரத காலத்திலே கூட அவனுடைய வரலாறு கூறப்படுகிறது. அதனையும் இங்கே சொல்லி இக்கதையை முடிப்போம்.

ஒரு முறை பாண்டவர்கள் இமயமலைச் சாரலில் நரநாராயணாச்சிரமம்என்ற இடத்தில்தங்கியிருந்தார்கள். அவர்களுடன் திரௌபதியும் இருந்தாள். அங்கே மனதைக் கவரும் அழகிய இயற்கைக் காட்சிகள் நிறைந்திருந்தன. மரங்கள் செறிந்த நிழலைத் தந்தன. அவற்றிலுள்ள மலர்களும் கனிகளும் கண்களுக்குச் சிறந்த மகிழ்ச்சியை அளித்தன. பல நிறப் பறவைகள் அச்சமின்றி அங்கே தங்கித் தம் இனிய இசைகளால் வானத்தைப் போர்த்தன. அவ்வாச்சிரமத்தில் பல முனிவர்கள் இயற்கையோடு இயற்கையாய் ஒன்றியிருந்து அரிய தவங்களைப் புரிந்திருந்தனர். தரை முட்களில்லாத பசும் புல்லால் மூடப்பட்டிருந்தது. ஆச்சிரமங்களில் தவசிகள் தத்தம் கருமங்களில் ஈடுபட்டிருந்தனர். விலங்குகள் ஒன்றோடொன்று மிகுந்த நட்புணர்ச்சியுடன் மனமொத்து வாழ்ந்தன.

அத்தகைய இனிய இடத்தைக் கண்டு பாண்டவர்கள்பரவசமுற்றனர். சக்கரவர்த்தியும் அறிவில் நிரம்பிய

வருமான யுதிஷ்டிரரைக் கண்டு அவ்வாச்சிரம முனிவர்கள் மிகவும் மகிழ்ந்து, அவரையும் அவருடைய தம்பிமார்களையும், மிகுந்த அன்புடன் வரவேற்றனர். அப்பெரியோர்களுடன் சில நாட்களாவது கூடி வாழவேண்டுமென்று யுதிஷ்டிரர் நினைத்தார். அவர் தங்குதற்குரிய அழகான விடுதி யொன்று சமைக்கப்பட்டது. திரௌபதி அங்குள்ள மலர்ச் சோலைகளைக் கண்டு அகமகிழ்ந்தாள். அவள் தன் பகற்பொழுதையெல்லாம் ஆச்சிரமங்களிலுள்ள பெண்டிரோடு கூடிச் சோலைகளிலும், நீர் நிலைகளிலும் கழித்தாள். அங்கு வீசும் குளிர்ந்த காற்று அவளுடைய உடலுக்கும் உள்ளத்துக்கும் பேரின்பத்தைக் கொடுத்தது. ஒவ்வொரு பொழுது அவள் தன்னையே மறந்து இயற்கையோடு இயற்கையாக ஒன்றி நின்றாள்.

ஒரு நாள் காற்றில் ஓர் அரிய தாமரை மலர் மிதந்து வந்து விழுந்தது. அஃது ஆயிரம் இதழ்களுடன் பொருந்திக் கதிரவனைப் போல் ஒளி வீசிற்று. அதன் மணம் உலகத்தில் வேறெங்கும் நுகரப்படாததாயிருந்தது. அதன் அழகையும் வாசனையையும் கண்டு திரௌபதி பெருவியப்புற்றுப் பீமனிடம் சென்று, "ஐயா! இம்மலரைப் பாருங்கள்; இதனைக் கண்டு என் மனம் குதூகலிக்கின்றது; இதைப் போலப் பல மலர்களையும் பெற்று ஆச்சிரமத்திலுள்ள என் தோழியர்க்குக் கொடுக்க விரும்புகிறேன்; என் விருப்பத்தை நிறைவேற்றித்தர வேண்டுகிறேன்" என்று வணங்கினாள்.

அவ்வாறே செய்வதாகப் பீமன் அவளுக்குக் கூறித் தன் வில்லையும் அம்புகளையும் எடுத்துக்கொண்டு காற்று

வரும் திசையிலே வடகிழக்கே நோக்கிப் புறப்பட்டான். அவன் சென்ற வழியில் பல குன்றுகளும் காடுகளும் இருந்தன. குன்றுகள் நிலமகளின் தூக்கிய கைகளோ எனத் தோன்றின. அவற்றின்மீது படர்ந்திருந்த செடிகளும் கொடிகளும் அக்கைகளுக்கிட்ட அங்கிகள் போலக் காணப்பட்டன; மரங்களும், மலர்களும், பறவைகளும் அவள் இட்டுக்கொண்டிருந்த அணிகளோ எனத் தோன்றின. வழியில் கந்தமாதனம் என்ற பெரிய மலையொன்று கிடந்தது. அதன் சரிவுகளில் பல வகையான குயில்கள் கூவின; வண்டுகள் முரன்றன; வழி நெடுக மகரந்தம் பரந்து கிடந்தது; நறுமணம் எங்கும் வீசிற்று. அம்மலையினின்று வீசிய மாருதம் பீமனுக்குத் தன் தந்தையின் தொடுகை போலத் தோன்றிற்று. அவன் மருதியின் மகனல்லனோ? அவன் மயிர்க்கூச்செறிந்தான்; பலவகை நிறமுள்ள தாதுக்கள் அவன்மீது படிந்ததால் அவனும் பலநிறம் பூசப்பட்டவனானான். மேகங்கள் ஒரு புறம் படிந்திருந்த தோற்றம் அம்மலைக்கு இறகுகள் முளைத்துள்ளனவோ என்று எண்ணச் செய்தது. அருவிகள் அம்மலைக்கு மாலைகள் இட்டனபோலக் காணப்பட்டன. அருவிகள் குகைகளுள் நுழைந்து பாயும் ஒலி அரம்பையர் நடிக்கும்போது அவர்களுடைய சலங்கை யொலியை நிகர்த்தது.

அவன் தான் வந்த காரணத்தை மறக்கவில்லை. ஸௌகந்தி என்னும் பெயரையுடைய தாமரை மலரை அவன் எங்கும் நாடினான். அவனுடைய அழகிய கண்களையும், பொன்னின் நிறத்தை நிகர்த்த மேனியையும் சிங்கத்தின் உடலைப் போன்ற உடலையும், மதயானையின் வேகத்தை யொத்த நடையையும் கண்டு மான் கூட்டங்

கள் வெருண்டு ஓடின. தன் அண்ணனாகிய யுதிஷ்டிரனுக்கும் கூறாமல் வழி நடந்து காலம் போக்க நேர்ந்ததை எண்ணி அவன் கவன்றான்; தான் மலர்களுடன் திரும்பி வருவதை எதிர்நோக்கி ஆவலுடன் நிற்கும் தன் மனைவியை எண்ணி ஏங்கினான். அவன் அங்கேயுள்ள பெருங் காடுகளை யெல்லாம் அழித்துக் கொண்டு சென்றான். அவனுடைய அடிகள் அழுந்தினமையால் கற்பாறைகள் நொறுங்கின. அவன் மூச்சுக் காற்றில் பல மரங்கள் பெயர்ந்தன. அவன் தான் வந்த காரியம் முற்றுப் பெறுமையை எண்ணி ஒரு பயங்கரமான பேரொலியைச் செய்தான். அவ்வொலியைக் கேட்டு முழைகளிற் பதுங்கிக் கிடந்த சிங்கங்களும், புலிகளும், யானைகளும் அஞ்சியோடின.

அங்கு வழியில் ஒரு பெரிய வாழை வனமொன்று இருந்தது. அதனிலே ஆஞ்சனேயன் தன் முதிர்ந்த பிராயத்தில் தவம் புரிந்துகொண்டிருந்தான். இராமாயணக் காலம் முதல் அவன் அங்கேயே தங்கி இராமநாமத்தைச் சொல்லிக் கொண்டிருந்தான். அவ்வனத்தை விட்டு அவன் எங்கும் சென்றதில்லை. அவனிருந்த சோலையில் எவரும் புகுவதில்லை; விலங்குகளும் பறவைகளும் அங்கே செல்ல அஞ்சின; அன்று பீமன் செய்த பேரொலியைக் கேட்டும் காட்டு விலங்குகளெல்லாம் அஞ்சி யோடியதைக் கண்டும், அனுமான் தன் கூர்ந்த அறிவினால் வருபவன் தன் தம்பியான பீமனே என்றறிந்து ஒரு விளையாடல் செய்ய விரும்பினான். அப்பொழுது அவன் துயில் கலைந்தவன் போல் ஒரு பெரிய கொட்டாவி விட்டான். பின்பு அவன் சோம்பல் முறிப்பவன் போல்

தன் வாலைச் சுழற்றித் தரையில் ஓங்கி அடித்தான். அந்த ஒலி மலைக் குகைகளிலெல்லாம் புகுந்து பல எதிரொலிகளை உண்டாக்கிற்று. மலையின் பல கொடு முடிகள் அசைந்து வீழ்ந்தன. அவ்வொலியைப் பீமனும் கேட்டுத் திடுக்கிட்டான். ஆனால் அவன் சிறிதும் அஞ்சாமல் அஃது உண்டான இடத்தை நோக்கி நடக்கலானான்.

அங்கே ஒரு பெரிய கற்பாறையின்மீது மின்னல் போல ஒளி வீசிற்று! அனுமன் ஒரோரு சமயம் பற்களை நொறுக்கிக் கொண்டு உறுமுவதுபோலச் செய்தான்; அவ்வொலி இடியொலி போலக் கேட்டது. அவன் ஒரு புறமிருந்து மறுபுறம் அசையும்போது வானத்தில் மின்னற் கொடிகள் புரள்வனபோலத் தோன்றிற்று. அவன் தன் தலையைக் கைகளின்மீது தொங்கவிட்டுக் கொண்டிருந்தான்; உடல் மிகப் பருமனுள்ளதாக இருந்தது; தோள்களின் சுமையைத் தாங்கமாட்டாமல் இடை மெலிந்து காட்டிற்று; மயிரடர்ந்த வால் மலைப் பாம்புபோல் நீண்டு கிடந்தது.

அத்தகைய அனுமானைப் பீமன் கண்டான்; அனுமானுடைய முகத்தை நோக்கினான்; அவன் உதடுகள் குறுகியிருந்தன; நா, முகம், காது ஆகியவை சிவந்திருந்தன; புருவங்கள் அசைந்து கொண்டிருந்தன; பற்கள் சூரியத் துண்டங்கள்போல் ஒளிவீசின; முகம் முழுமையும் வெள்ளிய மயிர் மூடியிருந்தது. அத்தகைய பெரியதும் வியக்கத்தக்கதுமான அவ்வுருவத்தைப் பீமன் கண்டு அஞ்சாமல் அதனருகில் சென்று உரக்க ஓர் ஒலியை எழுப்பினான். அதைக் கேட்டு அவ்வனத்தில் வாழ்ந்த பறவைகளெல்லாம் அஞ்சி ஓடின.

அனுமான் பீமனைப் பார்த்தான். அவன் யாரென்பது அனுமானுக்குத் தெரியும். இருந்தும் அவனை நோக்கி, 'ஐயா, நான் நோயுள்ளவன்; உறங்கிக்கொண்டிருக்கிறேன்; ஏன் என்னை இங்கு வந்து எழுப்பினாய்? மனிதர்கள் அறிவுள்ளவர்கள் என்பார்களே! என் போன்ற விலங்குகளிடம் அவர்களுக்குக் கருணையன்றோ இருத்தல் வேண்டும்? உன் பேரொலியால் எத்தனை பறவைகளும் விலங்குகளும் அஞ்சுகின்றன பார். நீ நீதியை அறியாதவனென்றெண்ணுகிறேன் நீ யார்? இங்கே எதற்காக வந்தாய்? எங்களுக்கு நீ ஊறு விளைக்கக் காரணம் யாது? இந்த இடம் மனிதர்கள் வரக்கூடிய இடமன்று; இது தேவலோகத்திற்குச் செல்லும் வழி, உன்னிடம் அன்பினால் நான் உனக்குச் சொல்லுகிறேன், வேண்டுமானால் இங்குள்ள இனிய கிழங்குகளையும் பழங்களையும் தின்றுவிட்டுச் செல்; இதற்கப்பால் நீ செல்லத் துணிவாயானால் பேரிடர் விளையும்" என்று கூறினான்.

இச்சொற்களைக் கேட்டுப் பீமன் வியப்படைந்து, "ஐய, தாங்கள் யார்? குரு பரம்பரையையும், சந்திர வம்சத்தையும் சேர்ந்த க்ஷத்திரியன் யான். வாயுவின் அருளால் குந்திதேவியினிடம் தோன்றியவன்; பாண்டவன்; பீமன் என்னும் பெயரினன்" என்றான். வாயுவின் புதல்வனான மாருதி பீமனைப் பார்த்துப் புன்னகை புரிந்து, "பாண்டவ புத்திரனே, நான் ஒரு குரங்கு. இந்த இடம் என்னுடையது; இதன் வழியாக நீ செல்ல நான் இடந்தரமாட்டேன்; வீணில் வம்பு செய்யாதே; திரும்பிச் செல்" என்றனன். பீமனும், "வானரமே! எது நேர்ந்தாலும் நான் அஞ்சேன்; இவ்

வழியே நான் சென்றே தீருவேன்; வழிவிடு; வீணே நீயும் என்னால் துன்புறாதே" என்றனன்.

அதற்கு ஆஞ்சனேயன் "அப்பனே! நான் கிழவன்; என்னால் எழக்கூட முடியவில்லை; வேண்டுமானால் என்னைத் தாண்டிச் செல்" என்றனன். அதற்குப் பீமன் "உன்னைத் தாண்டுதல் தகாது; உன்னைப் பார்த்தால், நீ சிறந்த . ஞானிபோல் தோன்றுகிறாய்; ஞானிகளைத் தாண்டுதல் தகாது. நீ வெறும் குரங்காய் இருந்தால், அனுமார் கடலைத் தாண்டியதுபோல் நான் உன்னைத் தாண்டிக் குதிப்பேன்" என்றான். அனுமான், "பீம' கடலைத் தாண்டிய அந்த அனுமான் யாவன்?" என்று கேட்க, "திருதயுகத்தில் தசரத புத்திரனான இராமனின் மனைவியை இலங்கை அரசன் இராவணன் எடுத்துச் செல்ல, அந்த இராமனுக்குத் தூதுவனாய்ச் சென்று அகன்ற கடலை ஒரு தாண்டலில் அனுமார் தாண்டினார். அவரும் வாயு புத்திரரானதால் எனக்குத் தமையனாராவர். அவருடைய ஆற்றலை நீ எப்படி அறிவாய்? அவருடைய தம்பியான நானும் அவரைப் போன்ற ஆண்மையுடையவன்; என்னை இகழாமல் எனக்கு இடம் விட்டு அகன்று செல்; இல்லாவிடில் உன்னைக் கூற்றுவனுலகுக்கு அனுப்புவேன்" என்றான்.

அச்சொற்களைக்கேட்ட ஆஞ்சனேயன் அஞ்சினவன் போல் நடித்து, "ஆற்றல் மிகுந்தவனே! என்னால் எழக்கூடவில்லை; என் வாலை நீயே புரட்டி அப்பால் போட்டுவிட்டு நீ அவ்வழியே செல்" என்றனன்.

பீமன், "இக்குரங்கை வாலைப் பிடித்திழுத்து இப்பொழுதே யமலோகத்துக்கு அனுப்பிவிடுவேன்" என்று

தனக்குள்ளே நினைத்துக்கொண்டு மிகுந்த இகழ்ச்சியுடன் அவ்வாலைத் தன் காலால் புரட்டப் பார்த்தான். பிறகு குனிந்து கைகளால் தூக்க முயன்றான். அவன் முயற்சிகளுள் ஒன்றும் பலிக்கவில்லை. அவன் விழிகள் பிதுங்கின; பற்கள் நொறுங்கின; புருவங்கள் நெறிந்தன; முகம் சோர்ந்தது; உடல் வியர்த்தது. அவன் எவ்வளவு முயன்றும் அவ்வாலை அவனால் அசைக்கவும் முடியவில்லை. அவன் வெட்கத்தால் முகங்கவிழ்ந்து அனுமான் முன் சென்று அவனை வணங்கி, "தேவரீர். நான் அறியாமற் செய்த பிழையை மன்னிக்க வேண்டும். நீர் யார்? தேவரா? சித்தரா? உம் உருவத்தைக் கண்டு நான் ஏமாந்தேன். என்னிடம் அன்பு கொண்டு தாங்கள் உண்மையை அறிவிக்க வேண்டுகிறேன்" என்று கூறி வணங்கினான்.

அனுமான் புன்னகை கொண்டு, "பாண்டவனே! என்னை அறிவதில் நீ விருப்பமுள்ளவனாயின் கேள். நான் அஞ்சனை என்ற வானர மாதினிடம் வாயுக் கடவுளின் அருளால் பிறந்தவன்; அனுமான் என்ற பெயரினன்; நான் வானரத் தலைவனான சுக்கிரீவனை அடுத்திருந்தேன். இராமபிரானுக்கும் சுக்கிரீவனுக்கும் நட்புச் செய்து வைத்து, சீதையை இலங்கையில் தேடிக் கண்டுபிடித்து இராம கைங்கரியத்தில் ஈடுபட்டிருந்தேன். இராமபிரான் இராவணனைக் கொன்றபின் அயோத்தியில் நெடுங்காலம் அரசுபுரிந்தார். அந்தக் காலம் முதல் நான் அவனருளால் இந்த இடத்திலேயே தங்கி அவனுடைய பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். பீம! நீ இவ்வழியில் செல்வாயானால் உனக்கு இன்னல் விளைவது திண்ணமாகையால், உன்னைத்

தடுப்பதற்காகவே இங்கே உன்னை வழி மறித்தேன். இவ்வழி மானிடர்க்குரியதன்று. நீ நாடி வந்த குளமும் அருகிலே இருக்கிறது" என்றனன்.

இச் சொற்களைக் கேட்ட பீமன் அளக்கவொண்ணு மகிழ்ச்சி பெற்றுத் தன் தமையனுன அனுமானைப் பல முறை வணங்கி வாழ்த்தினன். பிறகு அவனை நோக்கி, "அண்ணு! தங்களைக் கண்டதால் தூய்மையடைந்தேன்! நான் பெற்ற இப்பேறு யார் பெறுவர்! ஐயனே! எனக்கு ஒரு விருப்பம் உளது; தாங்கள் கடலைத் தாண்டிய போது எடுத்த பேருருவத்தை நான் காணவிரும்பு கிறேன்; அருள் புரிக" என்றனன்.

அதற்கு மாருதி "அப்பனே! அவ்வாறு இப்பொழுது என்ஞல் செய்யவும் இயலாது; அப்படிச் செய்தாலும் உன்னுற் காண முடியாது. கிருதயுகம், திரேதாயுதம், துவாபரயுகம், கலியுகம் என்ற கால வரையறைகளுள் ஒன்றன் இயல்பு மற்றொன்றுக்கு இல்லை; வரவரப் பொருள்களின் ஆற்றல் மாறிக்கொண்டு வருகிறது; இராமபிரான் ஆண்ட கிருதயுகத்தில் எனக் கிருந்த ஆற்றல் இன்று இல்லை. இக்காலத்துக்குத் தக்கவாறு நான் இருக்கிறேன், என்னை வற்புறுத் தாதே" என்றனன்.

பீமன் பிடிவாதமாக இருந்தான். அவனுடைய அன்பு நிறைந்த வேண்டுகோளை அனுமனுல் தடுக்க முடியவில்லை. அவன் தன் பெரிய உருவத்தை எடுக்கத் தொடங்கினுன். அவன் உடலானது உயரத்தாலும் அகலத்தாலும் காடுகளையெல்லாம் மூடிக்கொண்டு வானத்தையும் வளைத்தது. அவனுடைய சிவந்த கண் களையும், கூரிய பறகளையும், நீண்ட வாலையும் கண்ட

பீமன் அஞ்சினன். பல கதிரவர்கள் ஒருங்கே ஒளி வீசுவது போல் விளங்கிய அனுமனுடைய திருமேனியைக் காணமுடியாமல் அவன் தன் கண்களை மூடிக் கொண்டான். அப்பொழுது அனுமான், "வீரனே! இதை விடப் பெரிய உருவத்தை நீ காணமுடியாது; ஆகவே, இதனோடு நிற்கிறேன்" என்றான்.

பீமன் தன் கைகளைக் கூப்பிக்கொண்டு "வள்ளலே! உம்முடைய தெய்வ உருவைக் கண்டுவிட்டேன்; அதனைச் சுருக்கிக் கொள்வீராக" என்று வணங்கினன். அனுமான் அவ்வாறே தன் உடலைச் சுருக்கிக் கொண்டு பீமனை நோக்கி, "பாரத! நீ விரும்பியதைப் பார்த்து விட்டாய். நீ வந்த காரியத்தை முடித்துக்கொண்டு செல்லவும் வழி கூறுகின்றேன். ஸௌகந்தி வனத்துக்குச் செல்லும் வழி அருகே இருக்கிறது. அங்கே குபேரனுக்குச் சொந்தமான சோலையொன்றுண்டு; அதை அரக்கர்களும் அரக்கியர்களும் காவல் புரிந்து வருகின்றனர். அவர்களிடம் நீ ஒன்றும் குறும்பு செய்துவிடாதே. எவர் எவர் இடத்தில் எவ்வெவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதை அறிந்து செய்வதே அறிஞனின் இலக்கணம்; நம் கடமையை உணர்பவர்களும் பெரியோர்களை அடுத்து நடப்பவர்களுமே அறத்தை அறிவார்கள்; அறம் ஒழுக்கத்தினின்று உண்டாகிறது; அறத்தினின்று வேதம் உண்டாகிறது; வேதத்தினின்று வேள்விகள் பிறக்கின்றன; வேள்விகளால் தேவர்கள் நிலைநிறுத்தப் படுகின்றனர்; மனிதர்கள் நீதிகளால் நிலைநிறுத்தப்படுகின்றனர். ஆகவே நீ உன் கடமையையும் ஒழுக்கத்தையும் உணர்ந்து நடப்பாயாக. உனக்கு நலம் உண்டாகுக" என்று கூறினன்,

பின்பு அவன் பீமனைத் தழுவிக்கொண்டு, "வீரா. நீ எக்காலத்தில் வேண்டுமானாலும் என்னை நினைக்கலாம்; உனக்கு எப்பொழுதும் நான் நன்மையே செய்வேன்! நீ போரில் பேரொலியை எழுப்பும்போது அவ்வொலி யுடன் என் ஒலியையும் கூட்டி மாற்றாரைத் திடுக்கிடச் செய்வேன்; அருச்சுனனுடைய கொடியில் நான் விளங் கிக் கொண்டு உங்களுக்கு வெற்றியை யளிப்பேன்" என்று கூறி அவன் சௌகந்தி மலரைப் பறித்தற்குறிய் வழிகளையும் சொல்லிக்கொடுத்தான்.

பீமனும் அவ்வழியே சென்று அம்மலர்களிருந்த இடத்தை அணுகினான். அங்கும் அவனுக்குப் பல இன்னல்கள் உண்டாயின. அவற்றை அவன் கடந்து குபேரனுடைய நட்பைப் பெற்றுத் தான் கருதி வந்த காரியத்தை முடித்துக் கொண்டு திரௌபதியிடம் திரும்பினான்.

ஆஞ்சனேயர் என்றும் சிரஞ்சீவியாய் வாழ்ந்து வருகின்றனர் அவரை நினைத்துவணங்குகிறவரை அவர் காப்பாற்றி வருகின்றார். உண்மைத் தொண்டு, பக்தி, அடக்கம், மரியாதை, நேர்மை, நல்லுணர்ச்சி, நீதி யுடைமை, தூய்மை, பிரமச்சரியம் ஆகிய பல நற்பண்பு களுக்கெல்லாம் எடுத்துகாட்டாகவும், உடல் ஆற்றல், அறிவுடைமை, சொல்வன்மை, காலத்தினாற் செய்யும் நன்றியுடைமை, அண்டினவரைக் காத்தல் போன்ற உயர்ப்பண்புகளுக்கெல்லாம் மேற்கோளாகவும் விளங் கும் அப்பெருமான் நம்மவர் யாவருக்கும் இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டும் பேரொளியாய் என்றும் விளங்கி வருவாராக.

சுபம்



Approved by the T. B. C. Madras for class use
Non-detailed study for Higher Forms Vide Fort St.
George Gazette, Part 1-B Page No. 120 Dated 19-5-54